குண்டூசி

டிஸம்பர்....எட்டு அணா

பார்க்கப் பார்க்கத்-
தெவிட்டாத சித்திரம்..
ஜெமினியின்-
அபூர்வ
சகோதரர்கள்
இப்பொழுது சென்னை பிரபாத், வெலிங்டன்
இரு தியேட்டர்களிலும், மற்றும்
இந்தியா முழுவதும்
நடை பெறுகிறது..

JAN 1950
MADRAS

ஸ்தாபிதம் 1920

P. V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF
TRADE MARK

தந்தி: நஸ்யம்
மதருஸ்

உலகமெங்கும் புகழ்பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

நெ. 1 எக்ஸ்ட்ரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி

அரக்கோணம் & மதருஸ்.

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

உங்களுக்குத் தேவையான எல்லாவித ஜவுளிகளுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்

MEERANS

மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னட்டிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில் ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள்

இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

மற்றும் ட்விட்கள், உல்லன், வெளி நாட்டு ஜவுளிகள் முதலிய எல்லாம் கைவசமுள்ளன.

எஸ். மீரா சாகிப்

....அண்ட் பிரதர்ஸ்....

38, ஈவ்னிங் பஸார் ரோடு & 19, கிடங்கு தெரு, சென்னை.

134127.

இந்த ஊசியில்

டிஸம்பர் 1949. பட்டை 3. ஊசி 3.

—::—

ஒரே தணிக்கை போர்டு	...	தலையங்கம்	5
பரஸ்பரம்	...	...	6
உள்ளது உள்ளபடி	...	''ஜடாயு''	7
டில்லியில் ''நிஷான்''	...	படங்கள்	9
நவாப் எம். கே. ராதா	...	வாழ்க்கை வர்ணனை	10
நவாப் எம். கே. ராதா	...	ஆர்ட் படம்	17
டி. ஆர். ராஜகுமாரி	...	வர்ணப் படம்	18
நிர்தோஷி	...	ஜி. சதாசிவம்	19
குண்டுசியைக் கேளுங்கள்	..	பதில்கள்	23
செய்திப் படங்கள்	...	படங்கள்	31
துனிப்புல்	...	''வெட்டுக்கிளி''	39
பொதுஜனம் பேசுகிறர்	...	நேயர் கடிதங்கள்	42
அபிநயம்	...	அ. ரா. கிருஷ்ணமூர்த்தி	47
ஏ. ஆர். சகுந்தலா	..	ஆர்ட் படம்	51
''பொன்முடி''	...	ஆர்ட் படம்	52
குடந்தையில் கோலாகலம்	...	செய்தி	53
இது செய்தி	...	பட உலகச் செய்திகள்	55
பிரம்மலோகம்	...	ஸ்டுடியோச் செய்திகள்	61
குண்டுசி டைரி	...	தினக் குறிப்பு	68

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ரூ. 6 வெளிநாடுகள் ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா அணு 8. இலங்கை 50 சதம். வெளிநாடு அணு 12

குறிப்பு :—''குண்டுசி''யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே.

குண்டூசி காரியாலயம்

25 கிடங்குத் தெரு, டெலிபோன் :

சென்னை - 1 4316

நேயர்களுக்கு ஒரு நற்செய்தி!

குண்டூசி
குடியரசு மலர்

★

இந்தியக் குடியரசு 1950ஆம் ஜனவரி மீ 26-ந் தேதி முதல் ஆரம்பமாகிறது. இந்தப் புனித வைபவத்தின் ஞாபகார்த்தமாக, குண்டூசியின் ஜனவரி மாத ஊசி விசேஷ குடியரசு மலராக வெளிவரும்.

நம் தலைவர்களின் அழகிய ஆர்ட் படங்கள், பிரமுகர்களின் விசேஷ அரசியல் கட்டுரைகள், மற்றும் பல விசேஷ அம்சங்கள், இத்துடன் குண்டூசியின் வழக்கமான அம்சங்களும், வர்ணப் படங்களும் இருக்கும். இது குறைந்த விலையில் ஒரு சிறந்த மலர்.

விலை அணா 12

தபாற் செலவு 4 அணா

[ஏஜண்டுகள் 25% கமிஷன் கழித்துக்கொண்டு முன் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.]

குண்டூசி காரியாலயம்

25 கிடங்குத் தெரு :: சென்னை - 1

தமிழ் நாட்டுத் தியாகிகள்

கட்டபொம்மன், குமரன், முத்துவடிவு, சிதம்பரம் பிள்ளை, சிவா, சத்தியமூர்த்தி

போன்ற பல தியாகிகளின் வாழ்க்கை வரலாறுகளைக் கொண்ட புஸ்தகம்.

எழுதியவர்கள் :

மா. பொ. சிவஞான கிராமணியார்
எம். எஸ். சுப்ரமண்ய அய்யர்
தி. நா. சுப்ரமண்யம்

பதிப்பாசிரியர் :

தே. கோ. ரகுநாதன்

உயர்ந்த ஆர்ட் பதிப்பு ரூ. 1-12-0
சாதாரண மலிவுப் பதிப்பு ரூ. 1-4-0
தபால் செலவு அணா 6 தனி
(முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவு கிடையாது.)

விவரங்களுக்கு :

ஸதர்ன் ஸ்தாபனம்

தந்தி : மாமுஜ்
தபால் பெட்டி 1620
டெலிபோன் : 4767

3, தம்புசெட்டி தெரு, சென்னை-1

குண்டூசி

பட்டை-3 ஊசி-3 | ஆசிரியர்: பி. ஆர். எஸ். கோபால் | டிசம்பர் 1949

நிகரற்ற விநியோகமுள்ள | சினிமா மாத வெளியீடு

ஒரே தணிக்கை போர்டு

சினிமா விஷயத்தில் முதன் முதலாய் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தம் தணிக்கை போர்டு விஷயத்திலாகும். தற்போது ஒவ்வொரு மாஹாணத்திற்கும் அந்தந்த மாஹாண சர்க்காரால் ஒவ்வொரு தணிக்கை போர்டு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தணிக்கை செய்வதற்கான விதிகளும், கொள்கையும், முறையும் இவைகளிடைய வித்தியாசப்படுகின்றன. அதன் விளைவாக ஒரு மாஹாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட படத்திற்கு இன்னொரு மாஹாணத்தில் தடை விதிக்கப்படுகிறது.

அவ்வளவு எதற்கு? அந்தந்த மாஹாண தணிக்கை போர்டார்கூட ஒரே விதமாக தணிக்கை செய்வதில்லை. விதி சொல்கிறது; "ஆபாசக் காட்சிகள் கூடாது" என்று. ஆனால் நம் படங்களில் ஆபாசக் காட்சிகள் மலிந்து கிடக்கின்றன வல்லவா? ஒரு படத்தில் "கூடாது" என்று வெட்டப்படும் அதே காட்சி இன்னொரு படத்தில் அநுமதிக்கப்படும்!

தணிக்கை முறை உடனே சீர்படுத்தப்பட வேண்டும் என்று நாம் பல முறை எழுதியிருக்கிறோம். எனவே, இந்தியா பூராவிற்குமாக ஒரே போர்டை அமைப்பதற்கு மத்திய சர்க்கார் முயன்றுவருவது நமக்கு சந்தோஷமளிக்கிறது. அகில இந்திய தணிக்கை போர்டு ஒன்று அமைக்கப்பட்டால், ஆளுக்கொரு நீதியும், மாஹாணத்திற்கு ஒரு கொள்கையுமாய் இருந்து வருவது ஒழிந்து போகும். அதன் மூலம் இந்தியப் படத் தொழிலுக்கு நன்மையே ஏற்படும் என்று கருதுகிறோம்.

அ. இ. தணிக்கை போர்டை டில்லியிலோ பம்பாயிலோ அமைத்துவிட்டு, மற்ற மாஹாணத்தவர்கள் நம் படங்களை தணிக்கை செய்வதற்கு அங்கு எடுத்துச் செல்லும்படிச் செய்வார்களானால் அது விவேகமற்ற காரியமாயிருக்கும். அதற்குப் பதில் மத்ய போர்டின் கிளை ஸ்தாபனங்களை பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் ஏற்படுத்தி, அந்தந்த மாஹாணத்தில் தயாராகும் படங்களை அந்தந்த மாகாணத்திலேயே தணிக்கை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

அகில இந்திய தணிக்கை போர்டு அமைப்பதுடன்கூட தணிக்கை விதிகளையும் சரியானபடி வகுக்க வேண்டும். "இன்னது செய்யலாம், இன்னது கூடாது" என்பதை விதிகள் தெளிவாய்க் கூற வேண்டும். "இந்தியப் படங்களுக்கு ஒரு விதி; மேல் நாட்டுப் படங்களுக்கு ஒரு விதி" என்ற நிலைமையையும் அவர்கள் மாற்றவேண்டும். இந்தியப் படத் தொழிலின் நன்மை தீமைகள் இந்தப்போர்டைப் பொருத்திருப்பதால், நன்கு ஆராய்ந்து இந்த போர்டை அமைக்க வேண்டும் என்று இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பரஸ்பரம்

'இலங்கையில் குண்டூசியின் சாதாரண 'ஊசி' எவ்வளவு விற்பனையாகி வருகிறதோ அவ்வளவு பிரதிகள் தீபாவளி மலரையும் நம் ஏஜண்டு விற்றிருக்கிறார்', என்று எழுதி யிருந்தேன். இதைப் படித்த நம் மலாயா ஏஜண்டு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார். "மலாயாவில் குண்டூசியின் சாதாரண 'ஊசி' எவ்வளவு விற்பனையாகிறதோ அதைவிட நூறு பிரதிகள் அதிகமாகவே மலரை விற்றிருக்கிறோமே. இதை ஏன் நீங்கள் குறிப்பிட மறந்து விட்டீர்கள்?" என்று அவர் கேட்கிறார். சென்ற மாத "பரஸ்பர"த்தை எழுதுவதற்கு முன் நான் குண்டூசியின் விநியோக மானேஜரைக் கலந்து கொள்ளாததால் ஏற்பட்ட தவறு இது. இந்தியா, இலங்கை போலவே மலாயாவிலும் குண்டூசி அமோஹமான ஆதரவுடன் விளங்கி வருகிறது. இதற்குக் காரணம் நம் ஏஜண்டின் உத்ஸாகமான உழைப்பேயாகும்.

*　　*　　*

குண்டூசி கேலண்டர்கள் பளபளவென்ற அசல் ஆர்ட் காகிதத்தில், ஜிலுஜிலுப்பாக அச்சாகி வருகின்றன. "இந்தக் கேலண்டருக்கு எட்டணா விலை வைத்தது மிக மிகக் குறைவு. தாராளமாய் பனிரண்டணா வைத்திருக்கலாம்" என்று அச்சாகும்போது பார்ப்பவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நாங்கள் என்னவோ கேலண்டரை விற்று லாபம் அடைய விரும்பவில்லை. கேலண்டரை எட்டணாவுக்கேதான் விற்கப்போகிறோம். கேலண்டர் எல்லோரும் விரும்பும் வெளியீடாதலால், வாசகர்கள் முன்னேற்பாடு செய்து கொள்ளாமற் போனால் ஏமாற்றமடைய நேரிடும் என்று இப்பொழுதே எச்சரித்து விடுகிறேன். இந்த எச்சரிக்கையை நம் ஏஜண்டுகளும் கவனிக்க வேண்டும். இப்பொழுதே அவர்கள் தங்களுக்குத் தேவையான கேலண்டர்களுக்கு கமிஷன் போக பாக்கித் தொகையை அனுப்பி ஆர்டர் செய்து கொள்ள வேண்டும்.

*　　*　　*

'ஜனவரி மாத குண்டூசி, குடியரசு மலராக வெளிவரும்' என்றுசென்ற மாதமே வெளியிட்டிருந்தேன். இந்தியக் குடியரசு ஆரம்பமாகும் அந்தப் புனித நாளைக் கொண்டாடும் நோக்கத்துடன் இந்த மலர் வெளியிடப்படுகிறது. வழக்கமான நாலு பக்க ஆர்ட் படங்கள், இதர அம்சங்கள் இவைகளுடன்கூட, எட்டுப்பக்கம் தலைவர்களின் ஆர்ட் படங்களும், அதிக பக்கங்களும், விசேஷ அரசியல் கட்டுரைகளும், படங்களும், இம் மலரில் அடங்கியிருக்கும். நேயர்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இதன் விலை பனிரண்டணாவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உங்கள் பிரதிகளுக்கு உங்கள் ஊர் "குண்டூசி" ஏஜண்டுகளிடம் இப்பொழுதே ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். அல்லது எங்களுக்கு ஒரு ரூபாய் மணியார்டர்செய்து தபால்மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த மலர் குண்டூசியின் சந்தாதாரர்கள் அனைவருக்கும் இலவசமாகவே அனுப்பி வைக்கப்படும். ஜனவரி மாதம் 20-ந் தேதிக்குள் நம் காரியாலயத்திற்கு ரூ. 6 அனுப்பி, புதிதாய் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்வோருக்கும் இம் மலர் இனமாய் அனுப்பப்படும்.

—ஆசிரியர்.

நீங்கள் சந்தாதாரராய்
சேர்ந்து விட்டீர்களா?
இல்லையேல்
உடனே சேருங்கள்.

உள்ளது உள்ளபடி

அடிக் குழப்பம்

அடேயப்பா! தென்னாட்டில் இந்த பதினோராயிரம் அடி விஷயம் எவ்வளவு குழப்பத்தை ஏற்படுத்தி யிருக்கிறது என்று பார்த்தால் சிரிப்பே வருகிறது. முதன் முதலில் (யுத்த காலத்தில்) சர்க்கார் இந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தப் போவதாக செய்தியை வெளியிட்டவுடன், தினசரிகள், வாரப் பதிப்புகள், மாதப் பதிப்புகள் ஆகிய எல்லாம் ஒரே முகமாகக் கட்டுப்பாட்டை ஆதரித்து எழுதின. பிரபல ஆங்கில தினசரிப் பத்திரிகை யொன்று கட்டுப்பாட்டை ஆதரித்து ஒரு தலையங்கமே எழுதி விட்டது. இது ஆச்சரியமான விஷயமல்ல; ஆனால், முதல் நாள் கட்டுப்பாட்டைத் தீவிரமாக ஆதரித்த அந்த தினசரி, மறுநாள் அதை வாபஸ் வாங்கிக் கொள்ளும் ரீதியில் ஏதேதோ எழுதி மழுப்பி இன்னொரு தலையங்கத்தை எழுதியதுதான் ஆச்சரியமாகும்.

அதுமுதல் இவ் விஷயத்தில் பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள் இரு பிரிவாயின. ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே "பேனா யுத்தம்" நடந்தது. ஒரு பிரபல வாரப் பத்திரிகையின் ஆசிரியர் இதற்குத் தலைவர்போல விளங்கினார். இந்த தென்னிந்திய பிலிம் சேம்பர் ஸ்தாபனமும் முன் கூறிய ஆங்கில தினசரியைப் போலவே 'ஆதரிப்பதாக'வும், 'எதிர்ப்பதாக'வும்முன்னுக்குப் பின் முரணான இரு தீர்மானங்களை வெளியிட்டது. ஆனால் ஸினி டெக்னீஷியன்களின் சங்கம் மட்டும் நீளக் கட்டுப்பாட்டை திடமாய் ஆதரித்து தீர்மானம் வெளியிட்டது.

பச்சோந்தி ரகம்

நீளக் கட்டுப்பாடு சம்பந்தமான வாதம் கிளம்பியிருப்பது இது மூன்றாம் தடவையாகும். இந்தத் தடவை எதிர்ப்பாளர்களின் கை ஓங்கி நிற்கிறது. முன்பு அடிக் கட்டுப்பாட்டை தீவிரமாய் ஆதரித்தவர்கள்கூட இப்பொழுது (என்ன காரணத்தாலோ!) எதிர்ப்பாளர்களாகி விட்டார்கள். பத்திரிகைகள்கூட அப்படித்தான். பிலிம் சேம்பர், கட்டுப்பாட்டை எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் முன்பு ஆதரவளித்த டெக்னீஷியன்கள் சங்கம் கூட இப்பொழுது கட்டுப்பாட்டை எதிர்ப்பதுதான் ஆச்சரியமா யிருக்கிறது. பச்சோந்தி நிறம்மாறுவதுபோல அடிக் கட்டுப்பாட்டைப்பற்றிய அபிப்பிராயம் மாறுவதற்குக் காரணம் என்னவென்று நீங்கள் கேட்கலாம். அதற்கு கடவுள்தான் பதில் சொல்லவேண்டும்!

ஜடாயு

அதுவும் லஞ்சமே

"சினிமாப் படங்களைப் பார்ப்பவர் பாதிப் பேர்கள்தாம் பணம் கொடுத்துப் பார்க்கிறார்கள்; மற்றப் பாதியினர் இலவச டிக்கெட்கள் மூலமே பார்க்கிறார்கள்" என்று சொன்னால் முற்றிலும் உண்மையே ஆகும். இலவசமாக சினிமாப் பார்ப்பதையே சிலர் தொழிலாகவும் கொண்டிருக்கிறார்கள். ஒரு படம் வெளி வந்தவுடன் யார் மூலம், எப்படி இலவச டிக்கெட் பெறலாம் என்று அவர்கள் திட்டமிட ஆரம்பித்து விடுவார்கள்.

பட முதலாளிகளோ, தியேட்டர்காரர்களோ, தம் சிப்பந்திகளுக்கும், தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும், தாம் பிரதி உபகாரத்தை நாடுபவர்களுக்கும், இலவச டிக்கெட்டுகளைக் கொடுப்பது நியாயமாகும். ஆனால், தங்கள் கடமையைச் செய்ய வேண்டியவர்களான சர்க்கார் அதிகாரிகள் இலவச டிக்கெட் கேட்பது எந்த நியாயத்தில் சேரும்? ஏதோ ஒரு படத்

திற்கு தியேட்டர்காரர் இலவச டிக்கெட் கொடுத்தால், அதோடு தீர்ந்தது என்றிருந்தால் பரவாயில்லை. ஆனல், சர்க்கார் அதிகாரிகளும், அவர்களது குடும்பத்தினரும் சினிமாப் பார்ப்பதெல்லாம் இலவசமாகத்தான். இந்த இலவச வியாபாரம் ஒழிக்கப்பட்டால் சினிமாத் தொழிலுக்கு கோடிக் கணக்கான ரூபாய்கள் லாபமாய் இருக்கும்.

ஏன் கொடுக்கிருர்கள் ?

'தியேட்டர்காரர்களும், பட முதலாளிகளும், சர்க்கார் அதிகாரிகளுக்கு ஏன் இலவச டிக்கெட் கொடுக்கிருர்கள்; மறுத்து விடுவதுதானே?' என்று கேட்கலாம். உண்மையில் அவர்கள் மனமுவந்து கொடுக்கவில்லை. உபத்திரவம் இல்லாமலிருக்கட்டுமே என்பதற்காகவே கொடுக்கிருர்கள். இலவச டிக்கெட் கொடுக்காத படமுதலாளிகளுக்கு, தியேட்டர்களுக்கும் சர்க்கார் அதிகாரிகளால் பல 'தொல்லை'கள் ஏற்படுகின்றன என்பது சந்திக்கு வராத உண்மையாகும். சர்க்கார் அதிகாரிகள் பொது ஜன ஊழியர்கள்; அவர்களது ஊழியத்திற்காக சர்க்கார் சம்பளம் கொடுக்கின்றனர். தாங்கள் செய்ய வேண்டிய கடமையை, அவர்கள் ஏன் தியேட்டர்காரருக்கோ பட முதலாளிக்கோ செய்யும் உபகாரமாய் கருத வேண்டும்? அந்த ஊழியத்திற்காக ஏன் அவர்கள் இலவச டிக்கெட்டுகளை எதிர்பார்க்க வேண்டும்? கொடுக்காதவர்களுக்கு ஏன் கஷ்டங்களை உண்டு பண்ண வேண்டும்?

லஞ்சம் ஒழியுமா ?

லஞ்சத்தைப் பணமாய்க் கொடுத்தாலென்ன? இலவச டிக்கெட்டாய் கொடுத்தாலென்ன? மத்திய மாகாண சர்க்கார், தன் அதிகாரிகள் இலவசமாய் டிக்கெட் பெறுவதை லஞ்சமாய் மதித்து நடவடிக்கை எடுதது வருவதாய் தெரிகிறது. இதுபோல சென்னை சர்க்காரும் ஏன் செய்யக்கூடாது ?

வஸுந்தரா மீது வழக்கு

வாபஸ் பெறப்பட்டது

"நாட்டிய ராணி" படத்தைத் தயாரித்த பாஸ்கர் பிக்சர்ஸார், பிரபல சினிமா நக்ஷத்திரம் வஸுந்தரா தேவி மீது, ஐந்து லக்ஷ ரூபாய் நஷ்டஈடு கோரி, தொடுத்திருந்த வழக்கை சென்னை ஹைகோர்ட்டார் நவம்பர் 30, டிசம்பர் 1, தேதிகளில் விசாரணைசெய்தனர். "நாட்டிய ராணி" படத்திற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட வஸுந்தரா தேவி ஒப்பந்தப்படி நடிக்கவில்லை என்பது வாதியின் தாவா.

இந்த வழக்கு விசாரணை நடந்தபோது, "பிரதிவாதியிடமிருந்து நஷ்டஈடு பெறுவது தம் முக்கிய நோக்கமல்ல வென்றும், அவரைத் தம் படத்தில் நடிக்க வைப்பதே தம் நோக்கமென்றும், ஆதலால் வழக்குத் தொடர்ந்ததற்கு அறிகுறியாக ஒரு சொற்பத் தொகையை வஸுந்தரா நஷ்டஈடாய் கொடுத்தால் தாம் வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டு விடுவதாகவும் பாஸ்கர் பிக்சர்ஸார் சார்பில் கூறப்பட்டது.

"இந்த வழக்கானது தம்மைப் பயமுறுத்திப் பணம் பறிப்பதற்காகவே தொடுக்கப்பட்டுள்ளதென்றும், இதனுல் சினிமா உலகில் தமது புகழ் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றும், ஆதலால், தமக்கு ஏற்பட்டிருக்கும் செலவுத் தொகையை வாதிதான் கொடுக்க வேண்டுமென்றும்" வஸுந்தரா சார்பில் கூறப்பட்டது.

வழக்கை விசாரித்த கனம் நீதிபதி மாக் அவர்கள், "இரு தரப்பினரும் எவ்வித நிபந்தனையும் விதிக்காமல் சமரசம் செய்து கொள்வதே இருதரப்பினருக்கும் நல்லது" என்று கூறினர்.

"சமரசம்" என்ற பதத்தை உபயோகித்தால் அது பொதுஜனங்களுக்கு தவருன அர்த்தத்தை அளிக்குமென்றும், ஆதலால் வாதி வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டால், தம் கக்ஷிக்காரர் செலவு தொகையை வேண்டுமானல் கேட்க மாட்டார் என்றும் வஸுந்தராவின் வக்கீல் கூறினர்.

அதன்பேரில், இருதரப்பினரும் ஒருவர் மீது மற்றவர் கூறிய குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்று விடலாம் என்று நீதிபதி யோசனை கூறினர். அதற்கு இரு கக்ஷியினரும் சம்மதித்து அவ்விதமே செய்தனர். பிறகு இந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டதாக நீதிபதி தெரிவித்தார்.

டில்லியில் "நிஷான்"





மேலே

வடநாட்டில் வெற்றியுடன் நடைபெற்றுவரும் ஜெமினியின் "நிஷான்" படத்தை பாதுகாப்பு மந்திரி பல்தேவ் சிங் பார்த்த போது எடுத்த படம்.

கீழே

இந்திய சேனாதிபதி ஜெனரல் கரியப்பாவும், "நிஷான்" படத்தைப் பார்த்தார். இரு படங்களிலும் காந்திக் குல்லாயுடன் இருப்பவர் ஜெமினி விளம்பர அதிகாரி ஸ்ரீ. வி. கே. என். சாரி.

நாம் மேனாட்டு சினிமாப் படங்களைப் பார்க்கிறோம். அவை உன்னதமாக இருப்பதற்காகப் புகழ்கிறோம். 'இது மாதிரி சிறந்த படங்கள் தமிழில் எப்பொழுது வெளி வருமோ?' என்று ஏங்குகிறோம். 'பால் முனி, ரோனால்ட் கோல்மேன், பிரடரிக் மார்ச், கிரேட்டா கார்போ, நார்மா ஷியரர், இவர்களைப்போல நம் நடிக நடிகைகள் நடிக்க முடியுமா?' என்று ஒரு கேள்வியையும் நாமே கேட்டுக் கொள்ளுகிறோம். மேனாட்டுப் படங்களில் சிறந்தவற்றை நம் நடிக, நடிகைகளில் சிலரும் பார்க்கிறார்கள். அவைகளைப் பார்த்தபின்னர் இவர்களுக்கு உணர்ச்சிப் பெருக்கெடுக்கும். 'அந்த மேல் நாட்டு நடிக, நடிகைகளைப் போல நாமும் நடிக்க வேண்டும்' என்ற ஆசை கூட இவர்களுக்கு ஏற்படுவதுண்டு என்றால் ஆச்சரியப் படுவீர்கள். உதாரணமாக, பிரபல நடிகரான எம். கே. ராதாவை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் மேனாட்





ராதாவும் அவரது தந்தை எம். கந்தசாமி முதலியாரும்

டுப் படங்களில் சிறந்தவற்றை யெல்லாம் ஒன்று விடாமல் பார்த்து வருகிறார். அந்த மேனாட்டு நடிகர்களைப் போல தாமும் நடிக்கவேண்டும் என்ற ஆசை அவர் மனதில் சுடர் விட்டு எரிகிறது.

ஆனால் என்ன பயன்? நம் தமிழ்நாட்டில் எங்கே முதலாவதாக சமூகப் படங்களை அதிகமாகத் தயாரிக்கிறார்கள். அப்படியே தயாரித்தாலும், புதுப்புது மாதிரியான

நவாப்



வாழ்க்கை வர்ணனை

பாத்திரங்களை சிருஷ்டிக்க படாமுதலாளிகள் எங்கே முயற்சிக்கிறார்கள்? திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான கதை! ஒரே மாதிரியான பாட்டு! ஒரே மாதிரியான காதல்! இவைகளை விட்டால் ஒரே மாதிரியான சோகம்! நிலைமை இவ்வாறிருக்கும் போது, தமிழ்ப் படங்களும், நம் நடிக, நடிகைகளும், அவர்களது நடிப்பும் முன்னேறுமல் இருப்பதில் ஆச்சரியமென்ன?

ராதா ஒரு சிறந்த நடிகர். அவரது மனேபிஷ்டமெல்லாம் நிறைய சமூகப் படங்களில் நடித்துப் புகழ்பெறவேண்டுமென்பதே. அதற்கு ஏற்ற முக அழகையும், உருவத் தோற்றத்தையும் கூட அவர் பெற்றிருக்கிறார். இருந்தாலும் ஒரு நடிகர், தாம் 'சமூகப் படங்களில்தான் நடிப்பது' என்று தீர்மானித்துக் கொண்டு விட முடியாத நிலைமை தமிழ் சினிமா உலகில் இருந்து வருகிறது. அதனல்தான் தமது விருப்பத்திற்கு மாருகக் கூட ராதா புராணப் படங்களில் நடிக்கவேண்டியதாகி யிருக்கிறது.

மற்றவர்களை விட ராதாவுக்கு சமூகப் படங்களில் நடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் நிறையக் கிடைத்துள்ளன. எனினும், கண்ணம்மா என் காதலி படத்தில் அவர் நடிக்கும் வரையில் அவருக்குக் கிடைத்த சமூகப் பாத்திரங்களெல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரியே இருந்தன; அவரது நடிப்பும் ஏறக்குறைய ஒரே மாதிரியாய்த் தானிருந்தது. ஆனல், எவ்வளவுக் கெவ்வளவு கடினமான புதுப் பாத்திரங்களைக்

எம்.கே. ராதா...

1. ஞானசௌந்தரி
2. அபூர்வ சகோதரர்கள்
3. சந்திரலேகா
4. கண்ணம்மா என் காதலி
5. கண்ணம்மா என் காதலி

கொடுத்து ராதாவைக் கசக்கிப் பிழிகிறார்களோ, அவ்வளவுக்கு அவரிடமிருந்து உன்னத நடிப்பு வெளிப்படும் என்பதற்கு, அவர் கடைசியாக நடித்திருக்கும் **அபூர்வ சகோதரர்கள்** படம் அத்தாட்சியாய் விளங்குகிறது. 'இவ்வளவு நாள் ராதா இந்த உன்னத நடிப்பையெல்லாம் எங்கே ஒளித்து வைத்துக் கொண்டிருந்தார்?' என்று கேட்கக் கூடத் தோன்றுகிறதல்லவா?

"கலையோ பெரிது; வாழ்வோ சிறிது" என்ற கொள்கை உடையவர் ராதா. அவரிடம் முன்பொருமுறை, "நீங்கள் நடித்த சிறந்த படம் எது?" என்று கேட்டேன். அதற்கு அவர், "அது இனிமேல்தான் தயாரிக்கப்பட வேண்டும்" என்று பதிலளித்தார். இதைக் கேட்டதும் தன்னடக்கம் காரணமாகவே அவர் அப்படிச் சொன்னார் என்று அப்பொழுது நினைத்தேன். ஆனால் இப்பொழுதோ **அபூர்வ சகோதரர்கள்** படத்தைப் பார்த்த பின், அவர் உண்மையாகவேதான் அப்படிச் சொல்லியிருக்கிறார் என்று தீர்மானிக்கிறேன்.

நடிப்புக் கலையில் ராதாவுக்கு இன்றைய நேற்றைய அனுபவமல்ல. பத்து வயதுப் பையனாய் இருந்த சமயம் முதல் இன்று வரை, அவர் சுமார் முப்பது வருஷ காலம் இடைவிடாது நடிப்புக் கலைக்குத் தொண்டாற்றி வருகிறார். அவ்வளவு சிறு வயதிலேயே ராதா ஒரு நடிகனாக மாறியதற்கு சந்தர்ப்பங்களே காரணமாக இருந்திருக்கின்றன.

அவரது தகப்பனார் ஸ்ரீ. எம். கந்த

சாமி முதலியாரே ஒரு அமெச்சூர் நடிகர். அதோடல்லாமல் அவர் நாடக ஆசிரியரும்கூட. அவர் ராதா உள்பட அநேகரை உன்னத நடிகர்களாக்கி வைத்திருக்கிறார். இன்றைய நாடக, சினிமா உலகில் பிரகாசித்து வரும் பிரபல நடிகர்களில் பலரும் ஸ்ரீ. முதலியாரிடம் அந்தக் காலத்தில் நடிப்பில் பயிற்சி பெற்றவர்களே என்பது குறிப்பிடத் தக்கது.

4

கிற்கு மறக்க முடியாத ஒரு சேவையைச் செய்திருக்கிறார். இன்றைய தினம் மேடையில் சமூக நாடகங்கள் சர்வ சாதாரணமாய் நடிக்கப் படுகின்றன என்றால், அதற்கு அஸ்திவாரத்தைப் பலப்படுத்தியவர்களில் முக்கியமானவர் ஸ்ரீ. முதலியாரே. பூராவாய் புராண நாடகங்களே நடிக்கப்பட்டு வந்த அந்தக் காலத்தில் சமூக நாடகங்களைத் தயாரித்து, நடிகர்களைத் தேற்றி, தாமும் கூடவே நடித்து புரட்சியை உண்டு பண்ணியவர் அவர். அந்த சமயம் பிரபலமாய் விளங்கிய பி. சம்பந்த முதலியார், ஜே. ரங்கராஜு, வடுவூர் துரைசாமி ஐயங்கார் ஆகியோரின் சமூக நாவல்களை சமூக நாடகங்களாக மாற்றிக் கொடுத்தார். அந்த

6

ஸ்ரீ. முதலியாருக்கு பள்ளிக்கூடத்தில் படித்து வந்தபோதே நடிப்புக் கலையில் ஆசை ஏற்பட்டது. பள்ளிக்கூட நாடகங்களில் அவர் அடிக்கடி பங்கெடுத்துக்கொள்வது வழக்கம், படிப்பு முடிந்ததும் அவர் ஏதோ ஒரு ஆபீஸில் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். பிறகு அதை விட்டு, ஒரு சர்க்கஸ் கம்பெனியின் மானேஜரானார். ஆனால், அந்த உத்தியோகமும் அவருக்குப் பிடிக்காததால் அதையும் விட்டு விலகி விட்டார். பின்னர் அவர் சென்னை சுகுண விலாஸ சபாவில் ஒரு அங்கத்தினராய்ச் சேர்ந்து, ராவ் பகதூர் பி. சம்பந்த முதலியாருடன்கூட நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார்.

ஸ்ரீ. முதலியார் தமிழ் நாடக உல

நாடகங்களுக்கு நல்ல வசூல் ஏற்படவே, அதைக் கண்ட நாடக முதலாளிகள் அவரைத் தத்தம் கம்பெனிகளுக்கு வரும்படி அழைக்கலாயினர். அவரும் அந்த அழைப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு, பல கம்பெனிகளின் மூலமாய் தமது லக்ஷியத்தில் வெற்றி பெற்றார்.

தகப்பனார் நடிப்பதை பார்த்த ராதாவுக்கு, சிறு பையனாக இருந்த போதே தாமும் நடிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டு விட்டது. அவரது தாயாரான கமலாம்பாள் சங்கீதத்தில் சிக்ஷை பெற்றவர். அவர் பாட ஆரம்பித்தவுடன் பையன் ராதா ஒரு பெட்டியை மிருதங்கமாக வைத்துக்கொண்டு தாளம் தட்ட ஆரம்பித்து விடுவானாம். இப்படியாக நாடகம், சங்கீதம் இரு துறைகளிலும் ராதாவுக்கு இயற்கையான ருசி இருப்பது பெற்றோர்களுக்குத் தெரிந்திருந்தும், அவர்கள் ராதாவைக் கலைத் துறையில் ஈடுபடச் செய்வதற்கு எதனாலோ விரும்பவில்லை. ஆதலால், ராதா பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார்.

ராதாவின் தாய்பாஷை தமிழ். எனினும், அவர் ஒரு தெலுங்குப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டதால் தெலுங்கு பாஷையிலேயே படிப்பை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. அப்பள்ளிக்கூடத்தில் அவர் ஐந்தாம் வகுப்பு வரையில் படித்துவிட்டு, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூலில்

6. துளசிதாஸ்

7. ராஜா கோபிசந்த்

8. தாஸி அபரஞ்சி

9. பிரேமபந்தன்

10. மாயாமச்சீந்திரா

11. துளசிதாஸ்

12. மாயாமச்சீந்திரா

13. அனாதைப்பெண்

14. சமூகத்தொண்டு





10

12

13

சேர்ந்தார். அங்கு அவர் மூன்றாவது பாரம் வரையில் படித்தார்.

ராதா பள்ளியில் சேர்க்கப்பட்ட பின்னர் கூட அவரது பிரியம் நாடகக் கலையை விட்டேகிவிட வில்லை. படிப்புக்குப் பதில் நாடகக் கலையிலேயே ராதாவின் கவனம் சென்று வருவதை அவரது தந்தை கவனித்தார். பையனுக்கு நடிப்புக் கலையில் எவ்வளவு உத்ஸாகம் இருக்கிறதென்பதை பரீக்ஷித்து விட ஸ்ரீ. முதலியார் விரும்பினார். தாம் ஒரு முறை வெளியூர்களுக்குப் போக வேண்டியிருந்த சமயம், "துருவா" நாடகத்தின் வசனங்களை ராதாவிடம் கொடுத்து, அதைப் பாடம் பண்ணிவைக்கச் சொன்னார். அவர் ஊருக்குச் சென்று திரும்புவதற்குள் ராதா அந்த வசனம் பூராவை



யும் மனனம் செய்து ஒப்பித்து விட்டாராம். இதிலிருந்து ராதாவுக்கு நாடகக் கலையிலுள்ள ஊக்கத்தை அறிந்துகொண்ட முதலியார், அவரைத் தெலுங்கு 'துருவா' நாடகத்தில் நடிக்கச் செய்தார். பிறகு ஹாட்டன் கம்பெனியின் பங்குதாரர் ஒருவர் மூலம் அவர் வரவழைத்திருந்த ஜகன்னாதய்யர் கம்பெனியில் சில நாடகங்களிலும் ராதா நடித்தார். அந்த நாடகங்களில் அவர் ஊக்கமுடன் நடித்தது அவருக்கு நாடக வாழ்க்கையை ஸ்திரப் படுத்தியது.

ராதாவுக்குப் பதினொரு வயது ஆன போது அவரது தாயார் இறந்தார். தகப்பனாரோ நாடகக் கம்பெனிகளில் ஆசிரியராய் இருந்ததால் ஊர் ஊராகப் போகவேண்டியிருந்தது. இந்த நிலைமையில், ராதாவுக்கும் படிப்பை விட நாடகத்தில் அதிக அக்கரை இருந்து வந்ததால், ஸ்ரீ. முதலியார் தம் பிள்ளையின் படிப்பை நிறுத்தி விட்டு, அவரை மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் (1921-ம் வருஷத்தில்) ஒரு நிரந்தர நடிகனாய்ச் சேர்த்து வைத்தார். அப்பொழுது முதலியாரும் அதே கம்பெனியில்தான் வேலை பார்த்து வந்தார்.



'பதிபக்தி' நாடகத்தில் ராதா

ஒரிஜினல் பாய்ஸில் ராதாவும் அவரது தகப்பனாரும் மூன்று வருஷ காலம் இருந்தனர். ராதா முதலில் பால பார்ட்களிலும், பிறகு ஆண், பெண், இரு வேஷங்களிலும் நடித்து வந்தார். பின்னர் இருவரும் மதுரை ஸ்ரீ பால ஷண்முகானந்தா சபாவில் சேர்ந்தனர். இக்கம்பெனியில் சேர்ந்த பின் ராதா புகழ்பெற ஆரம்பித்தார். ஒரு சமயம் எட்டயாபுரம் சமஸ்தானாதிபதி இக் கம்பெனியாரை தம் சமஸ்தானத்திற்கு வரவழைத்து, சுமார் மூன்று மாத காலம் நாடகம் நடத்தச் செய்தார். ராதாவுக்கும், அவரது தகப்பனாருக்கும் சமஸ்தானாதிபதி பல பரிசுகளை வழங்கினர்.

ஷண்முகானந்தா சபாவில் ராதா இரண்டு வருஷகாலம் நடித்த பின்னர் மீண்டும் மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனியிலேயே சேர்ந்தார். அக் கம்பெனியில் ராதா சமூக நாடகங்களிலும், தசாவதாரம் நாடகத்திலும் நடித்து ஜனங்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

சுமார் இரண்டு வருஷ காலம் அந்தக் கம்பெனியில் இருந்தபின் ராதா மீண்டும் ஷண்முகானந்தா சபாவிலேயே சேர்ந்தார். ஆனால் இக் கம்பெனியில் ராதா சில மாதங்களே நடித்தார். பிறகு (1927ம் வருஷத்தில்) ராதா அக் கம்பெனியிலிருந்து விலகி 'பிரஹதாம்பாள் தசாவதார் கம்பெனி'யில் சேர்ந்து சுமார் ஒரு வருஷகாலம் நடித்து வந்தார்.

அந்த சமயத்தில், மொஹிதீன் என்பவர் மலாயா நாடுகளில் நாடகங்களை நடத்துவதற்காக ஒரு நாடக கோஷ்டியைச் சேர்த்து வந்தார். அந்தக்

[தொடர்ச்சி 62-ம் பக்கத்தில்]

நிர்தோஷி

ஜி. சதாசிவம்

அன்று அமாவாசைக்கு நான்காம் நாள். எங்கும் இருட்டு. 'போட் மெயில்' இருட்டைக் கிழித்துக்கொண்டு, சென்னையை நோக்கிப் 'பறந்து' கொண்டிருந்தது. அந்த ரயிலில், இரண்டாவது வகுப்புப் பெட்டி ஒன்றில், தனக்கென 'ரிஸர்வ்' செய்யப்பட்ட மேல் 'பர்த்'தில் படுத்திருந்தான் ஸ்ரீதரன்.

ஸ்ரீதரன் திருச்சிக்கு அருகாமையிலுள்ள, தன் கிராமத்திற்குப் போய் விட்டு சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். சாதாரணமாகவே, ஸ்ரீதரனுக்கு ரயிலில் பிரயாணம் செய்யும் சமயங்களில் சீக்கிரமாக நித்திரை வருவதில்லை. அத்துடன் அன்றைய தினம் அவன் மனம் விவரிக்க முடியாத ஒரு அசாதாரணமான நிலையில் இருந்தது.

இம்மாதிரி காரணமற்ற மனோவேதனை அவனுக்கு ஏற்படும் பொழுதெல்லாம், அவன் வாழ்க்கையில், இன்பத்தையோ துன்பத்தையோ கொடுக்கும் ஒரு சம்பவம் நடப்பது வழக்கம். ஆகவே அன்று எப்படிப்பட்ட ஒரு சம்பவம் நேரப் போகிறதோ என்ற கவலையும் சேர்ந்து அவனை வாட்ட ஆரம்பித்தது.

நிம்மதியற்ற உள்ளத்துடன், கீழே இறங்கினான். அந்தப் பெட்டியில் அவனைத் தவிர வேறு யாருமே இல்லை. கீழே இருந்த இரண்டு 'பெர்த்'களும், காலியாகவே இருந்தன. ஆனால் அந்த இரண்டு 'பெர்த்'களும் மிஸ். நிர்மலா தேவி என்ற ஒருத்தியின் பெயரில் 'ரிஸர்வ்' செய்யப் பட்டிருப்பதை, திருச்சி ஜங்ஷனில் அவன் ரயிலில் ஏறும் பொழுதே கவனித்திருந்தான். ஆனால் ரயில் கிளம்பி பல ஸ்டேஷன்களைக் கடந்தும், யாரும் வந்து அதில் ஏறிக்கொள்ளவில்லை. 'ரிஸர்வ்' செய்தவர்கள் அதை 'கான்ஸல்' செய்திருக்கக் கூடும், அல்லது நடுவே ஏதாவது ஒரு ஸ்டேஷனில் வந்து அவர்கள் ஏறிக் கொள்ளக் கூடும் என்று அவன் அனுமானித்துக் கொண்டான்.

ஸ்ரீதரன் கீழே இருந்த 'பெர்த்' ஒன்றின் ஓரமாக உட்கார்ந்து கொண்டு, ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டினான். குளிர்ந்த காற்று ஜில்லென்று முகத்தில் வீசியது. வெளியேயிருந்த மரங்களும் தந்திக் கம்பங்களும், ரெயில் போகும் வேகத்தில், எதிர்த் திசையை நோக்கி ஓடுவது போலக் காட்சி அளித்தன.

அதே போல அவனது சிந்தனையும் பத்து வருஷங்கள் பின் நோக்கி ஓடிற்று. பத்து வருஷங்களுக்குப் பின் திருச்சிக்கு அவன் வந்து போவது அதுதான் முதல் தடவை. பத்து வருஷங்களுக்கு முன், அவன் திருச்சிக்கு வந்த பொழுது, எவ்வளவு குதூகலமாக வந்தான். தான் காதலித்த பெண்ணையே மணக்கப் போகும் மகிழ்ச்சி பொங்கும் உள்ளத்துடன் வந்தானே! ஆனால் அவன் மண வாழ்க்கை! அவைகளையெல்லாம் எண்ணிப் பெரு மூச்சு விட்டான் அவன். இந்த நிலையில் அவன் எவ்வளவு நேரம் இருந்தானோ, அது அவனுக்கே தெரியாது. தூக்கம் கண்களை அழுத்தவே தன் 'பெர்த்'தில் ஏறிப் படுத்தான். அப்படியே கண் அயர்ந்து விட்டான்.

வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றது. அந்தப் பெட்டியில் வந்து ஏறினாள் அழகிய யுவதி ஒருத்தி. அவளுடன் கூட நாசூக்கான ஒரு சிறு 'சூட் கேஸ்'டன் ஏறினான் ஒரு நாகரீக வாலிபன். அவள்தான் பிரபல சினிமா நக்ஷத்திரம் மிஸ். நிர்மலா தேவி. அவள் கூட வந்த அந்த வாலிபன்தான் அவளுடைய அந்தரங்கக் காரியதரிசி சேகர்.

கண்ணயர்ந்திருந்த ஸ்ரீதரன் இந்த சந்தடியில் விழித்துக் கொண்டான்.

'யாரோ வந்திருக்கிறார்கள். நமக்கென்ன?' என்றுதான் அவன் முதலில் நினைத்து, அசட்டையாக இருந்தான். ஆனால் அவனையும் அறியாமல் அவன் பார்வை கீழேயிருந்த நக்ஷத்திரத்தின் மேல் விழுந்தது.

அந்த முகம்! ஆம். அவன் அதற்குமுன் எங்கோ, எப்பொழுதோ அவளைப் பார்த்திருக்கிறான். இதுவே அவன் மனதில் எழுந்த போராட்டம்., ஆனால் அவனால், அவளை, எங்கே எப்பொழுது பார்த்தோம் என்று நிர்ணயிக்க முடியவில்லை. கடைசியாக, "வீண் பிரமைதான். இவளைப் போல் நாம் வேறு யாரையாவது பார்த்திருப்

போம்" என்று எண்ணி மனதை சமாதானப் படுத்திக் கொண்டான்.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது. இவ்வளவு நேரம் மௌனமாக இருந்த அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். ஸ்ரீதரனும் அர்த்தமற்ற ஒரு ஆவலால் தூண்டப்பட்டவனாக, தூங்குவது போல பாவனையுடன் அவர்களின் சம்பாஷணையைக் கேட்கலானான்.

ஆடவன்தான் முதலில் பேச்சை ஆரம்பித்தான். "நிர்மலா, இன்று ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி உன்னிடம் பேசப்போகிறேன்" என்றான்.

"என்ன சேகர்! என்றுமில்லாமல் இன்று பூர்வ பீடிகையுடன் பேச்சை ஆரம்பிக்கிறீரே? எதை வேண்டுமானாலும் நீர் தயங்காமல் என்னுடன் பேசலாம்" என்றாள் அந்த அழகி.

நாகரீக வாலிபன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச்சை ஆரம்பித்தான். "நிர்மலா, என் பெற்ஞேர்களுக்கும் எனக்கும் மனஸ்தாபம். ஏன், என் பந்துக்களே என்னை விஷமெனை ஒதுக்கி வைத்திருக்கிருர்கள். காரணம், நான் உன்னுடன் பழகுவதனுல்தான்."

"சேகர், எனக்கு அது நன்ருகத் தெரியும். நான் உங்கள் குடும்பத்தாரிடமே திரும்பிப் போய் விடும்படி பலமுறை கூறியும், நீங்கள் தாம் ஒரே பிடிவாதமாக என்னுடனேயே இருக்கிறீர்கள்."

"நிர்மலா, இவ்வளவு எதிர்ப்புகள் இருந்தும் நான் ஏன் உன்னுடைய காரியதரிசியாகவே இருந்து வருகிறேன், தெரியுமா?"

''தெரியாமலென்ன. நக்ஷத்திரமாகிய என்னிடம் அபிமானம் கொண்ட பல 'விசிறி'களில் தாங்களும் ஒருவர். அந்த எண்ணம்தான் தங்களை என்னுடைய காரியதரிசியாக வேலை ஏற்கும்படி தூண்டியது.''

''நிர்மலா, இன்று உன்னிடம் உண்மையைக் கூறி விடுகிறேன். நான் உன் 'விசிறி' என்ற எண்ணத்துடன் உனக்கு சேவை புரிய வந்தேன் என்பதெல்லாம் வெளி வேஷம். நான் உன்மீது கொண்டுள்ள காதல்தான் என் ஸேவையின் உண்மை நோக்கம்.''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் நிர்மலாவின் கண்கள் கலங்கின. அவள் இம்மாதிரிப் பேச்சை அவனிடமிருந்து எதிர்பார்த்தவளே அல்ல. துக்கம் நெஞ்சை அடைத்தது. சமாளித்துக்கொண்டு, ''சேகர், உங்கள் காதலை நான் ஏற்க முடியாது. அதற்காக நான் வருந்துகிறேன்'' என்ருள்.

''நிர்மலா, என் காதலை நீ நிராகரிக்கும் காரணம் என்னவோ? உன் நலனுக்காகப் பாடுபட என்னைவிடத் தகுந்தவர் யாராவது இருக்க முடியுமா?''

''என்னுடைய முன்னேற்றத்திலே தங்களுக்குள்ள சிரத்தை எனக்கு நன்ருகத் தெரியும். அதற்காக நான் தங்களுக்கு என்றும் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனுல் தங்கள் காதலை நான் ஏற்க முடியாமைக்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது.''

''அதென்னவோ..? எனக்குத் தெரியலாமா?''

''நானும் உங்களிடம் இதுவரை மறைத்து வைத்திருந்த ஒரு ரகஸியத்தைக் கூறுகிறேன். நான் விவாஹமானவள்.''

'நிர்மலா விவாஹமானவள்!' இந்தச் செய்தி உண்மையிலேயே அவனுக்குப் பேரிடியாக இருந்தது. அனல் அவள் கூறியது பொய் என்று அவனுக்குத் தோன்றியது. தன் காதலை நிராகரிக்கவே நிர்மலா அப்படிக் காரணம் கூறுவதாக எண்ணினுன் அவன்.

அவன் எண்ணத்தை ஊகித்துக் கொண்டாள் அவள். ''சேகர், நான் கூறியதை நீர் மட்டும் என்ன? 'பிரபல நக்ஷத்திரம் நிர்மலா தேவி மணமானவள்' என்ருல் யாருமே நம்ப மாட்டார்கள். என் மண வாழ்க்கை அல்பாயுசுடன் முடிந்து விட்டதுதான் அதற்குக் காரணம். என் கதையை ஆதியோடு அந்தமாய்க் கூறுகிறேன்; கேளுங்கள்,'' என்று கூறி தன் சோகக் கதையைக் கூற ஆரம்பித்தாள் நிர்மலா.

• • •

மருதூர் மிராசுதார் மஹாதேவ அய்யரின் அருமைப் புத்திரன் ஸ்ரீதரன். அருமையான பிள்ளை என்றதனுல் செல்லமாக வளர்க்கப் பட்டான். செல்லமாக வளர்க்கப் பட்டதனுல் அவன் அசட்டுப்பிள்ளையாகி விட வில்லை. உள்ளூர் ஹைஸ்கூலில் படிப்பை முடித்துக் கொண்டு மேல் படிப்புக்காக சென்னைக்கு வந்தான்.

ஸ்ரீதரன் சிறு வயது முதலே சங்கீத ரஸிகன். சங்கீதத்தின் சகோதரக் கலைகளான நாட்டியம், நாடகம் முதலியவைகளிலும் அவன் நாட்டம் சென்றதில் ஆச்சரியமில்லை. ஆனுல் அந்தக்கலைகளுள் அவன் வேம்பென வெறுத்தது சினிமா ஒன்றைத்தான். அவன் படத்தொழிலை மனப்பூர்வமாக வெறுத்தான். சென்னையை அடைந்த ஸ்ரீதரனின் சங்கீதப் பித்தும் உச்சநிலையை அடைந்தது.

சென்னையில் எந்த சங்கீதக் கச்சேரி நடை பெற்ருலும், முதல் வரிசையில்

[தொடர்ச்சி 65-ம் பக்கத்தில்]

கெம்ப்ராஜ் புரொடக்ஷன்ஸின் ''ராஜ விக்கிரமா'' தமிழ்ப் படத்தில் கெம்ப்ராஜும், எம்.வி. ராஜம்மாவும்.

குண்டூசியைக் கேளுங்கள்

டி. பி. ஸ்ரீநிவாஸன் (சென்னை)

வேலைக்காரியில் மணி (பாலய்யா) எங்கு வசிக்கிறான்? அவனுக்கு சைக்கிள் எப்படிக் கிடைத்தது? என்பதையெல்லாம் காட்ட வில்லையே?

என்னய்யா, இது தெரிய வில்லையா? ஐந்து ரூபாய்க்காக அரையணு கற்பூரத்தை அணைத்த அவன் இந்த சைக்களுக்காக அரை விசைக் கற்பூரத்தைக் கூட அணைத்திருப்பான் என்று உம்மால் யூகித்துக் கொள்ள முடிய வில்லையே! பிறர் சொத்தை யெல்லாம் தனதாகப் பாவிக்கும் அவனுக்கு தனியாகச் சொந்த வீடு அவசியமா என்ன?

ஆர். ராஜு (ஏரவாடி)

எம். வி. ராஜம்மா இது வரையில் நடித்துள்ள எல்லாப் படங்களிலும் அவர் மிக நன்றாய் நடித்திருக்கும் படம் எது?

ஸிடேடல் "ஞான சௌந்தரி"தான்.

சுப்ரமண்யம் (அருப்புக்கோட்டை)

வைஜயந்திமாலா வாழ்க்கை படத்தில் என்ன வேஷம் ஏற்று நடிக்கிறார்? அவருக்கு வயது என்ன ஆகிறது? விவாஹம் ஆகிவிட்டதா?

"வாழ்க்கை"யில் நடித்து வரும் அவர் இன்னமும் அசல் வாழ்க்கையில் ஈடுபட வில்லை. அவருக்கு 17 வயது ஆகிறது. "வாழ்க்கை"யில் அவர் ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார்.

ஏ. ஞானக்கண் நாடார் (காலங்கை)

டி. ஆர். ராஜகுமாரியை, தன் கலியாணத்தின் போது நடனம் ஆட அழைக்க என் நண்பனொருவன் விரும்புகிறான், அவர் வருவாரா?

ராஜகுமாரி படங்களில்! மட்டுமே நடனம் ஆடுகிறார். மேடை மீது ஆடுவதில்லை.

'கலைநேசன்' (கல்லிடைக் குறிச்சி)

ஜூபிடரில் சேருவதற்கு யாருக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்! முதலாளிக்கா? மானேஜருக்கா? ஸ்டுடியோவுக்கா?

உம் தலையில் எழுதியிருப்பது அதிர்ஷ்டக் குறிப்பாக இருக்கும் பட்சத்தில், மேற் சொன்னவர்களில் யாருக்கு எழுதினாலும் உமக்கு வேலை] கிடைத்து விடும்!

ஈ. கிருஷ்ணன் குட்டி (கொல்லங்கோடு)

குண்டூசியாரே! எனக்கு இந்த உலகத்தில் இருக்கத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

சரிதான்; நீர் சினிமா உலகில் பிரவேசிக்க வேண்டுமென்கிறீர். அவ்வளவு தானே!

வஸந்தன் (பெண்ணை)

டைரெக்டர் எஸ். பாலசந்தர் தற்போது என்ன படம் தயாரிக்கிறார்?

அவருடைய தமையனே படங்கள் தயாரிப்பவர்தான். எனினும், சகோதரன் என்ற தாக்ஷிணியத்திற்காகக் கூட அப் படங்களை டைரெக்ட் செய்வதற்கு தம்பி பாலசந்திரை அவர் அழைப்பதில்லை. காரணம், "என் கணவர்" படம் தோல்வியுற்றதே என்பதாலல்ல. அவர் தயாரிப்பவை யெல்லாம் சித்திரப் படங்கள் என்பது தான் காரணம்! ஆதலால் பாலசந்தர் டைரெக்டர் தொழிலை விட்டுவிட்டு மீண்டும் நடிகராகி விட்டார். ஏவி. எம். தயாரிக்கப்போகும் "ஓர் இரவி"ல் அவரைக் காணலாம்.



"நான் எழுதிய ஹாஸ்யக் கட்டுரை எப்படி?" என்று கேட்கிறார்போலும். இம் மாதம் 23-ந் தேதி வெளிவரும் "வாழ்க்கை" தமிழ்ப் படத்தில் வைஜயந்தியும், டி. ஆர். ராமச்சந்திரனும்.

என். கற்பூரம் (சிவகெங்கை)

எம். ஜி. ராமச்சந்திரன் திராவிடக் கழகத்தவரா?

அப்படியெங்காவது அவரிடம் தெரியாமல் சொல்லி வைக்கப் போகிறீர்! அந்தத் தீவிர காங்கிரஸ்வாதி உம்முடன் சண்டைக்கு வந்து விடுவார்!

கே. எஸ். கணேசன் (கொழும்பு)

நான் என் சகோதரி என்றொரு சமூகக் கதையை எழுதியிருக்கிறேன். அதை ஜூபிடருக்கு அனுப்பலாமா? எனின், யாருக்கு அனுப்பவேண்டும்?

தாராளமாய் அனுப்பி வையும். விலாஸம்: மெஸர்ஸ் ஜூபிடர் பிக்சர்ஸ், ஸெண்ட்ரல் ஸ்டுடியோ, திருச்சி ரோடு, கோயமுத்தூர். முன்பே அவர்களுடைய "(என்) மகன்" வெளிவந்திருக்கிறான். நீர் உம் 'சகோதரி'யை அனுப்பும் போது 'நம் புரோகிதரை'யும் கூடவே அனுப்பி வைத்தால் 'அவர்கள் கலியாணம்' சுலபமாக முடிந்து விடும்!

காதர் மொஹிதீன் (கொழும்பு)

கடும் மழை பெய்து கொண்டிருந்தாலும் கடுகளவுகூட லக்ஷியம் செய்யாமல் சென்று, தங்கள் பத்திரிகையை வாங்கிப் படித்து வருகிறேன். அப்படியிருக்க என் கேள்விக்கு நீர் பதில் அளிக்காததேன்?

உமக்கு மழையைப் பற்றி லக்ஷியமில்லை; ஆனால், எனக்கு நீந்தத் தெரியாத காரணத்தால், வெள்ளத்தைக் கண்டால் உள்ளம் பதறிப் போகும். ஆதலால், நீர் கண்ணீர் விடுவதை முதலில் நிறுத்தும்! இன்னொரு முறை புதிதாய் ஏதாவது கேளும்.

அ. முனிசாமி (பங்களூர்)

பி. யு. சின்னப்பாவின் விலாஸம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

"பி. யு. சின்னப்பா, கீழ்ப்பாக்கம், சென்னை" என்று எழுதும்.

எஸ். தப்ரீஜ் (கொழும்பு)

குண்டுசியாரே! உம் தலையில் மூளையில்லை; ஏதோ ஒரு தெய்வீக சக்தி இருக்கிறது—என்று நான் நினைக்கிறேன்,

உம் தலையில், உண்மையில் மூளை இருப்பதனால் தான் இதைக் கண்டு பிடிக்க முடிந்தது என்கிறேன் நான்!

பி. ரே. நடராஜா, (கோலகுபுபாரு, மலாயா)

தவமணி தேவிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவர் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

'சுதந்தர உணர்ச்சி மிகுந்த அவர் விவாஹ பந்தத்திற்கு ஆளாக வேண்டும் என்று எதற்காக நீர் எதிர்பார்க்கிறீர்? நம் படமுதலாளிகளெல்லாம், "மணி, மணி" என்று 'தவம்' கிடக்கிறார்களே தவிர, 'தவமணி'க்கு தங்கள் படங்களில் ஒரு 'சான்ஸ்' கொடுத்து வைப்போம் என்ற எண்ணத்தையே காணோம்!

டி. ராஜன் (அருப்புக்கோட்டை)

"இளங்கோவன்", அண்ணாத்துரை—இவ்விருவருள் யார் சிறந்த கதை, வசன கர்த்தா?

படங்களைப் பொருத்தவரை, "இளங்கோவன்" தான்.

ஜி. எம். கௌஸ் (உளுந்தூர்பேட்டை)

பி. எஸ். சரோஜா சினிமாவுக்கு வருவதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தார்?

சினிமாவில் சேரவேண்டுமென்ற எண்ணமில்லாமலே (ஒரு சர்க்கஸ் கம்பெனியில்) தலைகீழாய் நின்று பார்த்தார்!

கே. மாரியப்பன் (பூனா)

பி. யு. சின்னப்பாவிடம் நான் குஸ்தி, கத்திச் சண்டை இவைகளைக் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்; அதற்கு ஒரு வழி சொல்லும்.

அவரை முதலில் வம்புச் சண்டைக்கு இழுத்தீரானால், மற்றவை தாமாக வந்து விடும்!

ஆர். கோவிந்த ராஜு (இதய மார்த்தாண்டபுரம்)

டி. ஆர். மஹாலிங்கத்திற்கு பிள்ளைகள் உண்டா? எத்தனை பேர்?

சிறு பிள்ளைத்தனமாய் நடந்து வரும் அவருக்கு ஒரே ஒரு சிறுபிள்ளை மட்டுமே இருக்கிறான்.

எஸ். செல்லப் பிள்ளை (வைதீஸ்வரன் கோயில்)

குண்டுசியின் சந்தாதாரர்களுக்கு மட்டும்தான் நீங்கள் பதில் அளிப்பீர்களா?

அதெல்லாம் ஒன்றுமில்லை. யார் வேண்டுமானாலும் கேட்கலாம். கேள்விகள் பதிலளிக்கும்படி என்னைத் தூண்டுபவையாக இருக்க வேண்டும்; அவ்வளவேதான்.

சுல்தான் இப்ருஹிம் (சிங்கப்பூர்)

எம். வி. ராஜம்மாவுக்கு விவாஹம் ஆகி விட்டதா? குழந்தைகள் உண்டா?

விவாஹமெல்லாம் சினிமாவுக்கு வருவதற்கு முன்பே ஆகிவிட்டது. தற்போது அவருடைய அன்பிற்குப் பாத்

"நான் உன் கணவனுமல்ல; அக்குழந்தைக்கு நான் தகப்பனுமல்ல; மரியாதையாய் நீ வெளியே போய் விடு!" என்கிறார் சகஸ்ரநாமம் நிரௌபதியிடம்.
"வாழ்க்கை" யில் இது ஒரு முக்கிய படம்.

திரமாயிருப்பவை இரண்டு — குழந்தைகள் அல்ல—நாய்களாகும்!

ஜே. வி. வி. பாணி (வேலூர்)

பாட்டிகளே தற்காலம் சமூகப் படங்களைப் பார்க்க விரும்பும்போது, நம் பட முதலாளிகள் ஏன் மீண்டும் புராணப் படங்களையே தயாரித்து வருகின்றனர்?

தற்போது வந்து கொண்டிருக்கும் சமூகப் படங்களை, நிஜமாக நம் பாட்டிகள்தாம் பார்க்க வேண்டும்!

ஜே. வி. சக்ரபாணி (வேலூர்)

மங்கையர்க்கரசி அநுபவித்த ஒரு நாள் இன்பத்தால் அடைந்த பலனை, பல நாள் இன்பம் அநுபவித்த சசிகலா பெருத காரண மென்ன?

சில தம்பதிகளுக்கு டஜன் கணக்கில் குழந்தைகள் பிறக்கின்றன. சிலரோ காசி, ராமேஸ்வரத்திற்குச் சென்று தவம் கிடக்க வேண்டியிருக்கிறது. இது உமக்குத் தெரிந்ததுதானே?

● ● ●

சாதாரணமாக, பிரபல நடிகைகள் வெளியில் தலை காட்டாததேன்?

அதுதான் வெற்றி ரகஸியம்! தம்மை கட்டழகி, பேரழகி, ரதிதேவி என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கும் தம் பட ரஸிகர்களை அவர்கள் ஏமாறச் செய்வார்களா?

கொண்டிருப்பது ஒரு ஹிந்துவை அவர் பெயர் வெங்கடசாமி.

எஸ். சோமசுந்தரம் (விருதுநகர்)

நான் உம்முடைய குண்டூசியின் முதல் ஊசியை பத்திரமாய் வைத்திருக்கிறேன். அதற்காக எனக்கு ஏதேனும் பரிசு வழங்குவீர்களா?

நான் 'ஸில்வர் ஸ்கிரீன்' பத்திரிகையில் ஆசிரியராய் இருந்த காலம் முதல் நான் எழுதியவை ஒன்று விடாமல் சேர்த்து வைத்திருக்கிறாராம் ஒரு நண்பர். முதலில் அவருக்குப் பரிசளிப்பதா வேண்டாமா என்ற விஷயமே இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஆகவே உம் விஷயம் பிறகு தானே. உமக்கு இப்பொழுது பரிசளித்து விட்டால், அப்புறம் அந்த முதல் ஊசி மேல் உமக்கு அலக்ஷியம் தோன்றி விடும். ஆதலால், என் மனப்பூர்வமான நன்றியை மட்டும் தெரிவிக்கிறேன்.

பி. என். விஸ்வநாத சர்மா (பம்பாய்)

குண்டூசியாரே! உமக்கு என்னிடம் நம்பிக்கை உண்டல்லவா?

நம்பிக்கை உண்டு; ஆனால் உமக்குக் கொடுக்கப் பணம்தான் இல்லை!

ஆர். மஹாராஜ பிள்ளை (தாழக்குடி)

சினிமா விளம்பரங்களை பணம் வாங்கிக் கொண்டு வெளியிடுகிறீர்

வி. ஸ்ரீநிவாஸன் (மண்டியா)

யோக மங்களம் தற்போது எந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்?

ராயல் டாக்கீஸார் தயாரித்துக் கொண்டிருக்கும் 'சுதர்ஸனி'ல்.

என். ராம் கோபால் (தஞ்சை)

பூ. ஆர். ஜீவரத்தினம் ஒரு முஸ்லிம் அன்பரை மணந்து கொண்டிருப்பதாக என் நண்பர் கூறுகிறார். இது உண்மைதானா?

உம் நண்பர் கூறுவது தவறு. அவர் மணந்து

அடுத்த மாதத்தில் வெளிவரப்போகும் "கிருஷ்ண விஜய"த்தில் எம். எஸ். எஸ். பாக்யம் முதலியோர் தோன்றும் ஒரு காட்சி.

"கிருஷ்ண விஜயம்" பிரேமாவதிக்கும், நரசிம்ம பாரதிக்கும் புதிய புகழைத் தேடிக் கொடுக்குமாம்.

களே. அதே போல் நக்ஷத்திரங்களின் வாழ்க்கையை விளம்பரப் படுத்துவதற்காகப் பணம் கொடுக்கிறார்களா?

"நன்றி மறப்பது நன்றன்று" என்று வள்ளுவர் எழுதி வைத்ததெல்லாம் அந்தக் காலத்தில். "நன்றி மறப்பது நன்று, நன்று"—என்ற "கிறள்" உபதேசத்தை நம் சினிமா நக்ஷத்திரங்கள் கடைப்பிடிக்கின்றன. நன்றி விஷயத்திலேயே இவ்வளவு சிக்கனமாக இருக்கும் அவர்களிடமிருந்து பணமா பெயரும்?

ஓ. ஏ. காதர் (சென்னை)

அநேக பட முதலாளிகள் தாங்கள் புதிதாகத் தயாரிக்கும் படங்களை முதலில் வெளியூர்களில் வெளியிட்டுவிட்டுக் கடைசியில் சென்னையில் வெளியிடுகிறார்களே. இதன் மர்மம் என்ன?

சென்னைத் தியேட்டர் காரர்களில் பெரும்பாலோர் 'பிளாக் மார்க்கெட்'டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் தியேட்டர் வாடகையை ஏலத்தில் விடுகிறார்கள். துணிந்து அதிக விலை கூறும் படமுதலாளிகளுக்கே தியேட்டர் கிடைக்கும். சென்னையில் விளம்பரச் செலவும் அதிகம். இதையெல்லாம் சமாளிக்க வேண்டுமானால் ஒரு படம் சென்னையில் இருபது வாரங்களாவது ஓடியாக வேண்டும். இருபது வாரங்களுக்கு ஓடும் என்ற நம்பிக்கை இல்லாத படமுதலாளிகள் தம் படங்களை முதலில் வெளியூர்களில் வெளியிட்டு, வசூலாகும்தொகையிலிருந்து செலவழித்து, சென்னையிலும் தம் படத்தைக்காட்டியதாகப் பெயர் பண்ணுவார்கள். இதெல்லாம் ஒருபுறமிருக்க இந்த விமர்சகர்களின் "தொல்லை" ஒருபுறம்!

எம். எஸ். சங்கர சுப்ரமண்யம் (பம்பாய்)

நாளுக்கு நாள் விருத்தி அடைவதற்குப் பதில் டி. ஆர். மஹாலிங்கத்தின்பாட்டுகள் மோசமாகிக் கொண்டே வருவதற்குக் காரணம் என்ன?

மஹாலிங்கம் உழைப்பிற்குப் பதில் அதிர்ஷ்டத்தையே நம்பியிருக்கிறார். ஆதலால், அவரது காதில் தம்புரா ஸ்ருதிக்குப் பதில் ஜோஸியர் கூறும் எதிர்கால பலன்களே ஒலித்துக் கொண்டிருக்கின்றன!

என். எம். சுந்தரம் (கல்கத்தா)

நல்லதம்பி படம் சமீபத்தில் இங்கு வெளியிடப் பட்டது. அதில் நல்லதம்பி கடைசியில் கூறியது போல் "கிந்தனார் காலக்ஷேப"க் காட்சி இருக்க வில்லை. உண்மையில் இந்தக் காட்சி அப்படத்தில் உண்டா?

உண்டு. ஏதோ தவறினால்தான் அது காட்டப்படாமலிருக்க வேண்டும்.

கே. சி. கே. (கும்பகோணம்)

என். எஸ். கே. யின் தம்பி துரைக்கு ஸி. என். அண்ணாத்துரை வசனம் எழுதுகிறாரா?

"இல்லை" என்பது தீர்மானமாகி விட்டது.

ஆர். ரகுநாதன் (மைலாப்பூர்)

டைரெக்டர்களான ஜித்தன் பானர்ஜி; ஆர். பத்மநாபன் ஆகியோரின் விலாஸங்களைத் தெரிவிக்க முடியுமா?

(1) ஜித்தன் பானர்ஜி, நியூடோன் ஸ்டுடியோ, கீழ்ப்பாக்கம், சென்னை 10.

(2) ஆர். பத்மனாபன், 15 ராமானுஜம் தெரு, தியாகராயநகர், சென்னை 17.

எம், கிருஷ்ணசாமி (தாம்பரம்)

லலிதா-பத்மினி சகோதரிகள் எடுக்கப்படும் அத்தனை படங்களிம் நடனம் ஆட ஒப்புக் கொள்வத அவர்கள் கீர்த்தி வீழ்ச்சியடையும் என்றே எனக்குத் தோன்றுகிறது. நீர் என்ன நினைக்கிறீர்?

ஆட ஒப்புக்கொண்டுள்ள ஒவ்வொரு படத்திலும் அவர்களைப் பிரத்தியேக சிரத்தையுடன், படமுதலாளிகள் புதுப் புது மாதிரியில் ஆட வைத்தார்களானால் அவர்கள் கீர்த்தி மேலும் பரவும் என்றே நான் நினைக்கிறேன்.

எஸ். ராஜகோபால் (கம்பம்)

ரஞ்சன் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவர் படங்களில் காணப்படுவது போலவே வாழ்க்கையிலும் முரட்டு மனிதரா?

இல்லை; வாழ்க்கையில் மிக சாதுவான மனிதர். அவர் இப்பொழுது தான் "அபூர்வ சகோதரர்"களின் ஹிந்திப் பதிப்பான "நிஷானி"ல் நடித்து முடித்திருக்கிறார். அடுத்ததைப் பற்றி இனிமேல் தெரியலாம்.

ரா. கோவிந்தராஜ் (கர்க்கி, பூனா)

என். எஸ். கிருஷ்ணன் நாகர்கோவிலில் காந்திஜி ஞாபகார்த்த ஸ்தூபியைக் கட்டி யிருக்கிறாரே. இதிலிருந்து அவர் காந்திஜீயின் கொள்கைகளை ஒப்புக் கொள்ளுவதாகத் தானே அர்த்தம்?

ஆம்; காந்திஜீயைத் தாம் தெய்வமாய் வணங்குவதாக "நல்ல தம்பி" மூலம் நமக்குத் தெரிவித்தாரே அவர்? ஆனால், தெய்வங்களுக்கு கிருஷ்ணன் என்ன மதிப்புக் கொடுக்கிறார் என்று அடுத்தபடி கேட்டு வைக்காதேயும்! கிருஷ்ணன் ஹிந்தி எதிர்ப்பாளர்களுக்கும் முன்பு ஆதரவு அளித்ததால் தானே உமக்கு இந்த சந்தேகமெல்லாம்?

ஆர். எஸ். மணி (கும்பகோணம்)

செல்லம் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? தற்போது எந்தப் படத்தில்

டி. ஆர். ராமச்சந்திரன், வைஜயந்தி மாலா, காமெடியன் சாரங்கபாணி ஆகியோர் தோன்றும் "வாழ்க்கை"யில் ஒரு ரஸமான கட்டம் இது.

நடிக்கிறார். கே. ஆர். செல்லத்துன முதல்வியா பேபி சரோஜா?

இல்லை, "பாலயோகினி" படத்தில் மட்டும் அவ்வாறு நடித்தார்கள். செல்லம் வைஷ்ணவ பிராமண ஜாதியைச் சேர்ந்தவர். தற்போது "மச்சரேகை"யில் அவர் நடித்து வருகிறார்.

கே. எம். எம். தாசீன் (அவிசாவெல்ல)

எம். வி. ராஜம்மாவை நடனக் கச்சேரி செய்ய அழைத்தால் வருவாரா?

அவருக்குத் தெரிந்த நடனம் படத்திற்கே போதவில்லையே, ஐயா!

கே. ஜெமேஷா (கொல்லங்கோடு)

மாயக் குதிரை படத்தில் குதிரை பறக்கிறதே? அது இயந்திர சக்தியினலா? அல்லது மந்திர சக்தியினலா?

இரண்டுமில்லை; காமிராவின் தந்திர சக்தியினல்.

எம், எஸ். ஹமீத் (கொழும்பு)

குண்டுசியாரே! நான் கடைசி முறையாகக் கேட்கிறேன். அமர கவி ஷூட்டிங் ஆரம்பமாகி விட்டதா?

நானும் கடைசி முறையாகச் சொல்லுகிறேன் — நீர் "குண்டுசி"யை சரிவரக் கவனித்துப் படிப்பதில்லை — என்று. "அமரகவி" ஷூட்டிங் நடந்து வருகிறது.

ஜி. சென்னகிருஷ்ணன் (திருசசெங்கோடு)

என் நண்பர்க ளெல்லாம் சினிமாவில் சேர விரும்புகிறார்கள், நீங்கள் ஏன் அனுமதிப்பதில்லை?

சினிமா உலகத்தின் திறவுகோல் என்னிடம் இருப்பதாக உமக்கு யார் சொன்னது? அவர்கள் தாராளமாய் சேரட்டுமே.

எம். கே. ஜெகதீசன் (லாலாப்பேட்டை)

யூ. ஆர். ஜீவரத்தினம் எப் படத்தில் நடிக்கிறார்? அவர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? சினிமாவுக்கு வருவதற்கு முன் என்ன செய்துகொண்டிருந்தார்?

செங்குந்த முதலியார் ஜாதியைச் சேர்ந்த யூ. ஆர். ஜீவரத்தினம் சினிமாவுக்கு வருவதற்கு முன் ஒரேயொரு நாடகத்தில் நடித்தார். அவ்வளவு தான். தற்போது படங்களிலிருந்து "ஓய்வு" எடுத்துக் கொண்டிருக்கிறார்.

"வாழ்க்கை"யில் நடன விருந்தளிக்கும் லலிதா, பத்மினி.

ரா. கல்யாணம் (திருச்சிராப்பள்ளி)

சின்னப்பா, பாகவதர், மஹாலிங்கம் இம் மூவருள் சமூகப் படங்களில் யார் திறம்பட நடிக்கக்கூடும்?

மற்றிருவரையும் விட மஹாலிங்கத்திற்கே சமூகப் படங்களில் வேஷப் பொருத்தம் நன்கமைகிறது. அதுவே அவருக்கு பாதி 'மார்க்'கை வாங்கிக் கொடுத்து விடுகிறது. மற்றிருவரும் சரித்திர புராணப் படங்களிலே அதிகமாய் சோபிக்கிறார்கள்.

என். உதயசிங் (பெரியகுளம்)

கன்னியின் காதலியில் நடிக்கும் மாதுரி தேவிக்கு மணம் ஆகி விட்டதா? குழந்தைகள் உண்டா?

மணம் ஆகிவிட்டது; ஆனல் குழந்தைகள் இல்லை.

ஏ. கே. சுப்பையா (திருப்பாறைத்துறை)

எம். வி. ராஜம்மாவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

டாக்டர் கிருஷ்ணராவ் தெரு, பித்தாபுர நகர், ஆழ்வார்பேட்டை, சென்னை — என்று எழுதும்.

"அபூர்வ சகோதரர்களி"ல் எம். கே. ராதாவும், ஜி. பட்டு ஐயரும்

பி. என். அப்பாசாமி (சென்னை)

பள்ளியில் படிக்கும் பெண்கள் அடுக்காகப் புஸ்தகங்களைச் சுமந்து கொண்டு போகிறார்கள். ஆனால், ஆண்கள் இந்த மாதிரி செய்வதில்லையே, ஏன்?

இது தெரியவில்லையா! சுமக்கப் பழகவேண்டியவர்கள் பெண்கள்தானே, ஸ்வாமி!

பால குப்பச்சாமி (ஜமீன் ஊத்துக் குளி)

கிருஷ்ண பக்தியில் குமாரி என் ராஜம் மிருதங்கம் வாசிக்கிறாரே. அவருக்கு மிருதங்கம் வாசிக்கத் தெரியுமா? பவளக்கொடியில் பாடுகிறாரே; சொந்தக் குரலில்தானா?

அவரே தான் மிருதங்கம் வாசிக்கிறார். சங்கீதக் கச்சேரிகள் செய்து வந்தவர்தான் அவர். ஆனால் "பவளக் கொடி"யில் பாடுவதென்னவோ இரவல் குரலில்.

கே. வி. சுப்ரமண்யம் (காரைக்குடி)

கண்ணாம்பா காரைக்குடிக்கு வருவாரா? ஏனென்றால், இங்குள்ள அநேகருக்கு அரிசி ரேஷன் போதவில்லை. அவர்கள் பட்டினியால் வாடி வருகின்றனர். கண்ணாம்பாவை ("பார்த்தால்—பசி தீரும்") பார்த்தாகிலும் அவர்கள் பசி தீரட்டுமே என்று தான் கேட்கிறேன்.

உங்கள் யோசனை நல்ல யோசனைதான்! ஆனால், தாம் முன்பு எரித்த மதுரைச் சுற்றுப் புறங்களுக்கு அவர் ("கண்ணகி") வருவார் என்று நீர் எதிர்பார்க்கலாமா!

எஸ். என். ராஜம் (தங்கசாலை, சென்னை)

அழகி அஞ்சலிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் இருக்கின்றனவா?

வெகு அழகு! பல வருஷங்களுக்கு முன்பே விவாஹம் ஆகிவிட்டது. இரண்டு பிள்ளைகள் உள்ளனர் அவருக்கு.

ரே. அ. ராமையா (தோடாங்கொல்லை, இலங்கை)

டி. எஸ். பாலய்யாவுக்கு விவாஹமாகிவிட்டதா?

"ஆகிவிட்டது" என்று இரட்டைக் குரலில் நான் பதிலளிக்கவேண்டியிருக்கிறது!

எஸ். மாரிமுத்து (கந்தவத்தை, இலங்கை

சில இலங்கை இந்தியர்கள் சினிமாவில் சேர விரும்புகிறார்கள். எந்த ஸ்டுடியோவில் சேரலாம், தயவு செய்து தெரிவிக்கவும்.

"ஜெமினி ஸ்டுடியோ, கெதிட்ரல் போஸ்ட், சென்னை"—என்ற விலாஸத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளச் சொல்லும். சினிமாவில் நடிப்பதற்கான யோக்யதாம்சங்கள் அவர்களுக்கு இருந்தால் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

ஆர். வி. சுப்பராமன் (பதுளை, இலங்கை)

பவளக்கொடியில் நடிக்கும் டி. ஈ. வரதன் வேறு எந்தப் படத்தில் நடிக்கிறார்?

"பவளக்கொடி"யில் அவரது நடிப்பைப் பார்த்த பின் கூடவா அவரது அடுத்த படத்தைப் பற்றிக் கேட்கிறீர்!

இந்த மாதம் வெளிவரவிருக்கும்
"ரத்னகுமார்" தமிழ்ப் படத்தில்
நடிக்கும் கே. மாலதி.

ஏவி. எம். தமது "வாழ்க்கை"
படத்தின் மூலம் அறிமுகப்படுத்தும்
வைஜயந்திமாலா.

“வாழ்க்கை” படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன் ‘ஜெய்ஹிந்த்!’ கூறுகிறார்.

முன் பேசும்படம் ரசிகர்களுக்கு
அறிமுகமானவளை தாரா சௌத்ரி
இப்பொழுது "பிரவிஜா கத்" நல்
நடனம் ஆடுகிறார்.

லாவண்யா பிக்சர்ஸார் தயாரித்து
வரும் "பாரிஜாதம்" தமிழ்ப் படத்
தில் பி. எஸ். சரோஜா பாமாவாக
நடித்து வருகிறார்.

"கிருஷ்ண விஜயம்" தமிழ்ப்
படத்தில் நடனம் ஆடும் லலிதா.

ஜுபிடர் "கிருஷ்ண விஜயம்"
படத்தில் நடனம் ஆடும் பத்மினி.

ஆர். கே. எஸ. பிக்சர்ஸாரின்
"தேவமனோஹரி" தமிழ்ப் படத்தில்
பானுமதி.

'எந்தக் காரியத்திற்குப் போனாலும், அந்தக் காரியமானது சித்தி பெற வேண்டுமானால், திறமை வேண்டும் என்பது ஒருபுறமிக்க, முக்கியமாக வேண்டியது முகராசி. அத்துடன் கை ராசியும் தேவை'—என்று சொல்லுவார்களே, அதென்னவோ நூற்றுக்கு நூறு உண்மையான பேச்சு.

* * *

சினிமா உலகில் வெற்றி காணவும், இந்த முகராசி, கைராசி என்ற இரு விஷயங்களும் ரொம்ப ரொம்ப முக்கியம் என்பதை நாம் அனுபவத்தில் பார்த்து வருகிறோம். படத்தில் நடிக்கும் நடிகர், நடிகைகளும் முன்னணிக்கு வர முக(ராசி) வெட்டு அவசியம். ஒரு படம் அமோகமான வெற்றி அடைய, அந்தப் படத்தை ஆரம்பித்து வைக்கும் புண்யாத்மாவிலிருந்து, அந்தப்படம் தயாரிக்கப்படும் ஸ்டுடியோ, படத்தை விளம்பரப் படுத்தும் கம்பெனி, அந்தப் படத்தைத் திரையிடும் கொட்டகைக்காரர், படத்திற்கு 'காசு' கொடுத்து முதல் முதல் டிக்கெட் வாங்கும் ரஸிகர் உட்பட யாவரும் கைராசி உள்ளவர்களாக இருக்க வேண்டியது மிகமிக முக்கியமாகும்.

* * *

இந்த உலகத்தில், டாக்டர்களுக்கு அடுத்தபடியாக, 'கைராசிக்காரர்' என்ற காரணப் பெயர், பட டைரெக்டர்களுக்குத்தான் மிகவும் முக்கியமாகக் கிடைக்க வேண்டும் என்பது என் கருத்து. படம் தயாரிப்பதற்கு முன் வருபவர், தமது படத்திற்கு ஒரு டைரெக்டரை ஒப்பந்தம் செய்வதற்கு முன்னால் அந்த டைரெக்டர் கைராசியுள்ள பேர்வழிதானா என்பதையே முதலில் கவனிக்கிறார். இந்தக் கைராசி யோகம் இல்லாமையினால்தான் போலும், டைரெக்ஷனில் அனுபவமுள்ள, திறமையுள்ள சில டைரெக்டர்களுக்கு அதிக சந்தர்ப்பம் கிடைக்காமலே யிருந்து வருகிறது.

* * *

'வெட்டுக்கிளி'

தமிழ் நாட்டில் கை ராசியுள்ள டைரெக்டர்கள் ஒரு சிலர்தான் இருக்கிறார்கள். இந்தப் பாக்கியத்தைப் பெறாதவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். டைரெக்டர் கே. சுப்ரமண்யம் கைராசிக்காரப் பேர்வழி என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. அவர் கைராசியில்லாத ஆசாமியாக இருந்தால், 'நக்ஷத்திரசிருஷ்டிகர்த்தா' என்ற பட்டப் பெயர் அவருக்குக் கிடைத்திருக்குமா? இன்றைய முன்னணி நக்ஷத்திரங்களான டி. ஆர். ராஜகுமாரி, பி. எஸ். சரோஜா போன்றவர்களை நக்ஷத்திரமாக்கியவர் அவர்தாமே!

* * *

இந்தக் 'கைராசிக்கார ஜாப்தா'வில் சேர்ந்தவர்தான் ஏவி. மெய்யப்பச் செட்டியாரும். அவர் பிறர் விஷயத்திலும், தம் விஷயத்திலும் பாரபக்ஷமின்றி கைராசியுள்ள நபர். அதனால்தான், நடிக, நடிகைகள் "மேனா" கொஞ்சம் கரார் பேர்வழி என்பது

நன்ருகத் தெரிந்திருந்தும்கூட, அவருடைய படங்களில் நடிக்க ஆசைப்படுகின்றனர்.

* * *

ஸ்ரீராமுலு நாயுடு, டி. ஆர். சுந்தரம், எஸ். எஸ். வாஸன் ஆகிய மூவரும்கூட இந்த ஜாப்தாவில் சேர்க்கப்பட வேண்டியவர்களே. இவர்களின் டைரெக்ஷனில் தயாரான படங்களில் எதுவும் சோடையாகப் போனதாகக் கூறமுடியாது. பலபடங்கள் வசூலில் மட்டுமும், சில படங்கள் வசூல், தரம் இரண்டிலும் சிறப்புடன் அமைந்திருக்கின்றன.

* * *

'கைராசி தேவையுள்ள டைரெக்டர்கள்' என்ற ஜாப்தாவில் முதல்வரிசையில் இடம் பெறத் தகுதியானவர் பி. எஸ். வி. அய்யர்தான். அவர் தயாரித்த அபலைக்குக் கிடைத்த 'அமோக' ஆதரவு, அவரைப் பட உலகிலிருந்து பல வருஷங்கள் விலகச் செய்து விட்டது. அடுத்தபடி அவர் தயாரித்த ருக்மாங்கதாவோ, சினிமா துறையிலிருந்து அவர் மறைந்து வாழும் படியே செய்து விட்டது.

* * *

அதிருஷ்டம்என்ற சமூகப் படத்தை டைரெக்ட் செய்த சாது சு. யோகியாருக்கு, அந்தத் துறையில் பிரகாசிக்க அதிருஷ்டம் இல்லாமல் போனது, அவரை கைராசி தேவையானவர்களின் ஜாப்தாவில் சேர்த்து விட்டிருக்கிறது. நிறைய விஷயம் தெரிந்த டைரெக்டர்தான் அவர். இருந்தும் பயனில்லையே.

* * *

டைரெக்டர்களைக் குறித்து எழுதும் போது, சில டைரெக்டர்களைப் பற்றி எழுதாமல் மேலே போக முடியவில்லை. ஒருபடத்தைடைரெக்ட்செய்ய ஒரு டைரெக்டர் ஒப்பந்தமாகி, படம் ஆரம்பமாகும். ஆனல் அந்தப் படம் திரையிடப்படும்போது அது வேறு ஒருவரின் டைரெக்ஷனில் வெளிவரும். இப்படிப்பட்ட அதிருஷ்டஹீனர்களான டைரெக்டர்கள் சிலர் இருக்கிருர்கள்.

* * *

அப்படிப்பட்டவர்களின் கோஷ்டியில் பி. என். ராவ், ராஜா சான்டோ, பொம்மன் இரானி, வி. எஸ். வி. அய்யர் இவர்களைச் சேர்க்கலாம். ஜெமினி தாஸி அபரஞ்சியும், மங்கையர்க்கரசியும் பி. என். ராவ் டைரெக்ஷனில் ஆரம்பமான படங்கள்தாம். சிவகவிக்கு ராஜா சாண்டோதான் முதலில் டைரெக்டராக ஒப்பந்தம் செய்யப்பட்டார். திரன் கம்பெனியின் கோகுலதாஸி படப் பிடிப்பு வி. எஸ். வி. அய்யரின் டைரெக்ஷனில்தான் ஆரம்பமாயிற்று.

* * *

இதே 'லிஸ்டி'ல் சேர்ந்தவர்கள்தாம் பி. ஆர். நாராயணனும், ஏ. டி. கிருஷ்ண ஸ்வாமியும். இப்பொழுது தயாராகி வரும் பாரிஜாதத்திற்கு ஏ. டி. கிருஷ்ண ஸ்வாமிதான் முதலில் டைரெக்டராக இருந்தார். இப்பொழுது படப் பிடிப்பு நடைபெற்று வரும் அம்பிகாதேவி மூலம் டைரெக்டராக வேண்டிய யோகம் ஒரு சமயம் பி. ஆர். நாராயணனுக்கு இருந்தது.

* * *

பத்திரிகைக்காரர்களுக்கு தனி மதிப்புக் கொடுக்கும் டைரெக்டர்கள் பலர். அதே சமயம் விமர்சகர்களைக் கண்டால் சீறிவிழும் டைரெக்டர்கள் சிலரும் உண்டு. இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர் 'முருகதாஸா'. ஏற்கனவே, பூர்வாசிரமத்தில், அவர் கொஞ்ச காலம் பத்திரிகாசிரியராக இருந்தபோது, யாராவது ஒருடைரெக்டர் அவர் மீது சீறி விழுந்ததைச் சரிக்கட்டவே அவர் இப்படி நடந்து கொள்ளுகிருரோ, என்று கூட எனக்குத் தோன்றுகிறது.

டைரெக்ட் செய்தது ஒரே ஒரு படம். அதுவும் சம்படத்திற்குள் அடக்கமாகி விட்டது—என்ற வாசகம் எஸ். கே. வாசகத்திற்கே மிகவும் பொருத்தமாக அமைந் திருக்கிறது. அவரது பெருமைக்கு ஒரு கங்கணம் போதுமே!

* * *

திறமையான, உயர்வான பந்தயக் குதிரையாக இருக்கலாம். ஆனாலும் அதன் வெற்றி அதை ஓட்டிச் செல் லும் 'ஜாக்கி'யைப் பொருத்ததாகும். ஆச்சார்யா திறமையான டைரெக்டர் தான்; என்றாலும் அவர் பிரகாசிக்க எஸ். எஸ். வாஸன் போன்ற ஒரு 'ஜாக்கி' அவசியம் தேவை என்பது, அவரது டைரெக்ஷனில் இதுவரை வெளி வந்துள்ள படங்களிலிருந்து நன்ருகத் தெரிகிறது.

* * *

லக்ஷக் கணக்கான ரூபாய்களை செல விட்டு படம் தயாரிக்கும் எஸ். எஸ். வாஸன் போன்றவர்கள் உள்ள தமிழ் நாட்டில், மிகக் குறைந்த செல வில் படம் தயாரித்த காலஞ் சென்ற ஏ. நாராயணனையும், ஸி. வி. ராமனை யும், தற்போது தயாரித்துவரும் ஆர். பத்மநாபனையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

* * *

பிரதி வருஷமும் தீபாவளி தினத் தன்று குறைந்தது ஐந்தாறு புதுப் படங்களாவது திரையிடப் பெறுவது வழக்கம். ஆனால் கடந்த தீபாவளி திரு நாளில்தான் எண்ணி இரண்டே படங் கள் திரையிடப்பட்டன. சில படங்கள் வெளியிடக் கூடிய நிலையில் இருந்தும் திரையிடப் படவில்லை.

'ஜெமினி அபூர்வ சகோதரர்கள் திரையிடப்படும் அந்த சமயத்தில் தங்கள் படத்தைத் திரையிட்டால், தங்கள் படத்தின் வசூல் கட்டாயம் பாதிக்கப்படும்' என்ற பயம் தான் இதற்குக் காரணமாம்.

* * *

"வாழ்க்கையில்" மனமுடைந்த மகள் மீனாக்ஷியைத் (திரௌபதி) தேற்று கின்றனர் பெற்றோர்களான சுப்பையா பிள்ளையும், எஸ். ஆர். ஜானகியும்.

ஜெமினியின் சந்திரலேகா திரை யிடப்பட்ட சமயத்திலும் இதே மாதிரித்தான் நடந்தது. பலர் தங்கள் படங்களை ஸென்ஸார் செய்து தயா ராக வைத்துக் கொண்டிருந்தனர். சிலர் தியேட்டர்களுக்குக் கூட ஏற் பாடு செய்திருந்தனர். ஆனால் பிறகு, சந்திரலேகாவின் எதிர்ப்புக்கு அஞ்சி, அந்த சமயம் தம் படங்களைத் திரையிடாமல் இரண்டு மாதங்கள் பொறுத்துத் திரையிட்டார்கள்.

* * *

இந்த சந்தர்ப்பத்தில் எஸ்.எஸ். வாஸ னது துணிச்சலையும் பாராட்டா மல் விட முடியாது. ஸிடாடல் ஞான சௌந்தரி திரையிடப்பட்டு அமோக ஆதரவைப் பெற்றுவந்த அதே சம யத்தில் தாம் தயாரித்த ஞான சௌந்தரி படத்தை அவர் திரையிட் டதைத் துணிச்சல் என்றுதானே கூற வேண்டும்!

* ஆபாசம் அகலுமா ?

நானும் என் மனைவியுமாக, தமிழ்ப் படங்கள் பார்க்கச் சென்றதின் விளைவு இன்று எனக்கு படம் பார்க்க 144, மனைவியால்!......பத்திரிகைகளில் பத்தி பத்தியாய் பிரசுரமாகும் விளம்பரங்கள் காந்தம் போல் மனதைக் கவர்ந்து படம் பார்க்க அழைக்கும் போது மனைவியின் 144 குறுக்கே நிற்கிறது. காரணம், படங்களில் வரும் ஆபாசக் காட்சிதான்.

படங்களில்—ஒவ்வொன்றிலும் நம் நடிகையர் 'மல்லாந்து படுக்கும்' கட்டங்கள் வந்தே தீருகின்றன. என்ன எண்ணத்துடன் இவ்வாறு காட்சிகள் அமைக்கப் படுகின்றனவோ — கடவுளுக்குத் தான் வெளிச்சம்! அவ்வாறு படுப்பதே ஆபாசத்தின் ஆரம்ப எல்லையாக கருதப்படும் போது, அத்துடன் நின்று விட்டால் ஆபாசத்தின் அளவுகோல் நீண்டு விடாது. ஆனால் அவர்கள் மல்லாந்து படுத்த பின்னர் இரு கைகளையும் தலைப் புறமாக நீட்டிக் கொள்ளுகிறார்கள். அப்போது தான் நீண்ட பெருமூச்சு விடுகிறார்கள். ஆபாசத்தின் எல்லை இங்கே தான்] அளவு மீறுகின்றது. மக்களின் கீழ்த்தர உணர்ச்சி கிண்டிவிடப் படுகின்றது. படம் பார்க்கும் பெண் மணிகளின் கண்கள் வேறு திசையை வெறுப்புடன் நோக்குகின்றன. அறிஞர்களும் கனவான்களும் இதை எக்கண் கொண்டு பார்க்கிறார்களோ? இந்தக் கோரக் காட்சி வாலிபர்கள் மனதைப் பெரிதும் கவர்கிறது. அதனால் அவர்கள் தவறான வழிகளில் செல்லவும் நேரிடும். இந்த நிலை மாறாவிடில் 'கலை' என்ற பதத்திற்கே சினிமா உலகில் இடமிருக்காமற் போய் விடக் கூடும். ''மிகவும் கீழ்த்தர உணர்ச்சிகளைப் பரப்பும் சாதனமல்ல சினிமா— கலையை வளர்க்கும் அருங்கலை'' என்ற உண்மையை படத்தயாரிப்பாளர்கள் மனதில் கொண்டாலன்றி கதிமோட்சமில்லை.

பாலசுப்ரமணியன்,
பெரும்பள்ளியூர்.

கலைத்தொண்டர்கள் தேவை .

நான் ஒரு நடனப் பிரியன். எனக்கு நடனங்கள் உள்ள படங்கள் என்றால் உயிர். அதைக் காணாமல் இருக்க என் மனம் ஒப்பவே ஒப்பாது. ஆனால் தற்காலம் வெளிவரும் படங்களில், நடனத்தின் பெயரால் அக்கலையை கொலை செய்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

நடனமாடும் பெண்களின் பாண்டித்தியத்தைப் பற்றி நான் சொல்லவரவில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்படும் உடை, மற்றும் நூதன நடனம் என்ற பெயரால் அவர்களை ஆட்டி வைக்கும் முறை, இவைகளையே குறை கூறுகிறேன். சல்லாப் போன்ற துணியால் உடை உடுத்தி மார்பகத்தை எவ்வளவு கவர்ச்சிகரமாகச் செய்யலாமோ அந்த வகையில் செய்து, மார்பு விம்மும் முறையில் படமெடுக்கிறார்கள். இதனால் நடனக் கலைக்கு அவர்கள் என்ன உதவி செய்கிறார்கள் ? பவித்திரமான கலையை இப்படி காம உணர்ச்சிகளைத் தூண்டும் சாதனமாகக் கையாளலாமா ? கலையைப் பெருக்க நினைக்கும் கலைஞர்கள் இதைக் கவனிக்க வேண்டும். மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப நினைக்கக் கூடாது.

படத் தயாரிப்பாளர்கள் உண்மையாகவே நடனக் கலைக்குத் தொண்டு செய்வதாக நினைத்தால், மேலே கூறப்பட்ட குறைகளைப் போக்கிக் கொள்ள வேண்டும். உண்மையாகக் கலைத்தொண்டு செய்ய முன்வர வேண்டும். அப்பொழுது தான் அக் கலை முன்னேறும். இல்லாவிடில் நாளடைவில் அது நசித்து விடும்.

பி. ஜி. கோபால பிள்ளை,
உத்தமபுரம்.

குறையைப் போக்கவும்

எங்கள் ஊரில் இரண்டு தியேட்டர்கள் இருக்கின்றன. ஒன்றின் பெயர்,

"பிரகாஷ்" தியேட்டர். மற்றொன்றின் பெயர் "கற்பகம்" தியேட்டர். முதல் தியேட்டராகிய "பிரகாஷி"ல் டிக்கெட் வாங்கிக் கொண்டு போய் உள்ளே உட்கார்ந்தால், மூட்டைப்பூச்சிகளிடம் படும் தொல்லை சொல்லி முடியாது. சவுண்டு பாக்ஸ் அபார வேலையினால் ஒரே இரைச்சலாக இருக்கிறது. தியேட்டரினுள் உட்கார்ந்தால் ஒரே புழுக்கமாக இருக்கிறது. விசிறிகளின் அமைப்பு சரிவர இல்லை. தியேட்டருக்கு முன்னதாகவே போவோருக்கு, மழை வந்துவிட்டால் தங்க இடம் கிடையாது.

இரண்டாவது தியேட்டராகிய "கற்பகத்தில்" மேலே கூறிய குறைகள் எல்லாம் நீக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் மழை வந்தால் தங்குவதற்குத் தான் இடமில்லை. ஆதலால் இதையெல்லாம் இவ்வூர் தியேட்டர்காரர்கள் கவனிப்பார்களென்று எதிர் பார்க்கிறேன்.

எம். ஏழுமலை,
அரக்கோணம்

நீளத்தைக் குறைக்க யோசனை

பல தமிழ்ப் படங்களில் காட்டப்படும் எழுத்துக்கள் முதலில் ஆங்கிலத்திலும், பிறகு அதையே தமிழிலும் காட்டுகிறார்கள். தமிழ்ப் பிரதேசத்தில் காட்டப்படும் காப்பிகளில் எழுத்துக்கள் யாவும் தமிழிலேயே காட்டுவது நலம். பிறமொழிகள் அதிகமாயுள்ள பிரதேசங்களுக்குச் செல்லும், அதாவது, ஆந்திரா, கன்னடம், மலையாளம், வட இந்தியா போன்ற இடங்களுக்குச் செல்லும் காப்பிகளில் மட்டும் படத்தின் பெயர் தவிர மற்றவை ஆங்கிலத்திலேயே காட்டலாம். படத்தின் பெயரை மட்டும் தமிழிலோ அல்லது அந்தந்தப் பிரதேச பாஷையிலோ காட்ட ரம்.

இவ்விதம் செய்தால படத்தின் எழுத்துக்கள் காட்டப்படும் நேரம், நீளம், இவை பாதியாகக் குறையுமல்லவா? இதை நல்ல பயனுள்ள பாகமாக படம் பிடித்துக் கொள்ளலாம். ஏன், இப்போது வந்திருக்கும் சர்க்காரின் நீளக் கட்டுப்பாடு சட்டத்திற்கு இந்த யோசனை ஓரளவு உதவி புரியக் கூடும் என்றே நம்புகிறேன். இதை பட முதலாளிகள் கவனிப்பார்களா?

ராகவன்,
திண்டிவனம்.

புதிய படங்கள் தேவை.

இந்தியாவில் தயாராகும் புதிய தமிழ்ப் படங்களில் பாதிக்கு மேல் இங்கு வருவதே இல்லை. அநேகமாக இங்கு காட்டப்படும் படங்கள் பழங்காலத்தவையாகவே இருக்கின்றன. அவைகளும் நல்லவையாய் இல்லை.

இங்கு முன்னையை விட படம் பார்ப்பவர்கள் அதிகம். அவர்களுக்குத் தங்கள் தாய் மொழிப் படங்களைக் கண்டு களிக்க வேண்டும் என்ற ஆவலும் முன்னையை விட இப்பொழுது அளவு கடந்திருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு இங்குள்ள பட விநியோகஸ்தர்கள் மலிவாக உள்ள பழைய குப்பைப் படங்களையே தருவிக்கின்றனர். இந்தப் படங்களையும் அவர்கள் விடாமல் பல வாரங்கள் காட்ட முயற்சிக்கின்றனர். வேறு வழியில்லாத காரணத்தால் திரும்பத் திரும்ப இந்தப் பழைய படங்களையே பார்க்க வேண்டி யிருக்கிறது. இந்த நிலைமை உடனே மாற வேண்டும். அதற்கு இந்தியாவிலுள்ள படத்தயாரிப்பாளர்கள் ஒரு வழி செய்ய வேண்டும். தாங்களே ஒரு விநியோகக் கம்பெனியை இங்கு துவக்க வேண்டும். அதன் மூலம் புதிய

கெம்பராஜின் "ராஜ விக்கிரமா"வில் கண்ணன் கருணையை வேண்டுகிறார் எம். வி. ராஜம்மா.

படங்களை ரஸிகர்களுக்குக் காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் புகழ் பெருகுவதுடன், அவர்களது வியாபாரமும் பெருகும். இங்குள்ள இந்தியர்களுக்கும் புதுப் படம் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். இதைப் படத்தயாரிப்பாளர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஓ. எம். ஏ. கனி,
பினங்கு.

தீமையை நன்மையாக்கவும்

இன்றைய உலகில், முக்கிய பிரசார சாதனங்களில் ஒன்ருக விளங்குகிறது சினிமா. மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், இன்பப் பொழுது போக்கிற்கும் ஏற்ற சாதனமாக விளங்குவதும் சினிமா தான். நிலைமை இப்படி இருக்க இன்றும் நமது மதிப்பிற்குரிய தலைவர்களிலும், அறிஞர்களிலும் சிலர், சினிமாவைப் பற்றித் தப்பபிப்பிராயம் கொண்டிருப்பதும், சினிமா ஒழிப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதும் வருந்தத் தக்கதாகும். சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசிய நமது விஞ்ஞான நிபுணர் ஒருவர் தமக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டால், முதலில் சினிமாவைத் தான் ஒழிக்கப் போவதாக கூறியதாக செய்திப் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. இதற்கு அவர் கூறும் காரணம், சினிமாவினுல் கெடுதல்கள் அதிகம் ஏற்படுகின்றன என்பது தான்! சினிமாவினுல் சில கெடுதல்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனுல் அவை நீக்கப்பட முடியாதவை அல்ல.

அணுகுண்டின் அழிக்கும் சக்தியைக் கண்டு பயந்தவர்கள் இன்று அணு சக்தியை ஆக்க வேலையில் ஈடுபடுத்த முனைந்திருக்கிருர்கள். அது போல நாமும் சினிமாவினுல் ஏற்படும் சிறு கெடுதல்களைக் கண்டு அஞ்சாது, தீமையை நீக்கி, நமது முன்னேற்றத்திற்கான வழிகளில் அதைப் பயன் படுத்தப் பாடுபட வேண்டும். அதை விடுத்து சினிமாவையே அழிக்க முயல்வோமானுல், மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தியவர்கள் ஆவோம்!

எஸ். எஸ். மூர்த்தி,
காரைக்குடி.

அகடமி ஏற்படுத்துங்கள்

சென்னை சர்க்கார் ஒவ்வொரு வருஷமும் அந்த வருஷம் வெளிவந்த படங்களில் சிறந்தவற்றிற்குப் பரிசு வழங்கப் போவதாக ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது கண்டு சந்தோஷம் அடைகிறேன். அத்துடன் என்னுடைய ஒரு யோசனையையும் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அமெரிக்காவில் வருஷா வருஷம் சிறந்த படம், சிறந்த நடிகை, சிறந்த நடிகர், என்று ஒவ்வொரு வருஷமும் வெளியான படங்களுக்குப் பரிசு வழங்க 'சலனப்படக் கலை சாஸ்திர அகடமி' என்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவியிருக்கிருர்கள். அது போல் நம் இந்தியாவிலும் ஒன்றை நிறுவலாம். அல்லது முதன் முதலாகச் சென்னை மாகாணத்தில் ஏற்படுத்தலாம். அதன் மூலம் சிறந்த படங்களுக்குப் பரிசு வழங்குவதுடன், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் இவர்களுக்கும் பரிசுகள் வழங்கலாம். அதனுல் படத்தொழில் வளருவதுடன், நடிக நடிகைகளையும் உத்சாகப் படுத்தலாம். படக்கலை அதனுல் முன்னேறுவதுடன் நடிக, நடிகைகளும் கஷ்டப்பட்டு முன்னுக்கு வர முயற்சிப்பார்கள். இதை சர்க்காரோ, படத்தயாரிப்பாளர்களோ, கலை அன்பர்களோ செய்வார்கள் என்று நம்புகிறேன்.

த. பாலகிருஷ்ணன்,
சங்கரம்பதிதல்.

சீர்கேடு

"சுதந்திரம் என்பது ஒரு வகை தனிச் சொத்தல்ல; சமூகத்தில் எல்லோருக்கும் பொதுவானது" என்கிருர் ஒரு ஆங்கில அறிஞர். இந்த உயர்ந்த, உன்னதக் கருத்தினை உயர்ந்த அதிகாரிகள் முதல், உண்டிக்கு அழும் ஏழைகள் வரை, எல்லோருமே மறந்து விடுகின்றனர். இதன் முக்கியத்திற்கே முழுக்குப் போட்டு விடுகின்றனர். உதாரணமாக, இந்த இழிந்த அல்லது கேவல நிலையை நாம் தினந்தோறும் சினிமாக் கொட்டகைகளில் பார்க்கலாம். வாயிலே வெற்றிலை பாக்கினை, புகையிலையுடன் போட்டுக கொண்டு, 'தூ, தூ' என்று எச்சிலைக் கீழே துப்புவோர் சிலர். பீடி, சிகரெட் முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்து 'தூ, தூ' என்று துப்புவோர் பலர். ஆஸ்த்மா முதலிய வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்கள் 'ளொள், ளொள்' என்று இருமிக் கொண்டே துப்புவர். அவர்கள், துப்புவதற்குத் தங்களுக்கு முழுச் சுதந்திரம் இருக்கிறது என்று நினைக்கின்றனர். இவ்வளவு பேர் எச்சிலையும் தாண்டிக் கொண்டு, இருட்டிலே செல்லவேண்டியது பிற பொதுமக்களின் வேலை. இது முடியுமா? எச்சிலை மிதித்துக் கொண்டு தான் செல்லவேண்டி யிருக்கிறது. எச்சிற்பட்ட கால்களை உட்காரும் பெஞ்சு முதலியவற்றின் மீது நீட்டி விடுகின்றனர். அதனுல் அதில் உட்காருப்பவர்களுக்கு வியாதிகள் சொல்லாமலேயே

"வாழ்க்கை" லக்ஷியம் ஈடேறுவதற்கு எவ்வளவோ வேஷம் போடவேண்டியிருக்கிறது!, ஆண் உடைக்குள் மறைந்துள்ள வைஜயந்திமாலாவை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை டி. ஆர். ராமச்சந்திரனால்.

வந்து சேருகின்றன. புதுப்புது வியாதிகள், புதுப்புது மருந்துகள், புதுப்புது ஆராய்ச்சிகள்! சுதந்திரத்தைப் பற்றிய தவறான கருத்தினால் ஏற்படும் விளைவுகளாகும் இவ்வளவும்.

இதைப் போக்க வழி சினிமாக் கொட்டகையில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் தான் துப்ப வேண்டும் என்ற 'கடமை உணர்ச்சி' பொது மக்களாகிய நமக்கு வரவேண்டும். உட்காரும் இடங்களின் மீது நடக்கக்கூடாது என்ற உயர்குறிக்கோள் நம்மிடம் உலவ வேண்டும். கால்களில் செருப்பு அணியும் பழக்கமும் கூடவே ஏற்பட வேண்டும்.

சிறந்த இம்முறைகளைக் கைக்கொண்டால் ஊரில் வியாதி பரவுவது பெரும்பாலும் குறையும் என்பது என் கருத்து.

கே. யி. திருப்ளீஸ்,
கும்பகோணம்.

சிலைடு விளம்பரம்

தற்காலத்தில் சினிமா தியேட்டர்களில் சிலைடு மூலம் சர்க்கார் அறிக்கைகளை விளம்பரம் செய்கிறார்கள். அதுவும் முக்கிய அறிக்கைகளை திரையில் கொஞ்ச நேரம் தான் நிறுத்திக் காட்டுகிறார்கள். ஆகவே சிறிது கல்வியறிவு படைத்தவர்களும் கூட அதைப் படிக்க முடிவதில்லை. சினிமா பார்க்கச் செல்லும் படிப்பில்லாத பாமர மக்களுக்கு ஒன்றுமே புரியப் போவதில்லை. இதனால் படிப்பில்லாதவர்களுக்கு அநேக தொல்லைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக:. ஒரு தியேட்டரில் "தியேட்டருக்குள் புகை பிடிக்கக் கூடாது. அந்து மீறிப் பிடித்தால் போலீஸ் வசம் ஒப்புவிக்கப் படும்" என விளம்பரப் படுத்துகிறார்கள். இவ்விளம்பரத்தை (அறிக்கையை) கல்வி கற்றவர்கள் படித்து விஷயமறிந்து அதன்படி நடக்கிறார்கள். ஆனால் அவர்கள் படிப்பில்லாதவர்களுக்கு இவ்விஷயத்தைச் சொல்லுவதில்லை. படிப்பில்லாதவர்கள் இவ்வறிக்கையை அறியாமல் தியேட்டரின் உள்ளே வழக்கம் போல் புகை பிடிக்கிறார்கள். தியேட்டர்காரர்களே; அறிக்கை செய்தபடி, அவர்களைப் போலீசாரிடம் ஒப்புவித்து விடுகின்றனர். போலீசாரும், அவர்கள் என்ன தான்

தயாராகிறது

குண்டூசி கேலண்டர் 1950

★

ஆறு பிரபல சினிமா நக்ஷத்திரங்களின் அழகிய வர்ணப் படங்கள் - உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் அச்சிடப் பெற்றது. மொத்தம் ஆறு தாள்கள் கொண்டது.

உங்கள் ஊர் 'குண்டூசி' ஏஜண்டுகளிடம் மட்டுமே கிடைக்கும்

ஸைஸ் 14" × 9"

விலை அணா 8

★

[12 அணா அனுப்புவோருக்கு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பி வைக்கப்படும். சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப் படமாட்டாது.]

குண்டூசி காரியாலயம்
25, கிடங்குத் தெரு :: சென்னை-1.

கெஞ்சிக் கேட்டாலும், காதில் வாங்கிக் கொள்ளாமல் அவர்களைப் பதம் பார்த்து விடுகிறார்கள். பாவம் சினிமாவுக்கு காசு கொடுப்பது மல்லாமல், இந்தக் கஷ்டம் வேறே படவேண்டியிருக்கிறது. ஆகவே படிப்பற்ற பலர் சினிமாவுக்குப் போகும் பழக்கத்தையே விட்டுவிட எண்ணுகிறார்கள்.

படிப்பற்ற மக்களின் கஷ்டத்தை நீக்கவும், சினிமாக்கலை வளர்ச்சி அடையவும், தியேட்டர் முதலாளிகள் முக்கியமான அறிக்கைகளை இடை வேளையில் சிலைடு போட்டவுடன் மைக் மூலம் படிப்பற்ற பாமர ஜனங்களுக்கு தெளிவாகச் சொன்னால், படிப்பற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிக மிகப் பிரயோஜனமாய் இருக்கும்.

இதை தியேட்டர் முதலாளிகள் கவனிப்பார்களா?

ராஜஸ்ரீ நாதன்,
சிங்காநல்லூர்.

தமிழில் பெயர்கள்

தற்போது தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்கள் சிலவற்றில் அப்படத்தைத் தயாரித்த கலைஞர்களின் பெயரை ஆங்கிலத்திலேயே காட்டி வருகிறார்கள். தமிழையே சரியாக எழுதப்படிக்கத்தெரியாத மக்கள் தமிழ் நாட்டில் நிறைய இருக்கும் போது ஆங்கிலத்தில் பெயர்களைக் காட்டுவது அவர்களுக்கு எப்படிப்புரியப் போகிறது? ஆகையால், படத் தயாரிப்பாளர்கள் படத்தைத் தயாரித்த கலைஞர்களின் பெயரை தமிழிலே காட்ட வேண்டும். எல்லோரும் சௌகரியமாகப் படிக்கும் வகையில் பெயர்களை மெதுவாகவும் திரையில் காட்டப் பட வேண்டும்.

எம். கோவிந்தன்
சேலம்.

* சந்தாப் பரிசு பெற்ற கடிதம்

★

எழுதியவர் :
சா. பாலசுப்ரமணியன்,
பெரும்பன்னியூர், குடவாசல்வழி,
தஞ்சைஜில்லா.

அபிநயம்

அபிநயம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு ''முன்னால் கொண்டு வருதல்'' என்று பொருள். உள்ளக் கிடக்கை சைகைகளால் பார்ப்பவர்கள் கண்முன் கொண்டு வருதல், அல்லது விளங்க வைத்தலே அபிநயம். நாட்டியத்திற்கு அபிநயம் ஜீவனைப்போன்றது. அபிநயமில்லா நாட்டியம் ரஸிக்காது, புரியவும் புரியாது. பரத சாஸ்திரத்தில் நான்கு வித அபிநயங்களைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. உடல்அசைவுகளைக் குறிப்பது ''ஆங்கிகாபி நயம்'' ; சொல், சப்தம், பாஷை முதலியவற்றைப் பற்றிச் சொல்லுவது ''வாசிகாபி நயம்''; அலங்காரம், உடை (make-up) இவைகளைப் பற்றிச் சொல்லுவது ''ஆஹார்யாபி நயம்''; மனோபாவங்களையும், ரஸங்களையும் விளக்குவது ''சாத்விகாபி நயம்''.

ஆங்கிகாபி நயத்தில் அங்கம், பிரத்யாங்கம், உபாங்கம் என அங்க உறுப்புகளை மூன்று விதங்களாகப் பிரித்து, அவைகளின் அசைவுகள் விவரிக்கப் பட்டிருக்கின்றன. கண் விழிகள், புருவங்கள், இமைகள் முதலிய சிறு உறுப்புகளின் அசைவுகளும் இதில் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு கதாபாத்திரத்தின் அந்தஸ்துக்கும் (நாட்டியம் சம்பந்தப் பட்ட வரை) தக்கபடி எப்படி நடக்க வேண்டும், எப்படி அசைய வேண்டும் என்ற விதிகளும் ஆங்கிகாபி நயத்தில் விவரிக்கப் பட்டிருக்கின்றன.

ஆங்கிகாபி நயத்தில் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியவை முத்திரைகள். முத்திரைகளை உபயோக சௌகரியத்துக்காக, அசம்யுதஹஸ்தம் (ஒற்றைக் கை), சம்யுத ஹஸ்தம் (இரட்டைக் கை), நிருத்த ஹஸ்தம் (நிருத்தக் கை) என மூன்று விதங்களாகப் பிரித்திருக்கிறார்கள். பரத சாஸ்திரத்தில், 24 அசம்யுத ஹஸ்தங்கள், 13 சம்யுத ஹஸ்தங்கள், 27 நிருத்த ஹஸ்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரம் மொத்தம் 33 முத்திரைகளை விவரிக்கிறது. சில நதிகள், மரங்கள், கடவுள், பறவைகள், மிருகங்கள் முதலியவற்றை சில முத்திரைகள் குறிக்கின்றன. முத்திரைகளில் நல்ல தேர்ச்சி யின்றி நாட்டியத்தைக் கையாளவே முடியாது. பரத சாஸ்திரம் முத்திரைகளுடன், ரஸங்கள், பாவங்கள் இவைகளையும் சொல்லுகிறது. ஹஸ்த லக்ஷண தீபிகத்தை ஆதாரமாகக் கொண்ட கதக்களி நடனத்தில் பரத முனிவரின் 64 முத்திரைகளும் (சிறு மாறுதல்களுடன்) கையாளப் படுவதுடன் சுமார் 600 முத்திரைகள் உபயோகத்தி லிருக்கின்றன. எல்லா நடனத்தையும்விட கதக்களியில்தான் முத்திரைகளும், பாவ பாஷைகளும் சிலாகிக்கும் முறையில் வளர்ச்சி அடைந்திருக்கின்றன.

நாட்டிய(நாடக)ங்களில் நடிகர்கள் மேடையில் பேசுவது அனுமதிக்கப் பட்டது. அபிநயதர்ப்பணத்தின் ஆசி

மாடர்ன் தியேட்டர்ஸின் "பொன்முடி" தமிழ்ப் படத்தில் ஆழ்வார் குப்புசாமியும், ஆர். பாலசுப்ரமண்யமும் தோன்றும் ஒரு காட்சி.

அழைக்க வேண்டும். கோபமாக இருக்கும்போது, துச்சீலா, துராசாரா, நிஷ்டுரா என்று அழைக்கலாம்.

நடிகர்களின குணம், குலம், யோக்யதாம்சம் முதலியவைகளை யொட்டிய அலங்கார முறையை ஆஹார்யாபி நயம் சொல்லுகிறது. ஆஹார்யாபி நயத்தை, புஸ்தம், அலங்காரம், அங்கரசனம், ஸஜ்ஜிவம் என நான்கு பிரிவுகளாகவும், இவைகளை இன்னும் சில உப பிரிவுகளாகவும் பிரித் திருக்கிறார்கள். மேடையலங்காரத்தில் உபயோகிக்க வேண்டிய சிலைகள், சித்திரங்கள் முதலியவைகளின பிரயோசனங்களை பற்றி விவரித்துச் சொல்லுவது "புஸ்தம்" என்னும் முதல் வகையும் அதன் உப பிரிவுகளும். நடிகர்கள் உபயோகிக்க வேண்டிய மாலைகள் இனத்தை ஒட்டிய சிகையலங்காரம்' பல தேசத்துப் பெண்களின் சிகைகள் எப்படி அலங்கரிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பவைகளை இரண்டாவது வகையான "அலங்காரம்" சொல்லுகிறது.

"அங்கரசனம்" நிறங்களைப் பற்றிச் சொல்லுகிறது. இக்காலத்தில் பரத நாட்டியத்தில் வர்ண விசேஷங்கள் நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. கதக்களி நடிகர்கள் தான் இதை முற்றும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ரஸ பாவங்களை ஒட்டிய அலங்காரம் (make-up) முழுவதையும் கதக்களியில்தான் இப்போது காண முடிகிறது. நம் தமிழ் நாட்டு ஸ்டுடியோக்களிலுள்ள அலங்கார நிபுணர்கள் (make-up men) ஆஹார்யாபிநயத்தின் விதிகளைக் கையாளுவார்களேயானால் படக் காட்சிகளும் பாத்திரங்களும் மிக தத்ரூபமாய் அமையும். படப் பிடிப்பில்

ரியர் நந்திகேஸ்வரரும், மேடையில் நடிகர்கள் பாடுவதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். இந்த திட்டங்களை வாசிகாபிநயம் கட்டுப்படுத்துகிறது. அரசன் ராணியைக் கூப்பிட வேண்டிய முறை, சேவகனை அழைப்பது, காதலர்கள் ஒருவரை யொருவர் அழைப்பது, இவைகள் எப்படி என்பதும், பாத்திரங்களின் அந்தஸ்துக்கு ஏற்றபடி அழைக்க வேண்டிய விதங்களும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

பிராமணனை "ஆர்யா" என்றும், அரசனை "மஹாராஜா" என்றும், ராணியை சேவகர்கள் "ஸ்வாமினி" என்றும், அரசன் பட்டத்து ராணியை "தேவி" என்றும், அழைக்க வேண்டும். பேச்சின் தன்மைகள் சந்தர்ப்பத்தை யொட்டி எப்படி அமைய வேண்டும் என்பது முக்கியம். பிரியா, காந்தா, நாதா, ஸ்வாமீ, ஜீவிதம், நந்தனு என்று பலவிதமாக காதலனை ஒரு காதலி அழைக்கலாம். ஆனால், சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி தான் ஒவ்வொன்றையும் உபயோகிக்க வேண்டும். காதலன் மற்றொருத்தியுடன் உறவு கொண்டிருக்கிறான் என்று தெரிந்தால் "காந்தா" என்று

முகத்தில் வாணம் பூசவேண்டியது கூட அவசியமில்லை. உடையலங்காரம், தலையலங்காரம் முதலிய பகுதிகளிலும், காட்சி அமைப்புகளிலும், ஆஹார்யாபிநயம் மிக்க உதவி செய்யும். நாடகத்தின் மேற்போக்கான பார்வையில் மேடையலங்காரமும், ஆடையலங்காரமும்தான் சபையோர்களின் கவனத்தை அதிகம் கவருகின்றன. கதா பாத்திரங்களை, சாத்விகம், ரஜஸம், தாமஸம் என மூவகைகளாகப் பிரித்து, அந்தந்த பாத்திரங்களின் தன்மைக்குரிய வர்ணங்களை உபயோகிக்க வேண்டும். பச்சை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள் இந்த நான்கு நிறங்கள்தான் அதிகமாக உபயோகப் படுத்தப் படுகின்றன. பச்சை நிறம் சாத்விகத்தையும், சிவப்பு நிறம் ரஜஸத்தையும், கறுப்பு நிறம் தாமஸத்தையும், மஞ்சள் நிறம் சாத்விகமும், ரஜஸமும் கலந்த தன்மையையும் வெளிப்படுத்தும். தலையலங்காரத்தில் கிரீடம், மௌளீ, பார்ச்வ மௌளீ என்னும் மூன்று வித மகுடங்களைப் பற்றியும், கதா பாத்திரங்கள் அணிய வேண்டிய ஆடைகளைப் பற்றியும் அங்கரசனம் சொல்லுகிறது.

ஸஜ்ஜீவம் என்னும் நான்காவது பகுதியில் மேடையில் கொண்டுவரக் கூடிய மிருகங்கள், பறவைகள், ஆயுதங்கள், மலை, ரதம், விமானம் இவைகளை எப்படிச் செய்ய வேண்டும், உபயோகிக்க வேண்டும் என்ற விதிகள் அடங்கியுள்ளன.

அங்க அசைவுகளைபபற்றி ஆங்கிகாபிநயம் சொல்லுகிறது. ஆனால் வெறும் அங்க அசைவுகளால் மட்டும் அபிநயம் பூர்த்தியாகி விடாது. ஏற்ற உணர்ச்சி பாவங்களும் ரஸபாவங்களும் தேவை. இவைகளைப் பற்றிச் சொல்லுவது தான் "சாத்விகாபியம்", நாட்டியத்திற்கு மிக முக்கியமானது ரஸபாவங்கள் (sentiments) நாட்டியத்திற்கு மட்டுமென்ன! நடிப்பிற்கும்சான் இது மிக முக்கியம். மனதில் உண்டாகும் ! உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் போதே சில அங்க அசைவுகள் நம்மையும் அறியாமல் உண்டாகின்றன. இதைத்தான் நாட்டியத்தில் அதற்குரிய பெயரிட்டு பாவங்கள் எனத் தொகுத்து விட்டார்கள். பேசத் தெரியாத குழந்தைகள் எதையாவது கேட்கும் போதும், ஊமைகளின் சைகைகளிலும் உண்டாகும் அங்க அசைவுகள்கூட ஒரு வித அபிநயம்தான். பாடகர்கள் பாடும்போதும் ஒருவித அபிநயத்தைக் காண்கிறோம். கிராமிய நடனங்களில் மெருகில்லாத ஒருவித அபிநயம் பரிமளிக்கிறது. இதையே லாகவத்துடன் அமைத்து விட்டால் நல்ல அபிநயமாகி விடுகிறது.

பாவங்கள் அங்க அசைவுகளால் தான் காட்டப் படுகின்றன என்றாலும் முகத்தில் அந்த உணர்ச்சி பிரதிபலிக்காவிடில் அது பாவம் ஆகாது. வெறும் ஆங்கிகாபி நயமாகவே

ஜுபிடரின் "கிருஷ்ண விஜயம்" படத்தில் நடனம் ஆடும் பத்மினி.

சென்னையில் சில தினங்களுக்குமுன் திரையிடப்பட்டுள்ள "இன்பவல்லி"யில் இவரைக் காணலாம்.

நின்று விடும். கலைத்திறனில்லாத சிற்பியின் சிலை போல மற்ற அபிநயங்களை ஆசானிடம் கற்றுக் கொண்டு விடலாம். ஆனால் உணர்ச்சியின் பிரதிபலிப்பான ரஸங்களை மட்டும் அனுபவித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமேயன்றி, இப்படி செய்து கொள்ளுவதால் இந்த ரஸத்தை பிரதிபலிக்கச் செய்யலாம் என்பது முடியாது. ஒரு பாத்திரத்தை (character) தாங்கி நடிக்கும் நடிகர், அந்த கதையின் பாத்திரமாகவே நினைத்து, அந்த பாத்திரத்தின்உணர்ச்சிகளைத்தானும் அனுபவித்தால்தான் உண்மையான ரஸபாவங்களை வெளிப்படுத்த முடியும். இதையேதான் சினிமா பாஷையில் "சிறந்த நடிப்பு" என்கிறோம்.

ஏழு அல்லது எட்டு வயதுச் சிறுமிகள் இப்போது நாட்டியமாடுவதை சகஜமாகக் காண்கிறோம். அவர்கள் ஆங்கிக விதிகளினின்றும் வழுவாமல் ஆடலாம். ஆனால் சாத்விகத்தை அதிகமாகக் காண முடியாது. பதாபிநயத்தில் உபயோகிக்கப்படும் பாட்டுகள் காதல் உணர்ச்சியால் ஸ்ருங்கார ரஸத்தை வெளிப்படுத்துபவைகள். இந்த உணர்ச்சியை சிறுமிகள் அந்த வயதிலே உணர முடியாது. மனதிலே உணராமல் உணர்ச்சியை வெளிப்படுத்துவது சாதாரணமாக சாத்யமானதன்று. சிறு பெண்கள் பொம்மலாட்ட பொம்மைகளைப் போல் மேடைமீதாடுவதில் இந்த ஒரு குறை அமைந்து விடுகிறது. இம்மாதிரி உணர்ச்சிகளை அனுபவிக்கத் தகுந்த வயதுடைய பெண்கள் சாத்விகத்தை முற்றும் வெளிப்படுத்த முடிகிறது. 'பேபி'களுக்கும், குமாரிகளுக்கும் இந்த ஒரு வித்தியாசம்தான்.

ஸ்தாயி, சஞ்சரி, சாத்விகம் என பாவங்கள் மூவகையில் அடங்கும் எட்டு ஸ்தாயி பாவங்கள், 33 சஞ்சரி பாவங்கள், எட்டு சாத்வீக பாவங்கள் ஆக 49 பாவங்கள் தான் எட்டு ரஸங்களுக்கு காரணமாயிருக்கின்றன. பாவங்களுக்குக் காரணமாயிருப்பது விபாவம்; அதனால் வெளிப்படும் செய்கைகள் அநுபாவம்; இப்போது பிரதிபலிப்பது ரஸபாவம்.

ஸ்ருங்காரம், ஹாஸ்யம், கருணை, ருத்ரம், வீரம், பயானகம், பிபஸ்தை, அத்புதம் என்னும் எட்டு வகை ரஸங்கள் பரத சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. வியாக்கியான கர்த்தா அபிநவகுப்தர் "சாந்தரஸம்" என்னும் ஒன்பதாவது ரஸத்தையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார். ரஸங்களுக்கு மூலகாரணம், ரதி, ஹாஸ்யம், சோகம், க்ரோதம், உத்ஸாகம், பயம், ஜுகுப்ஸம், ஆச்சரியம் என்னும் எட்டு வகை(ஸ்தாயி பாவங்கள்) மனோ உணர்ச்சிகள். காதலிலிருந்து ஸ்ருங்காரமும், சந்தோஷத்திலிருந்து (mirth) ஹாஸ்ய ரஸமும், வருத்தத்திலிருந்து கருண ரஸமும், கோபத்திலிருந்து ருத்ர ரஸமும், தைர்யத்திலிருந்து வீரரஸமும், பயத்திலிருந்து பயா

னக ரஸமும், வெறுப்பிலிருந்து பிபஸ்தா ரஸமும், ஆச்சரியத்திலிருந்து அத்புத ரஸமும் உண்டாகின்றன. சமாதி நிலை, வியர்த்தல், மயிர்க்கூச்சல், குரல் மாற்றம், நடுக்கம், முகவர்ண பேதம், கண்ணீர் வடித்தல், மூர்ச்சித்தல் என்னும் எட்டு மனோ பேதங்கள் சாத்விக பாவங்கள் எனப்படுகின்றன.

பரத முனிவரின் அபிப்பிராயப்படி முக்கியமானவை நான்கு ரஸங்கள். மற்ற நான்கும் அவைகளிலிருந்து உண்டானவைகள். ஸ்ருங்காரத்திலிருந்து ஹாஸ்யமும், ருத்ரத்திலிருந்து கருணையும், வீரத்திலிருந்து அத்புதமும், பிபஸ்தையிலிருந்து பயானகமும் உண்டாகின்றன.

நாட்டிய(நாடக)த்தை அதன் முக்கிய ரஸபாவம், கதா நாயகனின் தன்மை, கதையின் போக்கு இவைகளை யொட்டி பத்து வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். மனோ உணர்ச்சி, அதனால் உண்டாகும் ரஸபாவம், இவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து மற்றைய அம்சங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. ஒரு ரஸபாவத்தை முக்கியமாகக் கொண்ட காட்சியின் போது அந்த பாத்திரத்திற்குரிய பாட்டுகள் எந்த ராகத்தில் அமைய வேண்டும், எந்தெந்த ராகங்கள் எந்த ரஸத்தை வெளிப்படுத்த உதவியா யிருக்கும் என்பவைகளையும் பரத முனிவர் விளக்கி யிருக்கிறார்.

ஒரு பாத்திரத்திற்குரிய உடை, அலங்காரம், பாத்திரத்தின் தன்மைக்குரிய வாசகம், ஆங்கிகம் இவைகளை முற்றிலும் அநுசரித்தால்தான் நாட்டியம் பூரணமாகும். கதை அமைப்பவர் முதல், அலங்கார நிபுணர், காட்சி ஜோடனை செய்பவர், வாத்ய கோஷ்டி, சாகித்யகர்த்தா, நடிகர்கள் வரை எல்லோரும் கதையின் முக்கிய ரஸபாவத்தை உணர்ந்து ஒத்துழைத்தால்தான் நாட்டியம் மிகவும் சோபிக்கும்.

"எட்ரம்"

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தை திரும்ப அடைவதற்கும், ஓர் ஹோமியோபதிக் கூட்டு ஔஷதம்

நவ நாகரீக காலத்திற்கு இன்றியமையாத ஒரு உயர்ந்த டானிக். வீரிய விருத்தி சம்பந்தமான ஆராய்ச்சி நிபுணர்களால் பல வருட அனுபவத்தின் மேல் இந்த ஔஷதம் தயார் செய்யப்படுகின்றது. நவீன நாகரீகத்தின் காரணமாகவும், சிறுவயதில் ஏற்பட்ட துர்ப்பழக்கங்களினாலும் பலரின் வாழ்க்கையே கெட்டுவிடுகின்றது. இதன் காரணமாக தூக்கமில்லாமை, நபும்சகத்துவம், இந்திரிய நஷ்டம், முதலியவை விளைகின்றன. இக் கோளாறுகளில் **எட்ரம்** ஓர் வரப்பிரசாதமென புதுதுயிரளிக்க வல்லது. சரீரத்திற்கு புது உணர்ச்சியும், பலமும், வீரியமும் அளிப்பதுடன் வாழ்க்கையில் மறுபடி ஈடுபடவும் உதவியளிக்கின்றது.

இது ஆண்களும் பெண்களும் எவ்வயதிலும் உபயோகிக்கலாம்.

உட்கொள்ளும் அளவு: வேளை ஒன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள். நாள் ஒன்றுக்கு 3 வேளைகள் ஆகாரத்திற்கு முன்.

[50 மாத்திரைகள் கொண்ட பாட்டில்]

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம்.

குடந்தையில் கோலாகல வைபவம்

தங்கள் குழந்தையின் திறமையைப் பற்றி பிறர் புகழ்ந்து பேசுவதைக் கேட்பதைவிடச் சிறந்த மகிழ்ச்சி, பெற்றோர்களுக்கு வேறு கிடையாது என்பார்கள். தங்கள் குழந்தை சாருபாலவின் பரத நாட்டிய அரங்கேற்றத்தன்று அத்தகைய மகிழ்ச்சியைத்தான் அக்குழந்தையின் பெற்றோர்களான கும்பகோணம் ஹோமியோபதி டாக்டர் ஸ்ரீ. வி. ஆர். மூர்த்தி தம்பதிகள் அடைந்திருக்க வேண்டும்.

இம்மாதம் 5ம் தேதி கும்பகோணம் வாணிவிலாஸ சபையில், குழந்தை சாருபாலாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. அன்று அங்கே கூடியிருந்த கூட்டம், இதுவரை கும்பகோணத்தில் எந்த நாடகத்திற்கோ, நாட்டியத்திற்கோ கூடியது இல்லையாம். டாக்டர் மூர்த்தி அந்த அரங்கேற்றுவிழாவைச் சிறந்த முறையில் ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

சென்னை கவர்னர் பவநகர் மஹாராஜா, பவநகர் மஹாராணி, பிரதமர் பி. எஸ். குமாரசாமி ராஜா போன்ற பல 'படே படே' ஆசாமிகளெல்லாம் குழந்தையை வாழ்த்தி, செய்திகள் அனுப்பி யிருந்தார்கள். அவைகளை யெல்லாம் டாக்டர் வி. ஆர். மூர்த்தி படித்தார். வெளியூர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் பல பிரமுகர்கள் விஜயம் செய்து குழந்தைக்குப் பல பரிசுகளை வழங்கினார்கள். நமது மானேஜர், ஸ்ரீ. கே. ராதாகிருஷ்ணனும் குடந்தைக்குச் சென்று விழாவில் கலந்து கொண்டார்.

அன்று குழந்தை சாருபாலா பிரமாதமாக ஆடினார். சபைக் கோழையில்லாது அனுயாசமாக ஒவ்வொரு அயிட்டத்தையும், கடைசி வரை கூட்டத்ினர் சலிக்காமல் ஆடிக் காட்டினார். சின்னஞ்சிறு வயதிலே பிரமாதமாய் ஆடிய குழந்தை சாருபாலாவைப் புகழாதவர்களே கிடையாது. நட்டுவனார் ஸ்ரீ. டி. எஸ். ஷண்முகசுந்தரம் பிள்ளை தம் சிஷ்யையான சாருபாலாவுக்கு சிறப்பாக சிக்ஷை சொல்லி வைத்திருப்பது உண்மையில் பாராட்டத்தக்க விஷயமாகும்.

பரத நாட்டியக் கலையின் வளர்ச்சியில் தீவிர பங்கு கொண்டவரான ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யர் இந்த அரங்கேற்று விழாவுக்குத் தலைமை வகித்தது மிகவும் பொருத்தமாகும். அவர் குழந்தையின் திறமையை வெகுவாகப் புகழ்ந்து பேசினார்.

"இடிந்து கிடந்த கலைக்கோவிலை மீண்டும் சிறப்புடன் எழுப்பிக்கட்டும் பணியில், ஒரு ரத்ன கம்பமாக விளங்குவாள் இக்குழந்தை" என்று அவர் ரத்னச் சுருக்கமாகக் கூறியபோது, அதை முழு மனதுடன் ஆமோதிப்பதுபோல கூடியிருந்தோர் பலத்த கரகோஷம் செய்தார்கள். "நாரதர்' ஸ்ரீனிவாஸ ராவ், 'சாருபாலாவைப்போல் அவ்வளவு கச்சிதமாக ஆடும் குழந்தையைத் தாம் பார்த்ததே இல்லை' என்று கூறி, ஆசி அளித்தார்.

பேபி சாருபாலா.

சாருபாலாவின் அரங்கேற்றம் சம்பந்தமாக எடுத்த படம். இடமிருந்து வலம்: முனிஸிபல் கௌன்ஸிலர் நாராயணசாமி உடையார், 'வெங்கடா லாட்ஜ்' சுப்ரமண்ய ஐயர், டாக்டர் வி. ஆர். மூர்த்தி, ஈ. கிருஷ்ணய்யர், குழந்தை சாருபாலா, நட்டுவனர் ஷண்முகசுந்தரம், 'குண்டூசி' மானேஜர் ராதாகிருஷ்ணன்.

டாக்டர் வி. ஆர். மூர்த்தி நடனபோதகரான ஸ்ரீ. ஷண்முகசுந்தரம் பிள்ளைக்கு ஒரு வெள்ளிப் பேழையை பரிசளித்தார்.

ஏ. ஆர். சகுந்தலாவின் பரத அரங்கேற்றம்

சில படங்களில் நடித்துள்ள சினிமா நடிகை ஏ. ஆர். சகுந்தலாவின் பரத நாட்டிய அரங்கேற்றம், இம்மாதம் 7ம் தேதி, தியாகராயநகர் வாணி மஹாலில், பேராசிரியர் ஸ்ரீ.பி.சாம்பமூர்த்தியின் தலைமையில் நடைபெற்றது. ஏ. ஆர். சகுந்தலா நாட்டிய உலகிற்குப் புதியவரல்ல. நடனம் நடராஜுடன் ஜோடியாகப் பல ஊர்களில் ஆடியிருக்கிறார். இப்பொழுது சாஸ்திர ரீதியாக வழுவூர் ராமய்யா பிள்ளையிடம் சிக்ஷை பெற்று அரங்கேறியிருக்கிறார். அவர் அன்று ஆடிய ஆட்டங்களில் குறவைக் கூத்து குறிப்பிடும் வகையில், சிறப்பாக இருந்தது. அதற்காக அவர் அணிந்திருந்த ஆடைகளே நூதனமாக இருந்தன. அளவுக்கு அதிகமாக ஆபரணங்களை அணிந்து 'நட(ன) மாடும் நகைப்பெட்டி'யாகக் காட்சி அளித்தார். நன்றாகத்தான் இருந்தது ஆட்டம். ஆனால் இன்னும் விறுவிறுப்பு வேண்டும். அவர் உடல் கொஞ்சம் 'ஒடிய' இருந்தால் அதற்கு சௌகரியமாக இருக்கும். மொத்தத்தில், அன்றைய ஆட்டத்தைப் பார்த்த போது, இன்னும் சில நாள் ஒத்திகைக்குப் பின் அரங்கேறியிருக்கலாமென்றே பட்டது எனக்கு. பின்னணியில் பாடியவர்களில் கோபாலகிருஷ்ணனின் பாட்டு மிகவும் இனிமையாக இருந்தது. வெளிச்ச ஏற்பாடுகள் பாராட்டக்கூடிய முறையில் இருந்தன.

இது செய்தி

'சௌதாமினி'யில் எம். கே ராதா

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸார், அடுத்தபடியாகத் தயாரிக்கப் போகும் "சௌதாமினி" தமிழ்ப் படத்தில் எம். கே. ராதாவை கதாநாயகனாக நடிக்க ஜெமினியுடன் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். தெலுங்குப் படத்தில் வி. எஸ். ஆர். பிரதம பாகத்தில் நடிப்பாராம்.

சந்த் பிலோமினா

பம்பாயில் ஸாம்ராஜ் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் என்ற பில்ம் கம்பெனி ஆரம்பமாகியுள்ளது. அவர்கள் "சந்த் பிலோமினா" என்ற கிரேக்க மங்கையின் சரிதத்தைப் படமாகத் தயாரிக்கும் முயற்சியில் முனைந்திருக்கிறார்களாம்,

ரமணி கலா கேந்திரம்

டில்லியிலுள்ள ரமணி கலா கேந்திரத்தினர், 'பிரின்ஸ்பால்' நிருத்ய சாம்ராட் கோபால கிருஷ்ணாவின் தலைமையில் நேருஜியின் பிறந்த தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்களாம். ரமணி சில நூதன நடனங்களை அன்று விழாவில் ஆடிக் காட்டினாராம்.

சினி டெக்னிஷ்யன்கள் கூட்டம்

சென்ற மாதம் 20ம் தேதி சினி டெக்னிஷ்யன்கள் சங்கத்தின் விசேஷக் கூட்டமொன்று நியூடோன் ஸ்டுடியோவில் நடைபெற்றது. அன்றையக் கூட்டத்திற்கு பிரசாத் தலைமை வகித்தார். இந்தியப் பட நீள அடிக்கட்டுப்பாடு குறித்து விவாதம் நடந்தது. முடிவில் அந்த விஷயம் ஓட்டுக்கு விடப்பட்டது. கட்டுப்பாட்டைஎதிர்த்து 37 அங்கத்தினர்களும், ஆதரித்து ஒரே ஒருவரும் ஓட்டுக் கொடுத்தார்கள்.

வசனகர்த்தா மறைவு

'மதிவாணன்' என்ற புனைபெயருடைய கணபதி சென்ற மாதம் 24ம் தேதி மரணமடைந்த செய்தி கேட்டு வருந்துகிறோம். அவர் "ஸ்ரீ ஆண்டாள்" படத்திற்கு வசனம் எழுதியுள்ளார்.

அபூர்வ சகோதரர்களை
சமஸ்தானாதிபதி பார்த்தார்

இம்மாதம் முதல் தேதி பிரபாத் டாக்கீஸில், ஐக்கிய திருவிதாங்கூர், கொச்சி சமஸ்தானாதிபதி ஜெமினியின் "அபூர்வ சகோதரர்க"ளைப் பார்த்தார். அவர் எஸ். எஸ். வாஸனை வெகுவாகப்பாராட்டினார்.

தோட்டக்காரன்

சென்ற மாதம் 27ம் தேதி, சென்னை மியூஸியம் தியேட்டரில் வி. எஸ். விஸ்வநாதன் எழுதிய "தோட்டக்காரன்" நாடகம் நடைபெற்றது. அன்றைய நாடகத்திற்கு மந்திரி கனம் கோபால் ரெட்டி தலைமை வகித்தார். அன்றைய நாடகம் நன்றாக அமைந்திருந்தது.

குமாரி பாரதி

இம்மாதம் 11ம் தேதி, பெரம்பூர் நியூ ஹாலில், குமாரி பாரதியின் பாத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. அன்றையக் கச்சேரி, பெரம்பூர் பைன் ஆர்ட்ஸ் அஸோஸியேஷனின் சார்பில் நடைபெற்றது. ஸ்ரீ. வி. எம். கோத்தாரி தலைமை வகித்தார். அன்றையக் கச்சேரி நன்றாக அமைந்திருந்தது.

மீண்டும் ஜி. என். பி.

பிரபல சங்கீத வித்வான் ஜி. என். பாலசுப்ரமண்யம் மீண்டும் சினிமாவில் நடிக்கப் போகிறாராம். மைசூர் நவஜோதி ஸ்டுடியோஸார் தயாரிக்கப் போகும் ஒரு படத்தில் அவர் நடிக்கக் கூடுமென்றும், அவருடன்கூட வஸுந்தராதேவி நடிப்பாரென்றும் தெரிகிறது.

நடன நிகேதன் ஆண்டு விழா

இம்மாதம் 4ம் தேதி, நடன நிகேதனத்தின் நான்காவது ஆண்டுவிழா, சென்னை மியூஸியம் தியேட்டரில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு சென்னையின் புதிய மேயர் ஸ்ரீ. பி. வி. செரியன் தலைமை வகித்தார். டாக்டர் பி. மார்த்தாண்டம் பிள்ளை, மேயரை வரவேற்றுப் பேசினார். டாக்டர் வெ. ராகவன், 'நடனக் கலை' என்பது பற்றிப் பேசினார். தலைவர் பேசுகையில், கதகளி—மலையாளம் உலகத்திற்கு அளித்துள்ள ஒரு பொக்கிஷம் என்று குறிப்பிட்டார். கடைசியில் கோபிநாத்—தங்கமணி கோஷ்டியாரின் கதகளி நடனங்கள் நடைபெற்றன.

பானுமதிமீது வழக்கு

பிரபல நடிகை பானுமதிமீது, மாலதி பிக்சர்ஸார் ஒரு வழக்கைத் தொடர்ந்

திருந்தனர். அவர்கள் தங்கள் வழக்கில், பானுமதி தங்களுடைய "லட்சுமம்மா" என்ற படத்தில் நடிக்க அட்வான்ஸ் பெற்றுக் கொண்டதாகவும், ஒப்பந்தப்படி தங்கள் படத்தில் அவர் நடிக்கவில்லை என்றும், தங்களுக்கு நஷ்டஈடாக **22,000** ரூபாய் தரவேண்டும் என்றும் கூறியிருந்தார்கள்.

பானுமதி, பதிலுக்கு மேற்படி கம்பெனி மீது, ரூ.21,000 தனக்குக் கொடுக்கவேண்டுமென ஒரு வழக்கைப் பதிவுசெய்தார்.

முடிவில் இவ்விரு வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டு இரு தரப்பினரும் சமரஸமாகி விட்டனர்.

ஜெமினி கோபால் ராவ் திறமை

ஜெமினி ஸ்டுடியோவின் ஸ்டில் போட்டாகிராபரான எஸ். வி. கோபால் ராவ், பிரிட்டிஷ் ராயல் போட்டோகிராபிக் ஸொஸைட்டியின் பிரவேச மெம்பராக அனுமதிக்கப் பட்டிருக்கிறார். ஏற்கனவே இவர் அமெரிக்க போட்டோகிராபிக் ஸொஸைட்டியின் பிரவேச அங்கத்தினராகி யிருக்கிறார்.

சந்திரவதனா ஆடினார்

சென்ற மாதம் 27ம் தேதி சுதந்திர கான சங்கீத வித்யாலயத்தின் சார்பில், குமாரி சந்திரவதனாவின் பரத நாட்டியம் நடைபெற்றது. அவருடைய அன்றையக் கச்சேரி சிறந்த முறையில் அமைந்திருந்தது. நாட்டியத்திற்கு வேண்டிய மெலிந்த சரீரம், சொன்னபடி வளைந்து கொடுக்கும் அவயவங்கள் அவருக்கு இருக்கின்றன. அன்று இவர் ஆடிய 'அறுவடை நடனம்' கவர்ச்சிகரமாய் இருந்தது.

குமாரி சந்திரவதனா

பிலிம் விசாரணைக் கமிட்டி

இந்திய சர்க்கார், செய்தி இலாகா மூலம் நிறுவப்பட்ட பிலிம் விசாரணைக் கமிட்டியினர் ஒரு கேள்வித்தாளைத் தயாரித்திருக்கின்றனர். சினிமாத் தொழிலில் சம்பந்தப்பட்டுள்ள பலருக்கும் இந்தக் கேள்வித் தாள்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

மைசூரில் வெத்து பிலிம் உற்பத்தி

மைசூரில் சீக்கிரமே வெத்து பிலிம் உற்பத்தி ஆரம்பமாகும் என்று தெரிகிறது. ஸ்விஸ் கம்பெனி ஒன்று மைசூர் சர்க்காருடன் இது விஷயமாக ஒரு முடிவுக்கு வந்து விட்டதாம். கம்பெனியின் மூலதனம் ஒன்றரைக் கோடி ரூபாய் என்றும், அதில் பத்து சத விகிதம் சர்க்காரின் பங்காக இருக்கும் என்றும் தெரிகிறது. பிலிம் உற்பத்தித் தொழிற்சாலை, நஞ்சன்கூடு என்ற இடத்திலாவது, கிருஷ்ணராஜ சாகரத்திற்கு அருகாமையிலாவது நிறுவப்படுமாம்.

திருஷ்டி போதனா முறை

சென்னை சர்க்கார் இம்மாகாணத்தில் திருஷ்டி போதனா முறையை, மேலும் விஸ்தரிப்பதற்கான பல யோசனைகளைச் செய்து வருகிறதாம். ஜனங்கள் விரும்பக்கூடிய முறையில், நல்ல கருத்துக்கள் கொண்ட, நானாவிதமான படங்களைத் தயாரிக்கவும், அவைகளைத் திரையிடவும் திறமைசாலிகள் அடங்கிய ஒரு கமிட்டியை ஏற்படுத்தவும் யோசனை செய்யப்பட்டு வருகிறதாம்.

ராஜாஜி முன்னிலையில் வஸந்தகோகிலம் கச்சேரி

சென்ற மாதம் 29ம் தேதி கல்கத்தாவில் சர்க்கார் மாளிகையில், கவர்னர் ஜெனரல் ராஜாஜியின் முன்னிலையில் என். ஸி. வசந்த கோகிலத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. ஆந்திர புயல் நிவாரணத்திற்கு நிதி திரட்டவே இந்தக் கச்சேரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காதல் காட்சிகள் கூடாது

சென்ற மாதம் 25ம் தேதி ஈரோடில், 'தமிழ் நாடு மாதர் மஹாநாடு' கூடிற்று-



தஞ்சையில் புதிதாய் கட்டப்பட்டிருக்கும் யாகப்பா டாக்கீஸின் ஆரம்ப விழாவை ஜெமினி வாஸன் நடத்திவைத்தார். படத்தில் பூச்செண்டுடன் காட்சியளிப்பவரே எஸ். எஸ். வாஸன்

அவர்கள் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர். 'திரைப் படங்களில் கொலை, களவு, காதல் முதலான காட்சிகளை அதிகமாய் காட்டுவதை சர்க்கார் அனுமதிப்பது கூடாது' என்பது, அத்தீர்மானங்களில் ஒன்ருகும்.

வாழ்த்துகிரும்

எழுத்தாளர் தா. நாகலிங்கம், சென்ற மாதம் 24ம் தேதி சேலம் செவ்வாய்ப் பேட்டையில், தர்மாம்பாளைத் தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்ருர். தம்பதிகளுக்கு எமது ஆசிகள்.

புதிய தணிக்கை போர்டு

சென்னை சர்க்கார் புதிய வருஷத்துக்கென, பின்கண்டவர்களடங்கிய சினிமாப் பட தணிக்கை போர்டை நியமித்திருக்கிருர்கள். (1) சென்னை போலீஸ் கமிஷனர், (2) சென்னை உள்நாட்டு இலாகா காரியதரிசி, (3) விளம்பர இலாகா டைரெக்டர், (4) ரகஸிய போலீஸ் அதிகாரி, (5) கல்வி இலாகா, ஆரம்பக் கல்வி டைரெக்டர், (6) பி. வி. கிருஷ்ணய்யா; (7) ஜிதன் பானர்ஜி, (8) நார்லா வெங்கடேஸ்வர ராவ், (9) ஆர். கிருஷ்ணமூர்த்தி, (10) தங்கம்மா விஸ்வநாதம் பிள்ளை, (11) மஞ்சு பாஷிணி, (12) சரோஜினி வரதப்பன், (13) ஜோதி வெங்கடாசலம், (14) டி. என். எஸ். ராகவன், ஐ. ஸி. எஸ்., (15) எம். சத்யநாராயண, (16) ஸி. ராமச்சந்திரன் பிள்ளை, (17) ஸி. வி. ஹனுமந்த ராவ், (18) ஜனுப் ஸி. எச். சிக்பத்துல்லா, (19) பி. பாலசுப்ரமணியம், (20) ஜி. ராஜகோபாலன்.

சினிமாப்பட மத்திய தணிக்கை போர்டு

சினிமாச் சட்டத்தைத் திருத்தி அமைப்பதற்கான மசோதா ஒன்றை, செய்தி ஒலிபரப்பு இலாகா மந்திரி திவாகர் இம்மாதம் 7ம் தேதி சட்ட சபையில் கொண்டு வந்தார். 'ஒவ்வொரு மாஹாணத்திலும் சினிமாப்பட தணிக்கை போர்டுகள் இருப்

பதை எடுத்து விட்டு, இந்தியா முழுவதற்கும் ஒரே ஒரு தணிக்கை போர்டு ஏற்படுத்தவேண்டும்' என்பதே அந்த மசோதாவின் ஷரத்தாகும்.

"ஒவ்வொரு மாஹாணத்திலும் தணிக்கை போர்டுகள் இருப்பதால் சில கெடுதல்கள் ஏற்படுகின்றன. ஒரு மாஹாணத்தில் தணிக்கை செய்யப்பட்ட சினிமாப் படம் மற்றொரு மாஹாணத்தில் உள்ள தணிக்கை போர்டால் தடுக்கப்படுகிறது. எனவே எல்லா மாஹாணங்களிலும் உள்ள தணிக்கை போர்டுகளை எடுத்து விட்டு, இந்தியா முழுவதற்கும் பொதுவான தணிக்கை போர்டு ஒன்றை ஏற்படுத்தினல் மேற்சொன்ன கஷ்டம் ஏற்படாது. இதுதான் இந்த மசோதா கொண்டு வருவதன் நோக்கமாகும்" என்று அவர் குறிப்பிட்டார்.

அவனா? அவளா?

சுகுமார் பிக்சர்ஸார் அடுத்தபடி, "அவனா? அவளா?" என்ற சமூகப்படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். இந்தப் படத்தை, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. காமராஜ் நாடார், இம்மாதம் 7ம் தேதி, ஆரம்பித்து வைத்தார். உட்லண்ட்ஸில் நடைபெற்ற இந்த ஆரம்ப விழாவில் சுகுமார் சுந்தரம் விருந்தினர்களை வரவேற்றுப் பேசினர். ஸ்ரீ. காமராஜ் பேசுகையில், தயாரிப்பாளர் சிறந்த பொழுது போக்கிற்கான படத்தைத் தயாரிப்பார் என்று தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார். பிறகு பி. எஸ். ராமையா வந்தனோபசாரம் கூறினர்.

கே. சுப்ரமண்யம் டைரெக்ட் செய்யப் போகும் இப்படத்தில், டி. ஆர். மஹாலிங்கம், பி. எஸ். சரோஜா, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, வி. என். ஜானகி, ஆர். எம். சோமசுந்தரம் பேபி பத்மா முதலியவர்கள் நடிப்பார்களாம்.

பி-ரே-மா

அய்யர் பரொடக்ஷன்ஸின் "பிரேமா" பட சம்பந்தமான முன்னேற்பாடுகளை டைரெக்டர் பி. எஸ். வி. அய்யர் ஆரம்பித்து விட்டாராம். இப்படத்தில் பெரிய நாயகி, யோக மங்களம், டி.வி.ரமாமணி பாய், ராஜகாந்தம், எஸ். ஜி. காசி அய்யர் ஆகியோர் நடிபார்களாம்.

தென் அமெரிக்காவில் இந்தியப் படம்

அர்ஜன்டைன குடியரசின் தலைநகரான போனஸ் அயர்ஸ் என்ற நகரத்தில் டைரெக்டர் வி. சாந்தாராமின் "டாக்டர் கோட்னிஸ்" (ஆங்கிலப் படம்) திரையிடப் பட்டது. தென் அமெரிக்காவின் சரித்திரத்திலேயே, ஒரு இந்தியப் படம் திரையிடப்படுவது இது தான் முதல் தடவை.

தியாகராஜ பாகவதர் ஹிந்தியை ஆதரிக்கிறர்

இம்மாதம் 8ம் தேதி, வாலாஜா பேட்டை கிட்டப்பா இலவச ஹிந்தி சங்கீதப் பாடசாலையின் 16வது ஆண்டு விழா நடைபெற்றது. அந்த விழாவில் நடிகர் எம். கே. தியாகராஜ பாகவதர் கலந்துகொண்டார். அவர் பேசுகையில், கிட்டப்பாவின் சங்கீத ஞானத்தைப் புகழ்ந்து பேசி, அவருடைய நாடகங்களைப் பார்த்த பின்னர் தான் தாமும் நடிக்க முற்பட்டதாகக் குறிப்பிட்டார். ஹிந்தி பாஷையை வெறுக்கக் கூடாதெனவும், தாம் ஹிந்தி கற்று வருவதாகவும் அவர் கூறினர். அவர் சில பாட்டுக்களைப் பாடி சபையோரை மகிழ்வித்தாராம்.

வீர பத்தினி

ஸ்ரீ சாரதா புரொடக்ஷன்ஸார் தங்களது "பலநாடு வீர யுத்தம்" என்ற தெலுங்குப் படத்தைத் தமிழாக்கி, "வீர பத்தினி" என்ற பெயருடன் வெளியிடும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். தமிழில் வசனங்களை ஏ. ஏ. சோமயாஜுலு எழுதியிருப்பதுடன், தமிழாக்கும் பொறுப்பையும் ஏற்றிருக்கிறர். சங்கீத டைரெக்ஷனில் ஒன்ருகத் தொண்டு செய்து வரும் பாண்டுவும்-பிரதர் லக்ஷ்மணனும் சங்கீதம் சம்பந்தப்பட்ட பொறுப்பை ஏற்றுள்ளனர். டி. எம். லீலா, ஆர். எம். சோமசுந்தரம் இருவரும் தமிழில் பேசிப் பாடப்போகிறர்கள். இந்த தமிழாக்கும் வேலை நியூடோன் ஸ்டுடியோவில் நடைபெறுகிறது.

ஆர். ஸி. ஏ. நிபுணர்

லண்டன் ஆர். ஸி. ஏ. போட்டோ போன் லிமிடெட்டின் என்ஜினியரான எல். டியிள்யூ ரஸல், சென்ற மாத இறுதியில் பம்பாய்க்கு வந்திருக்கிறர். ரேடியோ கார்ப்பொரேஷன் ஆப் அமெரிக்காவின் துணைக் கம்பெனியான போட்டோ போன் எக்விப்மென்ட்ஸ் லிமிடெட் கம்பெனியின் பழுது பார்த்து, பாதுகாக்கும் இலாகாவின் தலைவராகச்சேருகிறர். ரஸ்ஸல் போன்ற நிபுணத்துவமும், அனுபவமும் உள்ள ஒருவர் ஆர். ஸி. ஏ. ஸ்தாபனத்தில் சேர்ந்திருப்பது இந்தியப் படத்தொழிலில் ஏற்படப்போகும் முன்னேற்றத்திற்கு ஒரு அறிகுறியாகும்.

நாகபுரியில் 'நிஷான்'

ஜெமினியின் "நிஷான்" இம்மாதம் 10ம் தேதி நாகபுரி லிபர்ட்டி சினிமாவில்

திரையிடப் பட்டது. ஆரம்பத்தன்று காட்சிக்கு மத்திய மாஹாண பிரதமர் ரவி சங்கர் சுக்லா தலைமை வகித்தார். அவர் படத்தின் தரத்தைப் புகழ்ந்து கூறி, அதைத் தயாரித்த எஸ். எஸ். வாஸனை மிகவும் பாராட்டினார். மற்ற மந்திரிகள் சிலரும் அன்றையக் காட்சிக்கு வந்திருந்தார்கள்.

லண்டனில் உதயசங்கர்

இம்மாதம் 10ம் தேதி லண்டனில் நடைபெற்ற உதய சங்கரின் நடனத்திற்கு, பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி ஸர். ஸ்டாபோர்டு கிரிப்ஸும், பிரபல ரஷ்ய 'பேலட்' நடிகர் நிஜன்ஸ்கியும் விஜயம் செய்து, உதயசங்கரை மிகவும் பாராட்டினார்களாம்.

தஞ்சையில் எஸ். எஸ். வாஸன்

சென்ற மாதம் 23ம் தேதி, ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸன் தஞ்சைக்கு விஜயம் செய்தார். தஞ்சையில் யாகப்பா டாக்கீஸ் என்ற புதிய சினிமாக் கொட்டகையை அவர் ஆரம்பித்து வைத்தார். தஞ்சை நகரசபை வாஸனுக்கு ஒரு வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தது. தஞ்சை ஜில்லா எழுத்தாளர் சங்கத்தாரும் அவருக்கு ஒரு வரவேற்பை அளித்தார்கள்.

விடுதலை முரசு

இம்மாதம் 10ம் தேதி சென்னை வி. பி. ஹாலில் "விடுதலை முரசு" என்ற நாடகம் நடைபெற்றது. ஐ. என். ஏ. ஜெய் ஹிந்த் வீர சம்ரக்ஷணைக் கமிட்டியினரால் இந்த நாடகம் நடத்தப்பட்டது.

சினிமா ரஸிகர்கள் சங்கம்

சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் சார்பில் இம்மாதம் 12ம் தேதி, ஸ்ரீ. எஸ். ராமனாதன் தலைமையில், சர்க்காரின் பிலிம் அடிக் கட்டுப்பாட்டைப்பற்றி விவாதிக்க ஒரு கூட்டம் நடைபெற்றது. கட்டுப்பாட்டை ஆதரித்துப் பலர் பேசினார்கள். பி. எஸ். செட்டியார் கட்டுப்பாட்டை எதிர்த்துப் பேசினார்.

சத்யாவதார்

அருணோதய கலாமந்திரின், "சத்யாவதார்" என்ற படத்தின் ஆரம்ப பூஜை விழா, இம் மாதம் 15ம் தேதி, பம்பாய் மாஹாணத்திலுள்ள செம்பூர் ஸ்ரீகாந்த் ஸ்டுடியோவில் நடைபெற்ற இவ்விழாவுக்கு கேதார்நாத் தலைமை வகித்தாராம்.

பிரபல சிறுகதை எழுத்தாளர்

பி. வி. சுப்ரமண்யம்

எழுதிய

அரும்பும் மலரும்

(உள்ளம் உருக்கும் சிறுகதைத் தொகுதி)

இலக்கியப் பூங்காவில் மறுமலர்ச்சி எழுத்தாளரின் உணர்ச்சிச் சித்திரங்கள். ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புஸ்தகம். நா. பிச்சமூர்த்தியின் முன்னுரையுடன் கூடியது. விலை 1 ரூபாய்,

எல்லா குண்டூசி ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்

வேண்டுவோர் எழுதவும்

பி. வி. சுப்ரமண்யம்,

3, பெருமாள் கோயில் தெரு, எழும்பூர், சென்னை-8

பிரம்ம லோகம்

அபூர்வ சோதரலு

ஜெமினி ஸ்டுடியோவில் "அபூர்வ சகோதரர்கள்" "அபூர்வ சோதரலு" தலுங்குப் படமாகி வருகிறது. டைரெக்டர் புல்லையாவின் மேற்பார்வையில் நடந்து வருகிறது தெலுங்காக்கும் வேலை. இப்படம் பொங்கல் தினத்தன்று ஆந்திர தேசத்தில் திரையிடப்படுமாம்.

பாரிஜாதம்

லாவண்யா பிக்சர்சாரது "பாரிஜாதம்" தமிழ் வருஷப் பிறப்பன்று திரையிட்டு விடப்படுமாம். நரகாசுரனது ஆட்கள், கிருஷ்ண விக்ரகத்தை பூஜித்த சில பக்தர்களைத் துன்புறுத்தும் காக்ஷி சமீபத்தில் படமாக்கப் பட்டதாம். நரகாசுரனது கோபத்திற்கு ஆளானவர்களில், கிருஷ்ணமணி என்ற ஒரு பக்தையாக மேனகா நடித்தாராம். மஹாலிங்கம், பி. எஸ். சரோஜா, எம். வி. ராஜம்மா, பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படம் கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் டைரெக்ஷனில் வளர்ந்து வருகிறது.

மச்சரேகா

சுகுமார் புரொடக்ஷன்ஸின் "மச்சரேகா" புல்லையாவின் டைரெக்ஷனில் நியூடோனில் படமாகி வருகிறது. சமீபத்தில் கையில் மச்ச ரேகையை உடைய ராஜகுமாரனும், சர்வாதிகாரியும் சந்திக்கும் கட்டம் படமாக்கப் பட்டதாம். இந்த இரு பாத்திரங்களிலும் மஹாலிங்கமே நடிக்கிருர். பாதிக்குமேல் வளர்ந்து விட்டதாம் இப்படம்.

ஔவையார்

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்று முடியும் விருத்தத்தை ஔவையார் பாடி முடித்ததும் மழை பொழிகிறது. ஜெமினியில் "ஔவையார்" படத்திற்கான இக் காக்ஷி சமீபத்தில் படமாக்கப்பட்டது. திருநீர் மலைக்குப் போய் சில வெளிப் புறக் காட்சிகளை எடுத்து வந்தார்களாம்.

இதயகீதம்

சிட்டாடலின் "இதயகீதம்" ஜோஸப் தளியத் டைரெக்ஷனில் ஸதர்ன் ஸ்டுடியோவில் உருவாகி வருகிறது. சமீபத்தில் டி. ஆர். ராஜகுமாரி, டி. பி. ராஜலக்ஷ்மி, மஹாலிங்கம், வீரப்பா, கே. சாரங்கபாணி சம்பந்தப் பட்ட ஒரு காட்சி நியூடோனில் தயாராகியதாம்.

லைலா மஜ்னு

பாலாஜி பிக்சர்ஸாரது "லைலா மஜ்னு" பாதிக்கு மேல் தயாராகி முடிவடைந்து விட்டதாம். எம். வி. ராஜம்மாவின் நடிப்பு, ஞானசௌந்தரிக்குப் பிறகு, இப்படத்தில்தான் சிறப்பாக அமைந்திருக்கிறதாம். கிருஷ்ணன் பெண் வேஷத்திலும் மதுரம் ஆண் வேஷத்திலும் தோன்றி கலகலப்பை உண்டுபண்ணுவார்களாம்.

விஜயகுமாரி

கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் ஜுபிடரின் "விஜயகுமாரி" படப்பிடிப்பு அநேகமாக முடிவடைந்து விட்டதாம். கே. ஆர். ராமசாமி, டி. ஆர். ராஜகுமாரி, பாலையா, பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை ஏ. எஸ். ஏ. சாமி டைரெக்ட்செய்து வருகிருர்.

சுதர்ஸன்

டைரெக்டர் சுந்தர்ராவ் நட்கர்னி, ராயல் டாக்கீஸ் "சுதர்ஸன்" படப்பிடிப்பு விஷயத்தில் மும்மரமாக இருக்கிருர். சின்னப்பா, யோக மங்களம் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படம் நிச்சயமாகத் தமிழ் வருஷப் பிறப்பன்று திரையிடப் படுமாம்.

ஏழை படும் பாடு

பக்ஷிராஜாவின் "ஏழை படும் பாடு" படத்தில் நடிக்க சிறுகளத்தூர் சாமா ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிருராம். ராமனுத் டைரெக்ஷனில் படம் பாதிக்கு மேல் தயாராகி விட்டதாகத் தெரிகிறது. இப்படத்திற்கான வசனங்களை எஸ். டி. சுந்தரம் எழுதியிருக்கிருர்.

ராஜ விக்கிரமா

கெம்ப்ராஜின் "ராஜ விக்கிரமா" படம் ஏழாயிரம் அடிக்குமேல் தயாராகி விட்டதாம். பொங்கலுக்குள் படம் தயாராகி முடிவடைந்து விடும் என்றுனும், பொங்களுக்குப் பிறகுதான் படத்தைத் திரையிடப் போகிருர்களாம். கெம்ப்ராஜ், ராஜம்மா, ஜெயம்மா, சேதுராமன், அங்கமுத்து, கணபதி பட், என். எஸ். சுப்பையா முதலியோர் நடிக்கும் படம் இது.

நவாப் எம். கே. ராதா

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

கோஷ்டியில் ராதாவும் சேர்ந்து கொண்டு 1928ம் வருஷத்தில் மலாயா நாடுகளுக்குச் சென்று, சுமார் ஒரு வருஷகாலம் நாடகங்களில் நடித்து விட்டு, நல்ல புகழுடன் திரும்பி வந்தார். அடுத்தபடியாக, அவர் ஒரு நாடக கோஷ்டியுடன் ரங்கூனுக்குச் சென்று அங்கும் நாடகங்களில் நடித்து விட்டு வந்தார். ரங்கூன் நாடகங்களில் அவருடன் எம். ஆர். சந்தான லக்ஷ்மி, பி. எஸ். சிவபாக்யம் முதலியோர் நடித்தனர். பிறகு, 1932-ம் வருஷத்தில் ராதா சேலம் நாகலிங்கச் செட்டியாரின் கம்பெனியிலும், கோல்டன் சாரதாம்பாள் கம்பெனியிலும் கொஞ்ச காலம் நடித்தார்.

அந்த சமயத்தில், 'டிரியோ' சாரதாம்பாளுடன் ஒரு நாடகக் கோஷ்டி இலங்கைக்குச் சென்றது. அவர்கள் ராதாவையும் தம் கோஷ்டியில் சேர்த்துக் கொண்டனர். ராதா இலங்கைத் தீவில் சில நாடகங்களை நடித்தார்.

இந்தியா திரும்பியதும், ராதா பி. ராஜாம்பாள் கம்பெனியில்சேர்ந்தார். அக்கம்பெனியின் நாடகங்களின் மூலம்தான் ராதா தம் நாடக வாழ்க்கையின் உச்சக் கட்டத்தை அடைந்தார். சென்னையில் "பதி பக்தி" நாடகத்தை முதன் முதலாக தொடர்ந்தாற்போல் 94 நாட்கள் நடத்தியவர்கள் அக்கம்பெனியார்தான். அந்த நாடகம் சென்னை வாசிகளின் அவ்வளவு பேராதரவைப் பெற்றதற்கு ராதாவின் நடிப்புதான் முக்கிய காரணமாம். குடிகாரன் வேஷத்தில் ராதா மேடைமீது தோன்றி விட்டால் கொட்டகையில் ஒரே கரகோஷம் தானும்!

ராதாவின் புகழ் நாடக உலகோடு நின்று விடவில்லை; சினிமா உலகின் கவனத்தையும் கவர்ந்தது. 1934-ம் வருஷத்தில் கோவை மனோரமா பிலிம்ஸார் சதி லீலாவதி படத்தைத் தயாரிக்க முற்பட்டனர். அது பதி பக்தி போன்ற ஒரு கதையேயாகும். ராதா, நாடக மேடையில் மிகப் புகழுடன் விளங்கியதோடு, சினிமாப் படங்களுக்கு ஏற்றதான முக அழகையும் பெற்றிருந்ததால், மனோரமா பிலிம்ஸார் அவரைத் தம் படத்திற்குக் கதாநாயகனைத் தேர்தெடுத்தனர். எல்லிஸ் ஆர். டங்கனல் டைரெக்ட் செய்யப்பட்ட இப் படம் நல்ல வெற்றி பெற்று, ராதாவின் சினிமா வாழ்க்கையை சிறந்த வெற்றியுடன் ஆரம்பித்து வைத்தது. முதல் படத்தின் மூலமே ராதா சினிமா ரஸிகர்களின் அபிமான நக்ஷத்திரமாகி விட்டார்.

சதி லீலாவதிக்குப் பிறகு ராதா சமூகத் தொண்டு படத்தில் கதாநாயகனாக நடித்தார். வேறு பல காரணங்களினால் ராதாவின் நடிப்பு முதல் படத்தவ்வளவு அதில் சோபிக்கவில்லை. அடுத்தபடியாக ராதா அனாதைப் பெண் படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டார். அப்படத்தில் அவரது நடிப்பு சுமாராகவே இருந்தது. பிறகு அவர் துளசிதாஸ் படத்தில் பிரதம பாகத்தில் நடித்தார். அவருக்கு வேஷம் நன்கு பொருந்தியிருந்தது. நடிப்பும் சுமாராக அமைந்திருந்தது. ஆனல் படத்திற்கு மட்டும் சாதாரண வெற்றியே கிடைத்தது.

சமூகப் படங்களுள் சதி லீலாவதி மிகுந்த புகழை வாங்கிக் கொடுத்தது போல, புராணப் படங்களுள் மாயா மச்சீந்திரா ராதாவுக்கு ஏராளமான புகழை ஏற்படுத்தி வைத்தது. அந்தக் காலத்தில் நிறையப் பண வசூலைப் பெற்ற படங்களில் இதுவும் ஒன்றாகும். பின்னர் ராதா நடித்த சதி முரளி, பிரேம பந்தன், ராஜா கோபிசந்த் ஆகிய மூன்றும் இதற்குத் திருஷ்டி பரிகாரம் போல் அமைந்தன. பிறகு அவர் நடித்த வன மோஹினி பண

வசூலில் வெற்றிகரமாய் இருந்தது. இவை முடிந்த சமயத்தில், ஜெமினி ஸ்டுடியோக்காரர்கள் தாஸி அபரஞ்சி படத்தைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். அவர்கள் ராதாவை விக்ரமாதித்தனின் வேஷத்தில் நடிக்கச் செய்தனர். அப்படத்தில் ராதாவுக்கு வேஷம் பொருந்தி யிருந்தது. ஆனால் நடிப்பு சாதாரணமாகவே இருந்தது. ஜெமினியில் அவர் முதல் கையெழுத்துப் போட்ட நேரம், மிகமிக நல்ல நேரமாய்த்தான் இருக்க வேண்டும். ஒரு படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட அவர் இப்பொழுது ஜெமினியின் நிரந்தர நடிகராகவே ஆகிவிட்டாரல்லவா.

ஜெமினி அடுத்தபடியாகத் தயாரித்த கண்ணம்மா என் காதலியில் கதாநாயகனைப் நடித்தார். முந்தின படங்கள் எல்லாவற்றையும்விட இப் படத்தில் அவரது நடிப்பு சிறப்பாக அமைந்தது. சீன டாக்டராக அவர் மாறு வேஷத்தில் தோன்றும் போது துளிக்கூட அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி வேஷம் நன்கு பொருந்தியிருந்தது. வேஷத்திற்கு ஏற்றபடி ராதா தம் குரலையும் மாற்றிக் கொண்டு பேசியிருப்பது பாராட்டத் தக்கது.

கண்ணம்மாவுக்குப் பிறகு ராதா, எஸ். எஸ். வாஸனின் மஹோன்னத முயற்சியான சந்திரலேகாவில் கதாநாயகனைய் நடிக்கும் பாக்கியத்தைப் பெற்றார். அந்தப் படம் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட்டு, ராதா ஒரு அகில இந்திய நடிகர் ஆகிவிட்டார்.

கடைசியாக ராதா நடித்துள்ளது அபூர்வ சகோதரர்கள் படத்தில். ஏக காலத்தில் இரு வேஷங்களிலும், மூன்றுவதாக ஒரு மாறு வேஷத்திலும் அவர் அதி உன்னதமாய் நடித்து, ஒரேயடியாய் ரஸிகர்களை பிரமிக்கச் செய்து விட்டார். இப்படத்தில் அவர் ஒரு சிறந்த மேல் நாட்டு நடிகருக்கு நிகராக நடித்திருக்கிறார். இதைப் பார்த்த பின்னர், 'சிறந்த நடிப்புடன் கூட நிறையத் தமிழ்ப் படங்களை ஜெமினி தயாரிக்க வேண்டும்; அவைகளில் ராதாவுக்கு மேலும் இது போன்ற வேஷங்கள் கிடைக்க வேண்டும்' என்ற எண்ணம் ஏற்படுகிறது.

ராதா தற்போது, ஜெமினியின் அநுமதியின் பேரில், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸார் தயாரிக்கப் போகும் செளதாமினி படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறார்.

ராதா சினிமாப் படங்களில் நடிக்கத் தொடங்கிய பின்னரும்கூட கொஞ்சகாலம் நாடகத்தில் ஈடுபட்டிருந்தார். 1937ம் வருஷத்தில் அவர் டி. ராஜாம்பாள் கம்பெனியில் சேர்ந்து புதுக்கோட்டையில் நாடகங்களில் நடித்து வந்தார். "ராமதாஸ்" நாடகத்தில் அவர் நவாப் வேஷம் ஏற்று மிகத் திறமையுடன் நடித்ததைப் பார்த்த பிரம்மஸ்ரீ சிதம்பர பாகவதர் அவரைப் புகழ்ந்து, அவருக்கு "நவாப்" என்ற பட்டத்தை அளித்தார்.

ராதா நாடகத்தில் நடித்து வந்த காலத்திலும் சரி; சினிமாவில் நடிக்க வந்த பிறகும் சரி; அவரது தகப்பனர் அவருக்கு ஒரு மெய்க்காப்பாளராக விளங்கி வந்தார். ராதா கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபடாமல் ஒழுக்க சீலராக உன்னத பதவியை அடைய வேண்டும் என்ற விஷயத்தில் ஸ்ரீ முதலியார் கண்ணும் கருத்துமாய் இருந்தார். அதே சமயத்தில் அவர் மற்ற பிள்ளைகளையும் தம் பிள்ளை போலவே பாவித்து வந்ததனல் அவர் மிகுந்த நன்மதிப்பைப் பெற்றார். எனவே, அவர் 1939ம் வருஷத்தில் காலமானது ராதாவுக்கும், அவரிடம் பயிற்சி பெற்ற இதர நடிகர்களுக்கும் மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியது.

ராதாவுக்கு இப்பொழுது நாற்பதாவது வயது நடந்து வருகிறது. செளமிய வருஷம், கார்த்திகை மாதம்—அதாவது, 1910ம் வருஷம் நவம்பர் மாதம்—வேளாளர் ஜாதியில் பிறந்தவர் ராதா. அவரது சொந்தஊர்

(சென்னை)மைலாப்பூர். பெற்றோருக்கு ஒரே பிள்ளையான ராதாவுக்கு 1933-ம் வருஷத்தில் திருமணம் நடந்தேறியது, சதி லீலாவதி படத்தில் அவருடன் கதாநாயகியாக நடித்த எம். ஆர். ஞானம்பாள் அவருடைய இல்லத்திலும் நாயகியாகி விட்டார்! சதி லீலாவதிக்கு முன்னர் ஞானம்பாள் லங்கா தகனம் படத்தில் சீதையாக நடித்திருக்கிறார். அவருக்கு நாடக மேடை அனுபவமும் உண்டாம். இவர்களுக்கு மூன்று பையன்களும், இரண்டு பெண்களும் பிறந்துள்ளனர். மூத்த பையனுக்கு தற்போது சுமார் 14 வயதாகிறது.

சுமார் ஐந்தரை அடி உயரமும், சிவந்த மேனியும் உடைய ராதா, மிகுந்த தேசபக்தி உடையவர். காந்தி மஹானைக் கடவுளாய் பூஜிப்பவர். நல்ல ஒழுக்கமும், யாரிடமும் மரியாதையுடன் நடந்து கொள்ளும் குணமும் உடையவர் அவர்.

ராதா சுமாராகப் பாடக்கூடியவர். முன்பெல்லாம் அவரேதான் தம் படங்களில் பாடிவந்தார். சமீப காலமாகத் தான் அவருக்கு குரல் இரவல் வாங்கப்பட்டு வருகிறது.

இப்பொழுது அபூர்வ சகோதரர்கள் படம் தெலுங்கில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. ராதாவுக்கு முன்பே தெலுங்கு பாஷை தெரியுமாதலால் இப்படத்தில் தம் பாகங்கள் சம்பந்தப்பட்ட தெலுங்கு சம்பாஷணைகளை அவரே பேசி வருகிறார். ராதா ஹிந்தி பாஷையையும் இப்போது கற்றுக் கொண்டிருக்கிறார். இனிமேல் தம் படங்களின் ஹிந்திப் பதிப்பிலும் அவரே சம்பாஷணைகளைப் பேசக் கூடும். ராதாவுக்கு மேலும் மேலும் நன்றாக நடித்து அகில இந்தியப் புகழ் பெற வேண்டுமென்பது ஆசை. அதையே அவர் லக்ஷியமாகவும் கொண்டு பாடுபட்டு வருகிறார். அந்த முயற்சியில் அவர் வெற்றிபெற்றால், அது தமிழ் நாட்டுக்கே பெருமையை அளிக்கும்.

'முத்தம்'

[உயரிய காதல் மாதப் பத்திரிகை]

முதல் இதழ் பிரபல எழுத்தாளர்களான 'பி. எஸ். ராமையா' 'ரா. ஆறுமுகம்', 'சுகி', மற்றும் பலருடைய கருத்தோவியங்களுடனும், மூவர்ண ஆர்ட் அட்டையுடனும் பொங்கலன்று வெளிவரும்.

தனி இதழ்—அணா 4

ஏஜண்டுகள் தேவை

"முத்தம்"
நேமத்தான்பட்டி
இராமநாதபுர மாவட்டம்

வாடாமலர்

(ஹாஸ்யத் தமிழ் மாதப் பத்திரிகை)

டிஸம்பர் இதழில்:

வழியும் வாழ்த்தும்
—டாக்டர் மு. வரதராசன்

சினிமா நட்சத்திரங்களின் படங்கள், சங்கீத வித்வான்களின் அபூர்வ கச்சேரித் தோற்றங்கள், ஏராளமான ஹாஸ்யங்கள், சிறு கதைகள், இரு தொடர் கதைகள், மூவர்ண ஹாஸ்ய அட்டை.

அதிர்ஷ்ட நம்பர் பரிசு

ரூபாய் 200

— விவரத்துக்கு —

வாடாமலர்

மாம்பலம் :—: சென்னை—17

நிர்தோஷி

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

பார்க்கலாம் ஸ்ரீதரனை. அப்படி அவன் தவறாது சென்று வந்த சங்கீதக் கச்சேரிகளில் ஒன்றுதான் குமாரி வஸந்தாவினுடையது.

திண்டிவனம் ராமசாமி அய்யர் என்றால் சென்னையில் அநேகமாக எல்லோருக்கும் தெரியும். பிரமுகர்களிடம் 'கலியுக நளன்' என்ற பட்டம் வாங்கியவர் அவர். அவருடைய சமையல் அவ்வளவு பிரசித்தமானது. பணக்கார விடுகளில் ஏதாவது விசேஷம் என்றால் அங்கே ராமசாமி அய்யருடைய சமையலாகத்தான் இருக்கும். அந்தத் தொழிலில் அவருக்கு நல்ல பெயர்; அதோடு நல்ல வருமானமும் கூட.

அவருடைய பெண்தான் வஸந்தா. தாரத்தை இழந்த ராமசாமி அய்யர், விதந்துவான தமது தமக்கையின் சகாயத்துடன் மகளை அருமையாக வளர்த்து வந்தார். வஸந்தா குழந்தைப் பருவத்திலிருந்தே நல்ல சூடிகை. படிப்பில் ரொம்பவும் கெட்டிக்காரி. சங்கீதத்தில் ஞானமிருந்ததற்கு அநுசரணையாக அவளுக்கு இனிமையான சாரீரமும் வாய்த்திருந்தது.

ராமசாமி அய்யர், படிப்புடன் கூட, தம் மகளுக்கு, பிரபல சங்கீத வித்வான் முல்லக்குடி சாமா அய்யரிடம் சங்கீத சிக்ஷையும் சொல்லி வைத்தார். பன்னிரண்டு வயதுக்குள் சங்கீதக் கலையில் நல்ல தேர்ச்சிபெற்றுவிட்டாள் வஸந்தா.

அப்பொழுதுதான் ஒரு நாள் பிரபல எழுத்தாளர் 'பல்லி' அவள் விட்டுக்கு வந்தது. 'பல்லி' தம் மகளுடைய கல்யாணத்திற்கு ராமசாமி அய்யரை சமையலுக்கு அழைக்கவந்தார். வஸந்தாவின் கானத்தைக் கேட்டு மிகவும் ரஸித்தார். ராமசாமி அய்யரிடம் அவளுடைய வித்வத் திறமை உலகத்துக்குத் தெரியவேண்டுமென உபதேசித்தார்.

கட்டுப்பட்டியான ராமசாமி அய்யர் தம் மகள மேடை ஏறிக் கச்சேரி செய்யும் யோசனையை முதலில் அவ்வளவாக விரும்பவில்லையென்றாலும், நாளடைவில் 'பல்லி'யின் இடைவிடாத தூண்டுதலினாலும் மகளின் வேண்டுகோளினாலும் சம்மதித்தார். அது முதல் வஸந்தாவின் சங்கீதக் கச்சேரிகள் சென்னையில் பல சபாக்களில் ஏற்பாடாயின.

இதற்கு மத்தியில் வஸந்தாவுக்கு பத்து வயதாக இருந்த போது ஒரு சம்பவம் நடந்தது. அதை அவள் மறைத்ததினால்தான், வஸந்தாவின் மணவாழ்க்கையிலே துன்பம் நேர்ந்தது. ராமசாமி அய்யருக்கு மிகவும் வேண்டியவரான டைரெக்டர் ரஸமணி மிகவும் கட்டாயப்படுத்தி தாம் தயாரித்த ஒரு படத்தில், பால கதாநாயகி வேஷத்தில் வஸந்தாவை நடிக்கச் செய்துவிட்டார்.

வஸந்தாவின் கச்சேரிகளிக்குத் தொடர்ந்து சென்று வந்த ஸ்ரீதரன் அவள் வித்வத்திலே மயங்கினான். அவள் அழகிய உருவத்தைக் கண்டு தன் உள்ளத்தைப் பறி கொடுத்தான். வஸந்தா மட்டும் என்ன, விதிவிலக்கா? தன் கச்சேரிகளுக்கு முதல் வரிசையில் தவறாது ஆஜராகும் அந்த அழகிய வாலிப ரஸிகனை மறக்க முடியாது அவளும் தவித்தாள்.

வீணைக் கதையை வளர்ப்பானேன்? இருவர் உள்ளமும் ஒன்று பட்டது. மனமொத்த காதலர்களானார்கள். அவன் அவளிடம் தன் உள்ளத்தையே திறந்து காட்டினான். ஆனால், அவள் செய்த பெரிய தவறு, தான் சினிமாவில் நடித்திருப்பதை, அவனிடமிருந்து மறைத்ததுதான். சினிமாவை விஷமென வெறுக்கும் ஸ்ரீதரனிடம் தான் சினிமாவில் நடித்திருக்கும் அந்த விஷயத்தைக் கூறினால் எங்கே ஒருக்கால் தங்கள் காதல் வாழ்வு பங்கப்பட்டு விடுமோ என அஞ்சினாள். ஆனால் அந்த ஒரு தவறுக்காகத் தன் மண வாழ்க்கை துன்பமாக முடியுமென அவள் அப்பொழுது எதிர்பார்க்கவில்லை.

ஸ்ரீதரன், தான் வஸந்தாவை மணக்க விரும்புவதாக தன் பெற்றோர்களுக்குத் தெரிவித்தான். அவன் பெற்றோர்கள் கூறிய ஆட்சேபனைகளை யெல்லாம் அவன் லக்ஷியம் செய்ய வில்லை. கடைசியாக தங்கள் செல்வமகனின் மனம் கோண மனமில்லாததால் அவர்களும் சம்மதித்தனர்.

கல்யாணம் வெகு ஆடம்பரமாக திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள, ஸ்ரீதரனின் கிராமத்தில் நடைபெற்றது. காதலர்கள் தங்கள் எதிர்கால வாழ்வை எண்ணி என்னென்னவோ கோட்டைகள் கட்டி மகிழ்ந்தனர். பேதைகள், எண்ணியபடி எதுவும் நடக்காது என்பதை மறந்துவிட்டார்கள்!

வஸந்தாவைத் தன் பெற்றோர்களிடமே விட்டுவிட்டு ஸ்ரீதரன் சென்னைக்கு வந்தான். சீக்கிரமே சென்னையில் குடித்தனம் போட வேண்டிய ஏற்பாடுகளும் நடைபெற்றுவந்தன. அப்பொழுதுதான்

அந்தப் பேரிடி போன்ற ஸ்ரீதரனின் கடிதம் வந்தது.

ஸ்ரீதரன், சென்னைக்கு வந்ததும், தன் கல்யாணத்தை ஒட்டி தன் நண்பர்களுக்கு ஒரு விருந்தளித்தான். நண்பர்கள் அனைவரும் தங்கள் வாழ்த்துக்களையும் பரிசுகளையும் அளித்தார்கள். நண்பன் ராம்கோபால் மட்டும் ஸ்ரீதரனின் உள்ளத்தில் விஷவித்தை ஊன்றி விட்டுப் போனான்.

''ஸ்ரீதர், சினிமாவையே வெறுக்கும் நீ, கடைசியில் ஒரு சினிமாக்காரியையே மணந்து கொள்ளும்படி ஆகிவிட்டது பார்த்தாயா?'' ராம்கோபாலின் இந்தக் கிண்டல் வார்த்தைகள் ஸ்ரீதரனை உலுக்கி விட்டன. ராம்கோபால் மூலம் வஸந்தா படத்தில் நடித்திருப்பதை விபரமாக அறிந்து கொண்டான்.

களங்கமற்ற அவன் உள்ளம் கலங்கித் தவித்தது. 'உன் மனைவி சினிமாக்காரி' என்று அவன் மனச் சாட்சி இடித்துக் கூறியது. வஸந்தா ஏன் தன்னிடம் அந்த விஷயத்தை ஒளிக்க வேண்டும்! குற்றமுள்ள உள்ளம்! அதுதான் குறையை மறைத்து விட்டாள். ஸ்ரீதரன் உள்ளத்திலிருந்த சாந்தி மறைந்தது. பித்துப் பிடித்தவன் போல் ஆகி விட்டான்.

பல நாள் புண்பட்ட உள்ளத்துடன் தவித்தான். சாந்தியை மீண்டும்பெறஎண்ணினான். ''வஸந்தா ஒரு சினிமாக்காரி. வஞ்சகி, அவளை உடனே அவள் தந்தையிடம் அனுப்பிவிடவும். உங்கள் மகன் உங்களுக்கு வேண்டுமானால் இது தான் முடிவு'' என்று தன் தந்தைக்கு கடிதம் எழுதி அனுப்பினான். அவனுக்கு தற்காலிக மனச்சாந்தி கிடைத்தது.

மகன்மீது வாஞ்சையுடைய பெற்றோர்கள், தங்கள் மகன் என்றாவது ஒரு நாள் புத்தி திருந்தி திரும்ப அழைத்துக் கொள்வான் என்று, வஸந்தாவுக்கு ஆறுதல் கூறி, வஸந்தாவை அழைத்துப் போய் சென்னையில் அவள் தந்தையிடமே விட்டு விட்டு வந்தனர்.

பாவம்! ராமசாமி அய்யர் ஸ்ரீதரனைக் காண நடையாக நடந்தார். ஸ்ரீதரனே அவரைப் பார்க்காமலே விரட்டி விட்டான். மனம் ஒடிந்து போனார் ராமசாமி அய்யர். சென்னையை விட்டு தம் சொந்த ஊரான திண்டிவனத்திற்கே போய்த் தங்கினார்.

வஸந்தாவுக்கோ உலகமே சூன்யமாகத் தோன்றியது. ஸ்ரீதரன் திடீரென்று மனம் மாறக் காரணம், தான் படத்தில் நடித்திருப்பதை அவன் அறிந்து விட்டதுதான் என்பதைத் தெரிந்து கொண்டாள். தான் அவனிடமிருந்து அந்த விஷயத்தை மறைத்தது தவறுதான் என்றாள், ஆனால் அறியாப் பருவத்தில் சினிமாவில் நடித்த தான் 'நிர்தோஷி' என்று உருக்கமாக ஸ்ரீதரனுக்குப் பல கடிதங்கள் எழுதினாள். ஆனால் அவள் எழுதிய கடிதங்களெல்லாம் படிக்கப்படாமலே திரும்பியது. இவையெல்லாம் அறியாத விஷயம், பாவம்! அவளுக்கு எப்படித் தெரியும்?

தம் மகனை வாழாவெட்டி என்று ஊரார் கூறுவதைக் கேட்க மனமில்லாதவர் போல ராமசாமி அய்யரும் சீக்கிரமே கண்ணை மூடி விட்டார். இரண்டு வருஷங்களாகியும் தன் கணவன் மனம்மாறாதது கண்டு, வஸந்தா தன் உள்ளத்தை வைரமாக்கிக் கொண்டாள். சினிமாத் தொழிலில் இருந்து கொண்டே ஒருத்தி நிர்தோஷியாக இருக்க முடியும் என்பதை, என்றாவது ஒரு நாள் தன் கணவனுக்கு நிரூபிக்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டாள். சென்னைக்குப் புறப்பட்டுப் போனாள்.

சினிமா உலகில் 'நிர்மலா தேவி' என்ற புதிய நட்சத்திரம் தோன்றினாள். பல படங்களில் நடிக்கிறாள். முன்னணி நட்சத்திரமாகப் பிரகாசிக்கிறாள். ஆனால் வஸந்தாதான், மிஸ். நிர்மலா தேவி என்ற விஷயம் பலருக்குத் தெரியாது!

• • •

''சேகர் என் கதை இது தான். சினிமாக்காரி என்றால் அவள் நடத்தை கெட்டவள், என்று உலகம் நினைக்கிறது. உலகம் நினைப்பதிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. சினிமாவில் சேரும் எந்தப்பெண்மணியும் இடறி விழுவதற்கு நிறைய, கட்டாயமான சந்தர்ப்பங்கள் ஏற்படும். அவைகளில் எல்லாம் தப்பவேண்டும். அது அவ்வளவு எளிதான காரியமல்ல. நான் நடிகையான நோக்கம், சினிமாக்காரிகளும் தங்கள் மனதைக் கட்டுப்படுத்தினால், தங்கள் கற்புக் கெடாமல் இருக்க முடியும், என்பதைக் காட்டத்தான்.

''என் வாழ்க்கையின லட்சியம் ஒன்றே ஒன்றுதான். என்றாவது ஒரு நாள் என் கணவனைச் சந்தித்து, சினிமாத் தொழிலில் இருந்தாலும், நான் 'நிர்தோஷி' என்பதை அவருக்கு நிரூபித்து விட்டு, இந்த உலகிலிருந்து விடைபெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான் அது.''

''நிர்மலா, உன் கணவன் உன்னை இன்னுமா நினைவு வைத்துக்கொண்டிருப்பானென்று நீ கனவு காண்கிறாய்?''

''அவர் என்னை மறந்து போயிருக்கலாம்! ஆனால் நான் அவரை மறக்க முடியாது! நான் அவரை வலுவில் தேடிப்போவேன்.''

"நீ வனுவில் போய், ஆயிரம்தான் சொன்னாலும், ஒரு சினிமாக்காரியை 'நிர்தோஷி' என்று ஒத்துக்கொள்ள அவன் மடையனாகத்தான் இருக்க வேண்டும்."

மேலே படுத்திருந்த ஸ்ரீதரனுக்கு எல்லாம் விளங்கி, வெகு நேரமாகி விட்டது. கீழே அந்த ஆடவனுக்குச் சரியான பதில் கூறிக்கொண்டிருக்கும் அந்த யுவதி தன் மனைவி—தான் காதலித்து கைவிட்ட அதே வஸந்தாதான். "இரக்கமற்றவனே இன்னும் தாமதிக்கிறாயே, மடையா" என்று இடித்துக் காட்டியது அவன் உள்ளம்.

"சேகர், நிறுத்துங்கள், உங்கள் வசை புராணத்தை. என்னை எவ்வளவு வேண்டுமானாலும் தூஷியுங்கள். ஆனால், அவரை மட்டும் என் காது கேட்க மரியாதைக் குறைவாகப் பேசவேண்டாம்."

"நிர்மலா, இதெல்லாம் கவைக்கு உதவாத பேச்சு. நீ உன் கணவனை சந்தித்து, நீ 'நிர்தோஷி' என்று அவனுக்கு நிரூபிப்பதனால் நீ அடையப் போகும் பயன் என்ன?"

"சேகர். எதற்கு இந்த வீண் பேச்சு? மேற்கொண்டு பேசாமல் நிறுத்தி விடுவதே நல்லது."

"நானும் பேசிக் காலங்கடத்த விரும்பவில்லை. ஏன் உன் பருவ காலத்தைப் பாழடிக்கிறாய்? இதோ பார் நிர்மலா, நான் இன்று ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். எப்படியும் என்னை, நீ இன்றே இப்பொழுதே அங்கீகரித்துத்தான் தீர வேண்டும்."

"இதுவரை மரியாதைக்குக் கட்டுப்பட்டுத்தான் நான் பொறுத்திருந்தேன். மேலும் பேச்சு வளர்ந்தால், ஏதாவது விபரீதமாக நடக்கலாம்."

"என்ன நடந்து விடும்; அதையும் தான் பார்க்கிறேனே" என்று கூறி, சேகர் நிர்மலாவின்கிட்டே நெருங்கி, அவள் கையைப் பிடித்தான்.

அதேசமயம் ஸ்ரீதரன் உணர்ச்சியினால் உந்தப்பட்டவனாக, மேல் 'பர்த்'திலிருந்து கீழே குதித்தான். சேகரும் நிர்மலாவும் திடுக்கிட்டுப் போனார்கள். சேகரின் பிரமை நீங்கும் முன், ஸ்ரீதரன் அவன் சட்டையைப் பற்றிக் கொண்டு, "இது தான் நடக்கும்!" என்று அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

சேகர் அந்த அதிர்ச்சியில் ஒன்றும் புரியாமல் திகைத்தான். "ஒரு மங்கையிடம் முறை தவறி நடந்து கொள்ள நினைக்கும் நீ மனிதன்தானா?" என்று கேட்டான் ஸ்ரீதரன்.

இதற்குள் சமாளித்துக் கொண்ட சேகர், "எங்கள் விஷயத்தில் தலையிட நீ யாரடா?" என்று கேட்டான்.

"நான் யாரா? நான்தான் கேட்கவேண்டியவன். உரிமை யுள்ளவன்தான் கேட்கிறேன். நான் அவள் கணவன்" என்று கூறி, சேகரைப் பிடித்திருந்த பிடியைத் தளர்த்தினான்.

ஸ்ரீதரன் திரும்பி, நிர்மலா தேவியின் கரங்களைப் பற்றிக்கொண்டு, "வஸந்தா, நீ நிர்தோஷி, என்னை மன்னிப்பாயா?" என்றான். அவன் குரல் தழதழத்தது.

நிர்மலா அப்பொழுதுதான் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். "ஆ! நீங்களா!" என்று கூறியவள் உணர்ச்சிப் பெருக்கால் மூர்ச்சையாகி அவன் மீது அப்படியே சாய்ந்து விட்டாள்.

தமிழ்க் கலை தசாவதான மஹாநாடு

இம்மாதம் 11ம் தேதி சென்னை புரசைவாக்கத்தில் தமிழ்க்கலை தசாவதான மஹாநாடு நடைபெற்றது. அதில் திருவாவடுதுறை ஆதீன சைவப் பிரசாரகர் தசாவதானம் ஸ்ரீ. பி. ஆறுமுகம் பிள்ளை, தசாவதானம் நடத்திக் காட்டினார். இந்த மஹாநாட்டுக்கு சென்னை மாஜி பிரதமர் ஸ்ரீ. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் தலைமை வகித்தார்.

ஸ்டுடியோவில் தீ விபத்து

பம்பாய் அந்தேரியிலுள்ள ஒரு ஸ்டுடியோவில் இம்மாதம் 3-ம் தேதி ஒரு தீ விபத்து ஏற்பட்டது. விபத்து நேரிட்ட போது ஒரு படத்தின் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்ததாம். காட்சி ஜோடனைகளுக்கான திரை ஒன்று தீப்பற்றிக் கொண்டதுதான் விபத்துக்குக் காரணமாம். நஷ்டம் சுமார் இரண்டரை லக்ஷம் ரூபாய்களுக்கு இருக்குமாம்.

செய்திப் படக் காட்சி

இந்திய சர்க்காரின் செய்திப்பட ஸ்தாபனத்தார் தாங்கள் தயாரித்துள்ள சில செய்திப் படங்களை, இம்மாதம் 12ம் தேதி, பத்திரிகைக்காரர்களுக்கு சித்ரா டாக்கீஸில் திரையிட்டுக் காட்டினார்கள்.

திருமணம்

நமது சேந்தமங்கலம் ஏஜண்டு சிரஞ்சீவி பாலசுப்ரமண்யம், இம்மாதம் 15ம் தேதி, சௌபாக்கியவதி நீலவேணியைத் தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார் தமது கிராமத்தில்.

குண்டூசி டைரி

நவம்பர், 1949

தேதி

1. திருவள்ளூரில் ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ் என்ற புதிய தியேட்டர் ஆரம்பமாயிற்று.

2. நாடகாசிரியர் ஏ. வரதராஜனின் "ஜீவன விநோதம்" நாடகம் வி. பி. ஹாலில் நடைபெற்றது.

5. பரணியின் தமிழாக்கப்பட்ட "லைலா மஜ்னு" சென்னை பாரகனிலும், வெளியூர்களிலும் திரையிடப்பட்டது.

6. தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனக் கட்டிட நிதிக்காக எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் உதவிக் கச்சேரி ராஜாஜி ஹாலில் நடந்தது.

7. "ரத்னகுமார்" தனிக்கைக் காட்சி நடைபெற்றது.

தென்னிந்திய பில்ம் சேம்பரின் விசேஷக் கூட்டமொன்றுக்கு, பத்திரிகாசிரியர்களை அதன் தலைவர் அழைத்திருந்தார்.

12. ஸ்ரீ மயிலை நாடக சபையினரால், ரஸிக ரஞ்சனிசபா ஹாலில், "இதுதானா உலகம்" என்ற நாடகம் நடத்தப்பட்டது.

13. அடிக்கட்டுப்பாடு சம்பந்தமாக விவாதிக்க, ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கக் கூட்டம் கூடிற்று.

15. திருச்சியில், திருச்சி சினிமாப் பட விநியோகஸ்தர்கள் சங்கத்தார் டைரெக்டர் கே. சுப்ரமண்யத்திற்கு ஒரு விருந்தளித்தனர்.

20. ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தின் விசேஷக் கூட்டம் ஒன்று கூடிற்று.

பிரதமர் கனம் குமாரசாமி ராஜா அவர்கள் முன்னிலையில் "ஸ்படிக மலர்", "வாலிபத்தின் திருவிழா" ஆகிய இரண்டு ரஷ்யப் படங்களின் பத்திரிகைக் காட்சி சென்னை சித்ரா டாக்கீஸில் நடைபெற்றது.

23. தஞ்சாவூரில் "யாகப்பா டாக்கீஸ்" என்ற புதிய சினிமாக் கொட்டகையை எஸ். எஸ். வாஸன் ஆரம்பித்து வைத்தார்.

29. கல்கத்தாவில் என். ஸி. வஸந்தகோகிலத்தின் கச்சேரி, கவர்னர் ஜெனரல் ராஜாஜியின் முன்னிலையில் நடந்தது.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 25, Godown Street, Madras-1. Telephone 4316.


SUCCESSFUL BUSINESS
CREATIVE DESIGNS
NEAT BLOCKS
FINE PRINTING
From a Visiting Card to a Souvenir
★
RING 4037 OR WRITE TO:
COMMERCIAL PRINTING
& PUBLISHING HOUSE.,
(PRINTERS & BLOCKMAKERS)
46, ARMENIAN ST... MADRAS

இப்பொழுது நடைபெறுகிறது

P.U.சின்னப்பா * P.பானுமதி
N.S.கிருஷ்ணன் * T.A.மதுரம்

முருகன் டாக்கீஸாரின்

ரத்னகுமார்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
பாடல்: சிவன் சங்கீதம் G.ராமநாதன்
ஸ்டுடியோ: நியூடோன்

டிஸ்டிரிபியூடர்ஸ் முருகன் டாக்கி பிலிம் கம்பெனி மதுரை. பெங்களூர் சிடி பெஜவாடா